அதிரடி அரசியல் நகர்வுகளே இன்றைய அரசுக்குத் தேவை பக். 12-13

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

33°c - 26°c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 110 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 02, செவ்வாய்க்கிழமை 15.03.2016

## இடியுடன் கூடிய மழை பெய்யும்

கொழும்பு, மார்ச் 15
நாட்டின் பல பிரதேசங்களில் மாலைவேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியங்கள் தென்படுவதாகக் காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.
மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் மாலை நான்கு மணிக்குப் பின், இடியுடன் கூடிய மழை பெய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.
காலை வேளைகளில் நாட்டின் ஒருசில பகுதிகளில் பக். 25

# சகல மின் நிலையங்களும் இராணுவக் கட்டுப்பாட்டில்

## ஜனாதிபதி மைத்திரிபால நேற்று அதிரடி உத்தரவு

கொழும்பு, மார்ச் 15
நாடு முழுவதிலும் உள்ள சகல மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் உப மின் நிலையங்களில் இராணுவத்தினரை நிறுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று உத்தரவிட்டுள்ளார்.
மின் நிலையங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு இராணுவத்தினரிடம் கையளிக்கப்படவுள்ளதாக,



அவர் அறிவித்துள்ளார்.
கடந்த ஆறு மாதங்களில் மூன்றாவது தடவையாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதிலும் ஏற்பட்ட திடீர் மின் தடையை அடுத்து, ஜனாதிபதியினால் இந்த அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணி யளவில் நாடு பக். 23

## இனிமேல் மின்வெட்டு ஏற்படாமல் பாருங்கள்

### மின்சக்தி அமைச்சருக்கு பிரதமர் ரணில் பணிப்பு

கொழும்பு, மார்ச் 15
நாடு முழுவதும் மின்விநியோகத்தில் தடை ஏற்படாமலிருக்கத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் மற்றும் இலங்கை மின்சார சபை அதிகாரிகளுக்குப் எபிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று உத்தரவிட்டுள்ளார்.
அத்துடன், தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மின்தடை குறித்து ஆராய நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையை விரைவில் கையளிக்குமாறும் அவர் பணித்துள்ளார்.
அண்மைக்காலமாக ஏற்பட்டு வரும் மின்தடை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், மின்சக்தி எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பிரதியமைச்சர் அஜித் பி பெரேரா, இலங்கை மின்சார சபை அதிகாரிகள் ஆகியோருக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று பக். 25

முச்சந்தி முரளி



கொள்ளைக்காரர் பாடு படு வேட்டை தான் பாருங்கோ...

## இன்னும் சில நாள்கள் மின்தடை தொடரும்

கொழும்பு, மார்ச் 15
எதிர்வரும் சில தினங்களுக்கு நாட்டின் பல பகுதிகளிலும் இடைக்கிடையே மின்சாரத் தடை ஏற்படக் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் எதிர்வரும் 3 அல்லது 4 நாள்களுக்கு மின்சாரத் தடை ஏற்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.
நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மின் தடையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை வழமைக்குக் கொண்டு வர குறைந்தபட்சம் மூன்று நாள்கள் பக். 23

## நல்லிணக்கப் பொறிமுறைக்கு இணையம் மூலம் ஆலோசனை

### பிரதமர் நியமித்த செயலணி நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 15
நல்லிணக்கப் பொறிமுறையை அமைப்பது தொடர்பில், பொதுமக்கள், வல்லுநர்கள் மற்றும் பங்குதாரர்கள் தமது ஆலோசனைகளை இணையத்தளமூடாக, நேரடியாகச் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இவ்வாறு பிரதமரால் நியமனம் செய்யப்பட்ட நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான ஆலோசனைச் செயலணி அறிவித்துள்ளது.
இதன் பிரகாரம், இலங்கை அரசி பக். 25

## வெள்ளைக்கொடி விவகாரத்துக்கு நீதி கிட்டும் சந்தர்ப்பம் திரள்கிறது

### பொன்சேகாவின் உரை குறித்து சந்திரநேரு சந்திரகாந்தன் கருத்து

கொழும்பு, மார்ச் 15
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உயிரிழப்புத் தொடர்பான, அமைச்சர் சரத் பொன்சேகாவின் பேச்சினூடாகப் பல மர்ம முடிச்சுகள் அவிழலாம். என்னுடன் பேசப்பட்டு, நடத்தப்பட்ட – நான் நேரடியாகத்



தொடர்புபட்ட வெள்ளைக் கொடி விவகாரத்துக்கு நீதி கிடைக்கப் போகின்ற சந்தர்ப்பமாகக்கூட இதனைப் பார்க்க முடியும்.
இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரும் பக். 23

## கத்திமுனையில் மல்லாகத்தில் இரவு 8 லட்சத்து 50 ஆயிரம் கொள்ளை

யாழ்ப்பாணம், மார்ச் 15
மல்லாகம் பிரதேசத்தில் 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கத்தி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. எட்டுப் பேர் கொண்ட குழுவினர் முகத்தை மூடிக் கட்டியவாறு இந்தக் கொள்ளையை நடத்தியுள்ளனர்.



மல்லாகம் காங்கேயன் பகுதியிலுள்ள வீட்டில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 12.30 மணிக்கு எட்டுப் பேர் கொண்ட குழுவால் பதினாறரைப் பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கூறினர் தெல்லிப்பழைப் பொலிஸார்.
கூரை வழியாக உள்நுழைந்த திருடர்கள் குழந்தைகளின் கழுத்தில் கத்தியை வைத்து வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்திக் கொள்ளையடித்துள்ளனர். அத்துடன் வீட்டிலிருந்த அனைவரையும் வாள் முனையில் வீட்டின் நடுவில் அமர வைத்துள்ளனர். சுமார் ஒரு மணி நேரம் வீட்டைச் சல்லடையிட்டுள்ளனர்.

(விரிவான தகவல் 2 ஆம் பக்கத்தில்)

## கிடைத்தது பிணை யோசிதவுக்கு 44 நாள் சிறைவாசத்தின் பின்னர்

கொழும்பு, மார்ச் 15
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோசித ராஜபக்ச, 44 நாள்கள் சிறைவாசத்தின் பின்னர், நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
எனினும் வெளிநாடு செல்வதற்கான தடை உத்தரவுடனேயே, யோசித ராஜபக்ச பக். 23



## தீர்ப்பை எதிர்கொள்ளப் பயந்து எதிரி தற்கொலைக்கு முயற்சி

### சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டில்

யாழ்ப்பாணம், மார்ச் 15
பதின்மவயதுச் சிறுமி வன்புணர்வு செய்யப்பட்ட வழக்கு ஒன்றின் தீர்ப்பு யாழ். மேல்நீதிமன்றில் நேற்று வழங்கப்படவிருந்த நிலையில், குறித்த வழக்கின் எதிரி நேற்று உயிரை மாய்க்கும் முயற்சியில் ஈடுபட்டு நஞ்சருந்தியுள்ளார்.
இதனால் குறித்த எதிரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, பக். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"வீட்டிலிருந்த அனைவரும் வாள்முனையில் வீட்டின் நடுவில் கொள்ளையர்கள் அச்சுறுத்தி அமர வைத்துள்ளனர் அதன் பின்னர் வீடு முழுவதும் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தத் தொடங்கியுள்ளனர். சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக வீட்டிலிருந்தோர் கொள்ளையர்களால் வாள்முனையில் வைக்கப் பட்டிருந்தனர்."

# கத்திமுனையில் மல்லாகத்தில் 8 லட்சத்து 50 ஆயிரம் கொள்ளை

## குடாநாட்டில் குற்றங்களை கட்டுப்படுத்துமாறு அமைச்சர் அறிவுறுத்திச் சென்ற சில மணி நேரத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் - ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்கா, பொலிஸாருக்கு அறிவுறுத்திச் சென்ற 12 மணி நேரத்துக்குள் மல்லாகம் பிரதேசத்தில் 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கத்தி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. எட்டுபேர் கொண்ட குழுவினர் முகத்தை மூடிக் கட்டியவாறு இந்தக் கொள்ளையை நடத்தியுள்ளனர்.

மல்லாகம் காங்கேயன் பகுதியிலுள்ள வீட்டில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 12.30 மணிக்கு எட்டு பேர் கொண்ட குழுவால் பதினாறரைப் பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது - என்று கூறினர் தெல்லிப்பழை பொலிஸார்.



### கூரையால் நுழைந்தனர்

யாழ் - காங்கேசன்துறை பிரதான வீதியில், மல்லாகம், காங்கேயன் பகுதியில் உள்ள வீடொன்றிலேயே இந்தக் கொள்ளை நடந்துள்ளது. அந்த வீடு நாற்சார் முறைப்படி அமைந்துள்ளது. அதைப் பயன்படுத்தி கூரை வழியாக வீட்டுக்குள் இறங்கியுள்ளனர் கொள்ளையர்கள். பின்னர் வீட்டின் கதவை திறந்து, வீட்டின் வெளியே நின்றவர்களும் உள்ளே அழைக்கப்பட்டுள்ளனர்.

அந்தச் சமயத்தில் சத்தம் கேட்டு வீட்டில் இருந்தவர்கள் நித்திரையில் இருந்து விழித்துக் கொண்டு பெரும் சத்தமிட்டுள்ளனர். உடனே கொள்ளையர்கள், வீட்டில் இருந்த பிள்ளைகளின் கழுத்தில் கத்தியை வைத்து, சத்தம் போடவேண்டாம் என்று மிரட்டியுள்ளனர். மீறிச் சத்தம் போட்டால் கொலை செய்து விடுவோம் என்று அச்சுறுத்தி வீட்டில் இருந்தவர்களது சத்தத்தை அடக்கியுள்ளனர்.

### வாள் முனையில் அச்சுறுத்தல்

முதலில் வீட்டில் அணிந்திருந்தவர்களின் நகைகளைக் கழற்றி எடுத்த கொள்ளையர்கள், பின்பு வீட்டில் இருந்தோர் அனைவரையும் வாள்முனையில் வீட்டின் நடுவில் அச்சுறுத்தி அமர வைத்துள்ளனர்.

பின்னர் வீடு முழுவதும் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தத் தொடங்கியுள்ளனர். சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக வீட்டில் இருந்தோர் கொள்ளையர்களால் வாள்முனையில் வைக்கப்பட்டிருந்தனர். வீட்டிலிருந்த அலுமாரிகள் மற்றும் ஏனைய இடங்களும் கொள்ளையர்களால் சல்லடையிடப்பட்டன. இறுதியில் வீட்டிலிருந்தவர்களின் கைத்தொலைபேசியையும் பறித்துக் கொண்டு பின் வாசல் வழியாகத் தப்பிச் சென்றுள்ளனர்.

### மின் தடை காரணமா?

நாடு முழுவதிலுமான மின் தடை நேற்று முன்தினம் ஏற்பட்டிருந்தது. மல்லாகம் பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணி வரை மின் தடைப்பட்டிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தைக் கொள்ளையர்கள் பயன்படுத்திக் கொண்டுள்ளனரோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. வீட்டின் வெளியே நாய் குரைக்கின்ற சத்தம் கேட்டதாகவும் தாம் அதனை அந்த நேரத்தில் பொருட்படுத்தவில்லை என்றும் வீட்டில் இருந்தவர்கள் கூறுகின்றனர். சில வேளை கொள்ளையர்கள் முன்னரே வந்திருக்கக் கூடும் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

கொள்ளையர்கள் சுமார் 8 பேர் வரையிலேயே இருந்துள்ளனர். வீட்டின் வெளியேயும் கொள்ளையர்கள் நின்றிருந்தனரோ தெரியாது என்று கூறுகின்றனர் வீட்டிலிருந்தோர். வந்தவர்களில் 4 பேர் 25 வயதுக்குக் குறைவான தோற்றத்தை உடையவர்கள். முகத்தை அடையாளம் காண முடியாதவாறு கறுப்புத் துணியினால் மூடிக் கட்டியிருந்தனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

### தீவிர விசாரணை

வீட்டின் உரிமையாளர், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலையே வீட்டிலிருந்து கொழும்புக்குச் சென்றுள்ளார். இந்தநிலையில் குறித்த வீட்டில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அதையடுத்து அவர்கள் அங்கு வந்து விசாரணைகளை ஆரம்பித்தனர்.

தடயவியல் நிபுணர்களின் சோதனையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் மோப்ப நாயும் கொண்டு வரப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது. நேற்று மாலை வரையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை.

இதேவேளை, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த சட்டம் ஒழுங்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சாகல ரட்ணாயக்கா, குடாநாட்டில் நடக்கும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துமாறு சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியிருந்தார். அவர் அறிவுறுத்திய 12 மணி நேரத்தினுள் இந்தக் கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது.

(ற-5,101,107)

## ஹெரோயினை விழுங்கிக் கடத்திய பாகிஸ்தான் பெண் நேற்றுக் கைது

கொழும்பு, மார்ச் 15

ஹெரோயின் போதைப்பொருளைச் சிறிய வில்லைகளாக மாற்றி விழுங்கிய நிலையில் நாட்டுக்குள் கொண்டு வந்த பாகிஸ்தான் நாட்டு பெண் கைது செய் யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தில் வைத்து குறித்தப் பெண் ஞாயிற்றுக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டதாக விமான நிலைய பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினர் நேற்றுத்திங்கட்கிழமை தெரிவித்தனர். குறித்த பெண்ணை நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர், அவரின் வயிற்றிலிருந்து 46 ஹெரோயின் வில்லைகள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன், குறித்த பெண்ணின் உடம்பில் ஹெரோயின் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

(இ)

## காற்று வாங்கத் திறந்த கதவால் பறிபோனது 6 பவுண் நகைகள்

### மருதனார் மடத்தில் சம்பவம்

புழுக்கம் காரணமாக காற்று வாங்குவதற்கு வீட்டுக் கதவைத் திறந்து வைத்திருந்தவர் 6 பவுண் நகை மற்றும் உடைமைகளைப் பறிகொடுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மருதனார் மடம் பகுதியில் நடந்துள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மின் தடை ஏற்பட்டிருந்தது. வெப்பம் அதிகமாக இருந்ததால் வீட்டுக் கதவைத் திறந்து வைத்துவிட்டு இருந்துள்ளனர். பின்னர் அவர்கள் அசதியால் அப்படியே தூங்கி விட்டனர்.

அதைப் பயன்படுத்திக் கொண்ட திருடர்கள் வீட்டுக்குள் புகுந்து 6 பவுண் தாலிக்கொடி மற்றும் உடுப்புக்கள் உள்ளிட்ட உடைமைகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ற-ஜ-5-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்கள் குறித்துத் தகவல்கள் கிடைத்த உடனேயே நடவடிக்கை

## முறைப்பாட்டுக்காகக் காத்திருக்கவேண்டாமென பொலிஸாரை அறிவுறுத்தினார் நீதிபதி இளஞ்செழியன்

யாழ்ப்பாணம், மார்ச் 15

குற்றச்செயல்கள் இடம்பெற்று பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு கிடைத்தால்தான் விசாரணை நடவடிக்கை என்று இருக்காது, நாளாந்தம் பத்திரிகைகளில் குற்றச் செயல்கள் பற்றிய செய்திகள் வெளிவந்தவுடன், அது குறித்து முற்பகல் 10 மணிக்கு முன்னரே உரிய விசாரணை நடவடிக்கைகளை பொலிஸார் ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறு பொலிஸாருக்கு நேற்று அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன்.

வழக்கு ஒன்று தொடர்பில் நேற்றுப் பொலிஸார் மேல்நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தபோதே நீதிபதி இவ்வாறு அறுவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதியில் நேற்றுமுன்தினம் பட்டப்பகலில் நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கேள்வியெழுப்பிய நீதிபதி, அதனுடன் தொடர்புபட்ட சகலரையும் கைது செய்யுமாறு உத்தரவிட்டதுடன், அவர்கள் பயன்படுத்திய சகல மோட்டார் சைக்கிள்களையும் பறிமுதல் செய்து நீதிமன்றில் பாரப்படுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பின்வருமாறு பொலிஸாரைப் பணித்துள்ளார் நீதிபதி.

வாள்வெட்டுக்குழுக்கள், ரவுடிகள் அனைவரையும் கைது செய்யுங்கள். அவர்களது மோட்டார் சைக்கிள்களையும் பறிமுதல் செய்யுங்கள். அவர்களது பெற்றோரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வாக்கு மூலம் பதிவு செய்யுங்கள். அக்கறை செலுத்தாத பெற்றோருக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுங்கள் என்றும் நீதிபதி பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

**பெற்றோரையும் பிடியுங்கள்**

சுன்னாகம் மற்றும் மல்லாகம் போன்ற இடங்களில் வாள்வெட்டுத் தீவிரமாகியிருந்த நிலையில், அங்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையால், அத்தகைய ரவுடித் தனங்கள் அங்கு தற்போது ஓரளவு குறைந்துள்ளன. ஆனால் யாழ்.நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் அவை இன்னும் தொடர்ந்துகொண்டிருக்கிறன. அவர்கள் மட்டுமன்றி அவர்களது பெற்றோரையும் பிடியுங்கள். பெற்றோரை மட்டுமன்றி அவர்களது வீட்டிலுள்ள சகலரையும் பிடியுங்கள்.

அவர்களது பெற்றோரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வாக்குமூலம் எடுத்துத் தேவையேற்படின் பெற்றோருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுங்கள்.

**மாணவர்களுக்கும் எச்சரிக்கை**

யாழ். இந்துக் கல்லூரியில் பழைய மாணவர்கள் சிலர் குழப்பம் விளைவிக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. அவர்களைத் தேடிப் பிடியுங்கள். அந்தப் பாடசாலையின் உள்ளே மாணவர்கள் எவருமே அடிதடியிலோ, ரவுடித் தனங்களிலோ ஈடுபடக்கூடாது. யாராவது அதில் ஈடுபட்டால் அவர்களைக் கைது செய்யுங்கள். பல மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பும் அந்தப் பாடசாலையிலிருந்துதான், வாள்வெட்டில் ஈடுபடும் சில ரவுடிகளும் வெளியேறுகிறார்கள். சுன்னாகத்தில் இடம்பெற்ற வாள்வெட்டில் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டவரும் அந்தக் கல்லூரியின் மாணவர்தான். ஒரு சிலர் அவ்வாறு செயற்படுகிறார்கள். அவர்களையும் கண்டறிந்து கைது செய்யுங்கள்.

**இனி பிணை இல்லை**

நீதிமன்றங்களுக்கும் நீதிபதிகளுக்கும் பொலிஸாருக்கும் சவால் விடும் வகையில் செயற்படும் வாள்வெட்டுக் குழுக்கள், ரவுடிகள் அனைவரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துங்கள். அவர்களைப் பிணையில் விடமுடியாதவாறு கடும் நடவடிக்கை எடுக்கப்படும். வாள் வெட்டு, போதைப் பொருள் கடத்தல், ரவுடித்தனம் உள்ளிட்ட எத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களாக இருந்தாலும் எவரும் தப்பிப்போகாதவாறு சகலரையும் கைது செய்யுங்கள்.

**உடன் நடவடிக்கை**

நாளாந்தம் இடம்பெறும் குற்றச் செயல்கள் பற்றி யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் செய்தி வந்தவுடன், முற்பகல் 10 மணிக்கிடையில் அவற்றுக்குரிய நடவடிக்கைகளை ஆரம்பித்துவிடுங்கள். பொலிஸ் நிலையத்துக்கு வந்து முறைப்பாடு செய்தால்தான் நடவடிக்கை என்று பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம். தகவல்கள் கிடைத்ததும் உடனடியாகச் செயற்பட்டு நடவடிக்கை எடுங்கள்.

குடாநாட்டில் 75 வீதம் குற்றச்செயல்கள் கட்டுப்பாட்டுக்கள் வந்துள்ள போதும், 25 வீதமான குற்றச் செயல்கள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றையும் கட்டுப்படுத்த பொலிஸார் விரைந்து செயற்பட வேண்டும்.

**சாரதிகளும் அவதானம்**

வீதிகளில் இடம்பெறும் விபத்துக்களுடன் தொடர்புடைய அரச மற்றும் தனியார் பஸ்களின் சாரதிகளைக் கைது செய்வதோடு, அந்த வாகனங்களையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வையுங்கள். நீதிமன்றில் பாரப்படுத்துங்கள். காயப்பட்ட பின்னர், உயிரிழந்த பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனை செய்வதால் ஒரு பயனுமில்லை. எனவே இவற்றில் சகல பொலிஸாரும் தெளிவாக இருந்து உரிய சட்ட நடவடிக்கையை விரைந்து எடுங்கள். அந்த விடயத்தில் பொலிஸாருக்கு நீதிமன்றமும் துணை நிற்கும்- என்றார். (து-வ-ற-4)


## மேலைப் புலோலி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின் குருபூசைத் தினப் போட்டிகள் -2016

* **காலம்** : 09.04.2016 சனிக்கிழமை, 10.04.2016 ஞாயிற்றுக்கிழமை
* **இடம்** : சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறை.

***போட்டிகள்:**

01. பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, மனனம், பண்ணிசை, பொது அறிவுப் போட்டிகள், இப் போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை பாடசாலை மூலமாகவோ அல்லது எமது சனசமூக நிலையத்திலோ பெற்றுக்கொள்ளலாம்.
பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை 26.03.2016 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகத் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ **செயலாளர், சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறை** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

02. **திறந்த கட்டுரைப் போட்டி**
உதயன் பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவுடன் வட மாகாண ரீதியாக நடத்தப்படும். பாடசாலை மாணவர்கள் உட்பட விரும்பிய அனைத்து வயதினரும் பங்குபற்றலாம்.

* **கட்டுரைப் போட்டிக்கான தலைப்புக்கள்**
1. சைவத் தமிழ் மலர்ச்சிக்கு சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின் பங்கு.
2. அந்நிய நாகரிக மோகமும், தமிழர்தம் பண்பாடும்
3. பெண்களுக்கெதிரான வன்முறைகளும், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும்
4. சமூக நலனுக்குச் சவாலான போதைப்பொருள் பாவனை.
5. பண்டைத் தமிழர் வாழ்வியலின் சிறப்பு

**கட்டுரைப்போட்டிக்கான அறிவுறுத்தல்கள்.**
***A4 தாளில்** 1000 - 1250 சொற்களுக்கு மேற்படாது கட்டுரை அமைதல் வேண்டும்.
*ஆக்கங்கள் அழகான கையெழுத்துப் பிரதியாகவோ அல்லது அச்சுப்பிரதியாகவோ அமைய வேண்டும்.
*போட்டியாளர் பெயர், முகவரி, தொ.பே.இலக்கம் என்பன தெளிவாகத் தனியொரு தாளில் பிரதி செய்யப்பட்டு கட்டுரையுடன் இணைக்கப்படல் வேண்டும்.
*கட்டுரை சொந்த ஆக்கமாக அமைதல் வேண்டும்.
*போட்டியில் நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதும், முடிவானதுமாகும்.
*கட்டுரைகள் யாவும் **31.03.2016** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகத் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ **செயலாளர், சதாவதானி, நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறை** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
*வெற்றியீட்டிய முதல் மூன்று போட்டியாளர்களது சான்றிதழ்களும், பரிசில்களும் சதாவதானியின் 109 ஆவது ஆண்டு விழாவில் 16.04.2016 சனிக்கிழமை வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

***கட்டுரைப் போட்டிக்கான பரிசு விவரம்:**
**முதலாம் பரிசு : ரூபா. 10000.00, இரண்டாம் பரிசு : ரூபா. 8000.00,**
**மூன்றாம் பரிசு : ரூபா 7000.00**

**திரு.பா.கஜேந்திரன்,**
**(தலைவர்)**
**077 576 0666**

**திரு.தே.வாசுதேவன்**
**(செயலாளர்)**
**077 984 5706**

**மேலதிக விவரங்களை தலைவர் அல்லது செயலாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.**

ஊடக அனுசரணை: உதயன்





### குமார் குணரத்னத்துக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 15

முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியற் குழு உறுப்பினர் குமார் குணரத்னத்தை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கேகாலை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தை மீறி, நாட்டில் தங்கியிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இவர், கேகாலை, அருகுருவெல பகுதியில் வைத்து நவம்பர் மாதம் 4 ஆம் திகதியன்று சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இதுவரை தொடர்ச்சியாக 151ஆவது நாளாக இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொழில் சார்ந்த துறைகளில் இளைஞர் ஈடுபட்டால் பொருளாதாரம் மேம்படும்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

மன்னார், மார்ச் 15

எமது இளைஞர் யுவதிகள் அரச வேலைகளை மட்டும் எதிர்பார்த்திருக்காது தமது கற்றல் நடவடிக்கைகளைத் தொழில் சார்ந்த துறைகளில் மேற்கொள்வதன் மூலம் சிறந்த உற்பத்தியாளர்களாகவும், பொருளாதாரத்தில் மேம்பட்ட நிலையை அடையக் கூடிய விதத்திலும் தம்மை மாற்றிக் கொள்ளலாம். – இவ்வாறு வட மாகாண முதலமைச்சர் க.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் உயிலங்குளத்தில் இடம் பெற்ற வட மாகாண விவசாயக் கண்காட்சியில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

ஒவ்வொரு வீடும் இயற்கை உரப்பாவனைக்கு மாறவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். செயற்கை உரங்கள் எமக்கு வேண்டாம் என்று கூறுமளவுக்கு நாம் வளர வேண்டும். திரும்பவும் இயற்கையோடு இணைந்த ஒரு வாழ்க்கைக்கு நாங்கள் எங்களை இட்டுச் செல்ல இதே போன்ற உப உணவு உற்பத்திகளிலும் நாம் கூடிய அளவு கவனம் செலுத்த வேண்டும்.

உழுந்து, பயறு, கௌபி, சோளம், நிலக்கடலை, குரக்கன் போன்ற பயிர்வகைகளிலும், மரக்கறி வகைகளிலும் வெங்காயம், மிளகாய் ஆகியவற்றின் உற்பத்தியிலும் அதிகளவு கவனம் செலுத்த வேண்டும்.

வடபகுதியில் பெயர் பெற்ற பல செய்கையாளர்கள் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் உற்பத்திக்கு இலங்கையின் மத்திய மரக்கறிப் பரிவர்த்தனை நிலையமாக விளங்கக் கூடிய தம்புள்ள சந்தையில் அமோக வரவேற்புக் கிடைக்கின்றது.

ஆனாலும் இவர்களின் உரப்பாவனை மற்றும் கிருமி நாசினிப் பயன்பாடு அளவுக்கு அதிகமாகவே காணப்படுகின்றது. வாழைச் செய்கையில் ஈடுபடுபவர்கள் மிகச் சிறந்த இனங்களைப் பயிரிடுகின்ற போதிலும் அவற்றைப் பிஞ்சாக வெட்டி செயற்கை முறைகளில் பழுக்கச் செய்து விற்பனை செய்கின்றார்கள்.

> “உரப்பாவனை மற்றும் கிருமி நாசினிப் பயன்பாடு அளவுக்கு அதிகமாகவே காணப்படுகின்றது. வாழைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்கள் மிகச் சிறந்த இனங்களைப் பயிரிடுகின்ற போதிலும் அவற்றைப் பிஞ்சாக வெட்டி செயற்கை முறைகளில் பழுக்கச் செய்து விற்பனை செய்கின்றார்கள்.”

இந்தப் பழங்கள் எந்தவித ருசியும் அற்றதாகவுள்ளன. ஏன் பிஞ்சாகவே வெட்டி எடுக்கின்றார்கள் என்பதற்குக் கூறப்படும் காரணம் கள்வர்கள் பயமாம். உண்மையில் எப்படியாவது பணம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணந்தான் இவர்களை இயக்குகின்றது.

எந்த விவசாயப் பொருள்களை எடுத்தாலும் அவை மக்களின் உடல் நலத்துக்கு ஊறு விளைவிப்பனவாக இல்லாமல் ஊட்டச் சத்துக்களை வழங்கக் கூடியனவாக இருக்கத்தக்க வகையில் உற்பத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இயற்கை உரம் பயன்படுத்திச் செய்யப்படும் பயிர்வகைகளுக்கு வெளிநாட்டிலும் அதிக கிராக்கி இருக்கின்றது. வெளிநாட்டில் செயற்கை உரத்தைக் குறைத்து இயற்கை உரத்தையும் செயற்கைக் கிருமிநாசினிகளுக்குப் பதில் இயற்கை உயிரியல் கிருமிநாசினைகளையும் பாவிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

செயற்கை உரங்களும் செயற்கைக் கிருமிநாசினிகளும் பாவிக்காது பயிரிடப்பட்ட உற்பத்திகளைக் கூடிய பணம் கொடுத்து வாங்குகின்றார்கள். ஆனால் பயிரிடுவோர் முறைப்படி சான்றிதழ் பெற்ற பின்னர் தான் இவ்வாறான உற்பத்திகளை வரவேற்றுக் கொள்முதல் செய்கின்றார்கள் வெளிநாட்டவர்கள்.

எமது இளைஞர் யுவதிகள் அரச வேலைகளை மட்டும் எதிர்பார்த்திருக்காது தமது கற்றல் நடவடிக்கைகளைத் தொழில் சார்ந்த துறைகளில் மேற்கொள்வதன் மூலம் சிறந்த உற்பத்தியாளர்களாகவும், பொருளாதாரத்தில் மேம்பட்ட நிலையை அடையக் கூடிய விதத்திலும் தம்மை மாற்றிக் கொள்ளலாம். அவ்வாறான நடவடிக்கைகளுக்கு இது போன்ற நிகழ்வுகள் வழிகாட்டியாக அமையும். –என்றார்.

(ற-ஜ-21)

# ஞாயிற்றுக்கிழமை தனியார் வகுப்புத் தடைக்கு மதத் தலைவர்களின் ஆதரவைப் பெறுவேன்

## எஸ்.எம்.மரிக்கார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 15

9 ஆம் தரத்துக்கு உட்பட்ட மாணவர்களுக்கு ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புக்களைத் தடை செய்யும் வகையில் நாடாளுமன்றத்தில் தன்னால் முன்வைக்கப்பட்டுள்ள தனிப்பட்ட யோசனையை சட்டமாக்குவதற்கு, சகல மதத் தலைவர்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

தன்னால் முன்வைக்கப்பட்டுள்ள இந்தத்தனியாள் பிரேரணை தொடர்பில் மல்வத்தை மகாநாயக்க தேரரைச் சந்தித்து விளக்கமளிக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

9 ஆம் ஆண்டு வரையிலான மாணவர்களின் மத அறிவு படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. இதனால் நாட்டில் குற்றச் செயல்கள் பெருகி வருகின்றன. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பாலியல் வன்முறைகள் என்று இந்தக் குற்றச் செயல்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

எனவே இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் 9 ஆம் ஆண்டு வரையான மாணவர்களின் மத அறிவை மேம்படுத்த விரிவான திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். கிழமைக்கு ஒரு தடவையாவது மாணவர்களின் மத அறிவை மேம்படுத்த பெற்றோர்கள் முன்வர வேண்டும். இது தற்காலத்தின் மிகவும் இன்றியமையாத தேவையாகும்.

ஞாயிறு தினங்களில் 9 ஆம் ஆண்டு வரை தனியான வகுப்புக்களைத் தடை செய்ய வேண்டுமென்ற தனியாள் பிரேரணையை முன்வைத்துள்ளேன். மல்வத்தை மகாநாயக்க தேரர் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

இது குறித்து இந்து, இஸ்லாம் மதத் தலைவர்களுடனும் கலந்துரையாடவுள்ளேன். அவர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்று நம்புகிறேன்.

மத ரீதியான கல்வியகங்கள் திறக்கப்படுகையில் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன என்ற கருத்தை நோக்காகக் கொண்டு எனது இந்தப் பிரேரணையை வென்றெடுக்க மக்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன். இதன்மூலம் எமது இலங்கைத் தாய்த் திருநாட்டை உலகின் பண்பு மிக்க நாடாகக் காட்டுவதற்கு முடியும்.– என்றார்.

(ற-ஜ-5)

# போத்தல் கள் அடைக்கும் பணி யாழ்ப்பாணத்தில் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாண மாவட்டத்தில் போத்தல்களில் கள் அடைக்கும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் போத்தல்களில் கள் அடைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

மதுவுக்கான அனுமதிப் பத்திரத்துக்கான வரியை அரசு அதிகரித்தும் கூட சில சங்கங்கள் வரிக்கான கூடிய நிதியைச் செலுத்தி போத்தலில் கள்ளை அடைத்து வருகின்றன.

அனுமதிப் பத்திரத்துக்கான வரி குறைக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்தும் வரி இதுவரைக்கும் குறைக்கப்படவில்லை.

வடமாகாணத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் குழு ஒன்று கடந்த மாதத்தில் ஜனாதிபதியை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் இருந்து வடக்கின் உள்ளூர் உற்பத்தி மதுவுக்கான வரியைக் குறைப்பதற்கு விரிவான நடவடிக்கை உடன் மேற்கொள்ளப்படும் என்று அப்போது ஜனாதிபதியால் உறுதியளிக்கப்பட்டது.

தற்போதைய பருவகால கள் உற்பத்தி அதிகரித்துள்ளதால் விற்பனையாகாத கள் வீணாக ஊற்றப்படுகின்றது. கள் விரயமாக ஊற்றப்படுவதால் உற்பத்தியாளர்கள், தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இதன் காரணத்தால் அதிகரிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்துக்கான வரிக்குரிய நிதியை சங்கங்கள் செலுத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுப் போத்தல்களில் கள் அடைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மதுவுக்கான அனுமதிப்பத்திரத்துக்குரிய வரி அதிகரிக்கப்பட்டதால் இந்தமுறை போத்தல் கள்ளின் விலையும் சற்று அதிகரிக்கப்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-ஜ-17)

# நுகர்வோர் பாதுகாப்பு வாரம் தேசிய நிகழ்வு வவுனியாவில்

கொழும்பு, மார்ச் 15

சர்வதேச நுகர்வோர் பாதுகாப்பு வாரத்தின் தேசிய நிகழ்வு வவுனியா காமினி மகா வித்தியாலத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

இலங்கையில் முதல் தடவையாக சர்வதேச நுகர்வோர் பாதுகாப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகின்றது. நேற்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை இந்த வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இதன் தேசிய நிகழ்வு வவுனியாவில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் அதிதிகளாகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை நுகர்வோர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு, வெதுப்பக உரிமையாளர் சங்கம் இந்த வாரம் முழுவதும் பாணின் விலையை 4 ரூபாவினால் குறைத்து 50 ரூபாவுக்கு விற்பனை செய்து வருகின்றது.

அத்துடன் நாடெங்குமுள்ள சுமார் ஆறாயிரம் கடைகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பொருள்கள், விசேட விலைக் கழிவுகளுடனான சலுகைகளில் நுகர்வோருக்கு வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ற-ஜ-5)

மணிவிழா வாழ்த்து



“பொன்மனச் செம்மல்”
“கல்விக் காருண்யன்” என்னும்
கௌரவப் பட்டங்களைப் பெற்ற
உயர்திரு E.S.P
நாகரத்தினம் P.M.J.F
அவர்களை மேலும் பல்லாண்டு காலம்
வாழ்கவென இரக்கத்தின் ஆண்டில்
இறையருள் வேண்டி
வாழ்த்துகின்றோம்.
PATRICIAN INSTITUTE
பதிவாளர், அலுவலர்கள்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
தொழிலாளர்கள்.
No:61, St Patrick's Road,
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க மக்கள் ஒன்றுகூட வேண்டுமாம்

## விமல் வீரவன்ச கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 15
தற்போதைய அரசு தோல்வியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்திக் காட்ட முயற்சிக்கும் கோமாளித்தனத்துக்கு எதிராக நாளை மறுதினம் வியாழக் கிழமை ஹைட் பார்க் மைதானத்தில் சிங்கள - முஸ்லிம் - தமிழ் மக்களை ஒன்றுகூட வேண்டும் - என்று மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டு எதிர்கட்சியைச் சேர்ந்தவருமான விமல் வீரவன்ச கேட்டுள்ளார்.

பொரல்லை என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் கூட்டு எதிர்க் கட்சியினர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் விமல் வீரவன்ஸ இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அன்னப்பறவைச் சின்னம், யானைச் சின்னம் ஆகியவற்றுக்கு தமது வாக்குகளை வழங்கிய நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் தற்போதைய அரசு தோல்வியான அரசு என்பதை உணர்ந்து கொண்டுள்ளனர்.

24 மணிநேரம் மக்களுக்கு மின்சாரத்தை வழங்க இந்த அரசு தவறியது. இரண்டு வாரங்களில் இரண்டு முறை மின்சாரம் தடைப்பட்டது. விவசாயிகளுக்கு பசளை மானியத்தை வழங்க அரசினால் முடியாது போயுள்ளது. தொழில் சார் நபர்களை அரசு அவமதித்து வருகிறது. இவற்றின் மூலம் இந்த அரசு பயந்த - தோல்வியான அரசு என்பதைக் காணமுடிகிறது.

அது மாத்திரமல்ல, 8 சதவீதமாக இருந்த அந்நியச் செலாவணி கையிருப்பை இந்த அரசு 4.3 வீதமாக கீழ்நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டில் முதலீடு செய்திருந்த இரண்டு பில்லியன் டொலர்களை ஒரு வருடத்துக்குள் வெளியில் எடுத்துச் செல்ல இந்த அரசு வழிவகுத்துள்ளது.

இந்த அரசு பாடசாலை மாணவர்களுக்கு துணியை கொடுக்க முடியாது, பெற்றோரைக் கடைகளில் அலைய வைத்தது. இது மட்டுமல்லாது, அரசு ஜனநாயகம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளதுடன் ஊடகங்கள் அடக்கப்பட்டுள்ளன. இப்படியான தமது தோல்விகளை மூடிமறைப்பதற்காக அரசு மக்களுக்கு அச்சமூட்டி வருகிறது.

மகிந்த ராஜபக்ச அரசு போரை வெற்றி கொண்டு, பொருளாதார வளர்ச்சி வேகத்தை 7.5 வீதத்துக்கும் மேல் அதிகரித்து, நாட்டை நிமிரச் செய்து வெற்றியடைந்த நாடாக மாற்றியிருந்தது. அப்படியான நாட்டை தற்போதைய அரசு தோல்வியான நாடாக மாற்றியுள்ளது. இந்தியா உள்ளிட்ட நாடுகளின் தேவைகளை நிறைவேற்றும் நாடாக இலங்கை மாறியுள்ளது.

தனது சிறப்புரிமைகளை அதிகரித்துக் கொண்டு அமைச்சர்களுக்கு இனிப்பு மருந்தை வழங்க பிரதமருக்கு எந்தத் தார்மீக உரிமையும் இல்லை. அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் அதிகரிக்கப்படுவதைக் கூட்டு எதிர்க்கட்சி தெளிவாக எதிர்க்கின்றது.

இந்த சகல விடயங்களின் அடிப்படையில் மக்களுக்கு தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுக்காது, இதுவரை செய்தது போதும், கடவுளே என்று விலகிச் செல்லுங்கள் என்ற அழுத்தத்தை அரசுக்கு கொடுக்க வேண்டும்.- என்றார். (ற-ஐ-5)

## கிழக்குப் பல்கலையின் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தம்

தீருகோணமலை, மார்ச் 15
கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தின் கல்வி நடவடிக்கைகள் மீள் அறிவித்தல் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று கிழக்குப் பல்கலைகழகத்தின் திருகோணமலை வளாக முதல்வர் வல்லிபுரம் கனகசிங்கம் தெரிவித்துள்ளார்.

மீள் அறிவித்தல் வரை திருகோணமலை வளாகத்தின் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாது எனவும், அதுவரை பல்கலைக்கழக வளாகத்திற்குள் மாணவர்கள் பிரவேசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி மாலை, திருகோணமலை வளாகத்தின் முகாமைத்துவ பீட மாணவர்கள், சித்த மருத்துவ பீட மாணவர்களின் வகுப்புக்குள் பிரவேசித்து அவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதையடுத்து கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று திருகோணமலை வளாக முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த சித்த மருத்துவ பீடத்தின் 9 மாணவர்களும் நிலாவெளி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனினும் இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என தாக்குதலுக்கு இலக்கான மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

## இராணுவ ட்ரக் மோதி காயமடைந்த மீனவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

இராணுவ ட்ரக் மோதியதில் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மீன் வியாபாரி சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார் என்று பூநகரி பொலிஸார் தெரிவித்தனர்.

பூநகரி 4ஆம் கட்டை பகுதியில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் கனகேந்திரம் ரஜின்குமார் (வயது - 39) என்ற குடும்பஸ்தரே நேற்று முன்தினம் உயிரிழந்தவராவார். இவர் 3 பிள்ளைகளின் தந்தை என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏ 32 பாதை ஊடாக பூநகரி நோக்கிச் சென்று கொண்டிருந்த போது அவரின் பின்னால் சென்ற இராணுவத்தினரின் ட்ரக் வேகக்கட்டுப்பாட்டை இழந்து அந்த மீனவர் மீது மோதியது என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனால் படுகாயமடைந்த அவர் இராணுவத்தினரால் பூநகரி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

மூன்று மாதங்கள் கடந்த போதும் மயங்கிய நிலையிலேயே வைத்தியசாலை விடுதியில் படுக்கையில் இருந்த அவர் சிகிச்சை பயனளிக்காது யாழ். போதனா வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளார்.

நீதிமன்றப் பணிப்புக்கு அமைய யாழ்.போதனா வைத்திய சாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-ஐ-4-107)

## நீர் மாசடைதல் தொடர்பான விழிப்புணர்வு நடை பவனி

யாழ்ப்பாணம், மார்ச் 15
நிலத்தடி நீர்வளம் தொடர்ச்சியாக மாசாக்கப்பட்டு வருவது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடைபவனி எதிர்வரும் திங்கட்கிழமை 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

உலக நீர் தினத்தை முன்னிட்டு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நடைபவனி, பண்ணையிலுள்ள பிராந்திய முகாமையாளர் அலுவலகத்தில் இருந்து ஆரம்பமாகி வைத்தியசாலை வீதியூடாக யாழ்.மாவட்டச் செயலகத்தை சென்றடையவுள்ளது.

எனவே பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு தூய நீருக்கான தங்களுடைய ஆதரவை வழங்குமாறும், நடைபவனியில் கலந்து கொள்பவர்கள் முடிந்தவரை நீலநிற உடையணிந்து வருமாறும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் ஈ. ஜெகதீசன் குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ-ரி5)

## கஞ்சா விற்பனை; இருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 15
யாழ்.பிரதான வீதியில் உள்ள விடுதி ஒன்றில் பணிபுரிபவர்கள் என்று கூறப்படும் இருவர் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் இருவரும் மட்டக்களப்பு ஆரையம்பதி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து 7 கிராம் கஞ்சா போதைப் பொருளைத்தாம் மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-4-107)

## மணவாளக்கோல உற்சவம் இன்று

சாவகச்சேரி, மார்ச் 15
சாவகச்சேரி கல்வயல் சித்தன்மாவடி வீதி பூதவரகள்ளி அண்ணமார் ஆலய மகா கும்பாபிசேகத்தையொட்டிய 108 சங்காபிசேகமும் மணவாளக்கோல உற்சவமும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் இடம் பெறவுள்ளன. (ஐ-9)

### பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள் எத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள் புரிபவரே. என் வாழ்வில் எச்சந் தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறுகிறேன். என்தேவைகள் எவ்வளவு முக்கியமாயிருப்பினும் என் றென்றும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப் பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப் படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா [illegible]

- ஆமென்

VACANCIES

முன்னணி கல்வி நிறுவனத்தின் கிளைகளுக்கு யாழ்ப்பாணம், சுன்னாகம் நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி பிரதேசங்களில் பின்வரும் பதவி நிலைகளுக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- கணினிப்போதனாசிரியர் - அனுபவம் உள்ளவருக்கு
- சிறார்களுக்கான ஆங்கிலப்பாட ஆசிரியர்
  G.C.E O/L ஆங்கில [illegible]
- ஏனைய பதவி வெற்றிடங்கள் - அனுபவம் உள்ளவருக்கு
  # வரவேற்பாளர்
  # சந்தைப்படுத்தல் உத்தியோகஸ்தர்
  # கிளை முகாமையாளர்

மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம். 5096
உதயன் பப்பிளிகேசன் No.361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சரவணா ரெக்ஸ்
நல்லூர்
வேறு கிளைகள் கிடையாது.



புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை
- சாறிகள்
- சல்வார்கள்



இல.526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி) (சிவன் கோயிலுக்கு அருகில்) யாழ்ப்பாணம்.

கிருஸ்ணா அடகு சேவை
பதிவு இல J/DS/BR/472

1. மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2014ஆம் ஆண்டு (31.12.2014) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி (15.04.2016) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும் புதுப்பிக்க தவறின் (15.04.2016) ஆம் திகதி அன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.
2. மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2015 ஆம் ஆண்டு 31.09.2015 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி (15.04.2016) இற்கு முன்னர் மீட்கவும் மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும் புதுப்பிக்க தவறின் 15.04.2016 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றேன்.

உரிமையாளர் A.S.Surendran

இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311

இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெகிவளை குண்டுத் தாக்குதல்; இருவருக்கு 2 வருட கடூழியச் சிறை

கொழும்பு, மார்ச் 15
தெகிவளை ரயில் நிலையத்தில் 1996 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் நடத்திய குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய இருவருக்கு இரண்டு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, குற்றத்தை ஒப்புக்கொள்கின்றோம் என்று சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதனையடுத்து தீர்ப்பை வழங்கிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் ஐராங்கனி பெரேரா, சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான குற்றவாளிக்கு ஏற்கனவே தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இந்தக் குற்றவாளிகள் இருவரும் சுமார் 20 வருடங்கள் விளக்கமறியலில் இருந்து வருவதால், அதனைக் கவனத்தில் கொண்டு தண்டனையைத் தளர்த்தி இரண்டு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளிப்பளிக்கப்பட்டுள்ளது என்று நீதிவான் தெரிவித்துள்ளார்.

சிறைத் தண்டனை அனுபவித்த பின்னர், குற்றவாளிகள் வவுனியா-பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் ஓராண்டு புனர்வாழ்வுப் பயிற்சிக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் நீதிவான் தனது தீர்ப்பில் கூறியுள்ளார். (ற-ஐ-5)

## திருட்டு மின் பாவனை ; நால்வர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 15
நீர்வேலியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து வந்துள்ள மின்சாரசபையின் புலனாய்வு அதிகாரிகளும், அச்சுவேலிப் பொலிஸாரும் இணைந்து நடத்திய திடீர் சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது நீர்வேலி வடக்கில் உள்ள பிரதான மின்வடத்தில் இருந்து மேலதிக வயரை இணைத்து மின்சாரம் பெற்ற ஒருவர் நேற்று முன்தினமிரவு கைதுசெய்யப்பட்டார்.

நேற்றுப் பகல் மேற்கொண்ட நடவடிக்கையின் போது மின்மானிக்கு ஓட்டை போட்டு அதன் சுழற்சியை நிறுத்தி மின் பெற்ற இருவரும், பிரதான மின்வடத்தில் இருந்து மேலதிகவயர்களை இணைத்து சட்டவிரோத மின்சாரம் பெற்ற ஒருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ற-ஐ-4-107)

கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் பொது முகாமைத்துவ உதவியாளராக
கடமையாற்றும் திருமதி அருட்செல்வம் யோகராணி
அவர்களின் அன்புக் கணவர்
பொன்னுத்துரை அருட்செல்வம்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.
பிரதேசசெயலகம், நல்லூர். (C29815), (14,19) நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்.

# 10 வயதுச் சிறுமிக்குச் சூடுவைத்த வளர்ப்புத் தாய்

*14 நாள்கள் விளக்கமறியலில் வைத்தது நீதிமன்று*

மட்டக்களப்பு, மார்ச் 15
மட்டக்களப்பு-காத்தான்குடிப் பிரதேசத்தில் 10 வயதுச்சிறுமிக்குச் சூடு வைத்துக் கொடுமைப் படுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சிறுமியின் வளர்ப்புத்தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது.



காத்தான்குடியில், காத்தான்குடி மீரா பாலிகா மகா வித்தியாலய தேசிய பாடசாலையில் தரம் 5 இல் கல்வி கற்கும் 10வயது சிறுமி அவரது வளர்ப்புத் தாயால் சூடு வைத்துக் கொடுமைப் படுத்திய சம்பவம் தொடர்பில்,காத்தான்குடிப் பொலிஸாரால் நேற்று முன்தினம் சிறுமியின் தந்தை மற்றும் வளர்ப்புத் தாய் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணையில் சிறுமியின் தந்தை மற்றும் வளர்ப்புத் தாய் இருவரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை 14 நாள் விளக்கமறியலில் வைக்குமாறும், சிறுமியின் அண்ணனை மட்டக்களப்பு நீதிமன்ற சிறுவர் பிரிவுக்கு ஒப்படைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ற-ஐ)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜெயரட்ணம்
டனுன் அமலன்
தோற்றம் 04.05.1991
மறைவு 15.03.2014

அன்புள்ளம் கொண்டு நீ பண்பாய் பழகிடுவாய்
அமைதியாய் என்றும் பாசமாய்ப் பேசிடுவாய்
வந்தாரை வரவேற்கும் வள்ளல் நீ
சிந்தியாவின் மணவாளன் நீ
அக்ஷயனின் ஆசை தந்தை நீ
உன் உறவுக்கு நல்ல சொந்தம் நீ
ஊரில் எல்லோருக்கும் என்றும் நண்பன் நீ

321/12, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திரேசம்மா
அருளானந்தம்



மலர்வு
23.11.1935
உதிர்வு
15.03.2014

" ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிகவும் மதிப்பிற்குரியது "
திருப்பாடல் 116:15

அன்பின் இறைவா,

எங்கள் அன்புத் தெய்வம் எம் அம்மாவுக்காக நன்றி கூறுகின்றோம். எம்மை உயிரிலும் மேலாக நேசித்து, தம் உதிரம் சிந்தி எம்மை உருவாக்கி எம்மோடு வாழ்ந்த எம் அன்பு அம்மாவை கனிவோடு கண்ணோக்கியருளும். அவரை நித்திய பேரின்ப வீட்டில் நித்தியமும் பாதுகாத்துக் கொள்ள தாழ்மையோடு மன்றாடுகின்றோம்.

கன்னிமாமரியே... மாசில்லாமல் உற்பவித்த இறைவனின் தாயே... திருச்செபமாலையை அளவில்லாத அன்புடன் தினமும் செபித்து, எம்மையும் செபிக்கத் தூண்டிய எம் பாசமிகு அம்மாவை உமது பாதத்தில் ஒப்படைத் துள்ளோம். அவருக்காக உமது திருமகனிடம் வேண்டிக்கொள்ளும்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ்.கொய்யாத்தோட்ட... தூய திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் (வைத்தியசாலை வீதி) காலை 6.00 மணிக்கு (15.03.2016 செவ்வாய்க்கிழமை) திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

36/2. கோயில் வீதி.
யாழ்ப்பாணம்.
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்



அமரர்
பரமேஸ்வரி
(நேசம்மா)
சுப்பிரமணியம்
மலர்வு
08.04.1935
உதிர்வு
14.02.2016

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இயற்கையெய்திய எமது குடும்பத் தலைவியின் பிரிவுச் செய்தி அறிந்து உடன் வந்து உதவிகள் புரிந்து ஆறுதல் தெரிவித்தோருக்கும் உள்ளூர், வெளியூர்களில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்பையும் அறிவையும் ஊட்டி வளர்த்த எம் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஏழாலை மேற்கு.
உத்தமச் சிலையடி,ஏழாலை.
077 328 1932
(69844)(11,18)
குடும்பத்தினர்.

## வெடிபொருள் வெடித்ததில் குடும்பஸ்தர் படுகாயம்

யாழ்பாணம் - கொழும்புத்துறையில் நிலத்தில் புதையுண்டிருந்த வெடிபொருள் வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். குறித்த குடும்பஸ்தர் வீட்டு வளவைத் துப்புரவு செய்த வேளையில் குறித்த வெடிபொருள் வெடித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த றொபேட் - றொபக்சன் (வயது-37) என்பவரே கண்ணில் படுகாயமடைந்தவராவார். அங்கு துப்புரவுப் பணிக்காக பயன்படுத்தப்பட்ட மண்வெட்டியில் குண்டு அகப்பட்ட போது அது வெடித்துச் சிதறியுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
(ற-ஐ-4,101,106)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எட்டு மாதங்கள் கடந்தும் முடிவுறாதுள்ள பிளாஸ்ரிக் மீள்சுழற்சி மைய நிர்மாணம்

யாழ்ப்பாணம், மார்ச் 15
நான்கு மாதங்களில் நிர்மாணிப்புப் பணி நிறைவு பெறும் என்று ஆரம்பிக்கப்பட்ட காக்கைதீவு பிளாஸ்ரிக் மீள்சுழற்சி மையத்தின் கட்டுமானப் பணிகள் எட்டு மாதங்கள் கடந்தும் இன்னமும் நிறைவு செய்யப்படவில்லை.

"பல்வேறு காரணங்களினால் இந்தப் பணிகள் தாமதப்பட்டுள்ளன. அடுத்த மாதத்துக்குள் பணிகள் நிறைவடையும்" என்று யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

பிளாஸ்ரிக் பொருள்களால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகளை குறைக்கும் வகையில் மீள்சுழற்சி முறையைச் செயற்படுத்துவதற்கு, பிளாஸ்ரிக் மீள்சுழற்சி மையத்துக்கான அடிக்கல் காக்கைத்தீவில் கடந்த ஆண்டு ஜுலை மாதம் நடப்பட்டது.

வடமாகாண விவசாய சுற்றாடல் துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்துக்கான அடிக்கல் நட்டிருந்தார்.

எட்டு மில்லியன் ரூபா செலவில் இந்த மீள் சுழற்சி மையம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை 5.5 மில்லியன் ரூபாவைக் காசாக வழங்கியதோடு 1.6 மில்லியன் ரூபா பெறுமதியில் பிளாஸ்ரிக் மீள்சுழற்சிக்கான இயந்திரத் தொகுதிகளையும் கொள்வனவு செய்து வழங்கியிருந்தது. யாழ்.மாநகர சபை 0.79 மில்லியன் ரூபாவை வழங்கியிருந்தது.



- கடந்த ஆண்டு மீள்சுழற்சி மையத்துக்கான அடிக்கல்லை அமைச்சர் ஐங்கரநேசன் நடுகை செய்து வைத்தார்.

இதன் நிர்மாணப் பணிகள் நான்கு மாதத்தில் முடிவுறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், எட்டு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும், அதன் நிர்மாணப் பணிகள் இன்னமும் நிறைவடையவில்லை.

கடந்த ஜனவரி மாதம் 30 ஆம் திகதி யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வட பிராந்திய உதவிப் பணிப்பாளர் திருமதி விஜிதா சத்தியகுமார், விரைவில் பிளாஸ்ரிக் மீள்சுழற்சி மையத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவுறும் என்று தெரிவித்திருந்தார்.

இன்னமும் இதன் நிர்மாணப் பணிகள் முடிவடையாதமை தொடர்பில், யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் பொ.வாகீசனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, மழை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இதனை உரிய காலத்தினுள் அமைத்து முடிக்க முடியவில்லை. அடுத்த மாதத்தினுள் இதன் நிர்மாணப் பணிகள் முடிவுறும் - என்றார். (ற-ஐ-5-ரி5)

> "எட்டு மில்லியன் ரூபா செலவில் இந்த மீள் சுழற்சி மையம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் மத்திய சுற்றாடல் அதிகார சபை 5.5 மில்லியன் ரூபாவைக் காசாக வழங்கியதோடு 1.6 மில்லியன் ரூபா பெறுமதியில் பிளாஸ்ரிக் மீள்சுழற்சிக்கான இயந்திரத் தொகுதிகளையும் கொள்வனவு செய்து வழங்கியிருந்தது. யாழ். மாநகர சபை 0.79 மில்லியன் ரூபாவை வழங்கியிருந்தது."

## காலாவதியான மருந்து விற்பனை நிலையத்தின் நடவடிக்கை இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,மார்ச் 15
காலாவதியான மருந்தை விற்பனை செய்த மருத்தகம் ஒன்றின் விற்பனை நடவடிக்கையை இடைநிறுத்துமாறு யாழ். நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் அமைந்துள்ள மருந்தகம் ஒன்றில் கொலஸ்ரோல் நோய்க்கு பயன்படுத்தப்படும் மருந்து வில்லைகள் காலாவதியான நிலையில் விற்பனை செய்யப்பட்டு வந்தமை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சோதனை நடவடிக்கையின்போது கண்டு பிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த மருந்தகத்தின் உரிமையாளருக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. அவருக்கு நீதிமன்றால் பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், மருந்தகத்தின் விற்பனைச் செயற்பாடுகளை இடை நிறுத்துமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

இதேவேளை காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனை செய்தமை, விலைப்பட்டியல் இல்லாமல் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டமை போன்ற குற்றச்சாட்டிலும் மேலும் எட்டுப் பேருக்கு நீதிமன்றால் அபராதம் விதிக்கப்பட்டது. காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனை செய்த 5 பேருக்கு ரூபா 9 ஆயிரம் அபராதமும், விலைப் பட்டியலை காட்சிப்படுத்தாத 3 பேருக்கு ரூபா 3 ஆயிரம் அபராதமும் நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது .(ற-ஐ-4,103)

## குருநகரில் தையற் பயிற்சி நிலையம்

குருநகர், மார்ச் 15
குருநகர் கல்வி முன்னேற்றக் கழகத்தின் அனுசரணையுடன் குருநகர் ஆவே மரியா பாலர் பாடசாலையில் தையற் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தையற் பயிற்சி நிலையத்துக்கான தையல் இயந்திரங்களை குருநகர் பிரான்ஸ் சென்.ஜேம்ஸ் பழைய மாணவர் அமைப்பின் தலைவர் ஐ.சந்திரன் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

குருநகரில் படித்துவிட்டு வேலைவாய்ப்பை தேடும் பெண்கள் இந்த தையற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றுதமது வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளமுடியும் எனவும் தெரிவிக் கப்பட்டு ள்ளது. (ற-ஐ-51)



தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் முகமாலை மற்றும் ஓமந்தைச் சோதனைச் சாவடிகளைத் தாண்டிச் செல்லும் அனுமதிக்காக பயன்படுத்தப்படும் விண்ணப்பப் படிவத்தில் தயார் செய்த பைக்கற்றில் கச்சான் விற்கப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் புலிகளின் முன்னரங்கப் பகுதிகளாக விளங்கிய முகமாலை மற்றும் ஓமந்தைச் சோதனைச் சாவடிகளைத் தாண்டிச் செல்வதற்கான பயணிகள் அனுமதிக்காக ஓர் படிவம் பயன்படுத்தப்பட்டது. அவை புலிகள் காலத்தில் அனைவர் வீடுகளிலும் காணப்பட்டன. ஆயினும் போர் முடிவுற்ற பின்னர் அவற்றைக் காணமுடியவில்லை. இந்த நிலையில் நேற்று நல்லூர் ஆலயச் சூழலில் கச்சான் விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் குறித்த படிவத்தில் தயார் செய்த பைக்கற்றில் கச்சான் விற்பனையில் ஈடுபட்டிருந்தார். (ற-ஐ-101)

## வணிகர் கழகத்துக்கு புதிய நிர்வாகம்

யாழ்ப்பாணம், மார்ச் 15
யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை வணிகர் கழகப் பணிமனையில் இடம் பெற்றது. இதன் போது புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம் பெற்றது.

2016 அம் ஆண்டின் யாழ். வணிகர் கழகத் தலைவராக இ.ஜெயசேகரனும், உப தலைவராக எஸ்.ரி.பரமேஸ்வரனும், செயலாளராக ஆர். ஜனக்குமாரும், உப செயலாளராக வி.எஸ். பாலச்சந்திரனும், பொருளாளராக ஆர்.ஜெயராசாவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக 14 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (ற-ஐ-ரி4)

## பருத்தித்துறை மீனவர்களுக்கு கஞ்சா விற்ற இருவர் சிக்கினர்

### 18 கஞ்சாப் பைக்கற்றுக்களும் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15
பருத்தித்துறைக் கடற்கரையோரமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்களிடம் கஞ்சாப் பைக்கற்றுக்களை விற்பனை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் 18 கஞ்சாப் பைக்கற்றுக்களுடன் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி கஞ்சாவை எடுத்து வந்தனர் என்று கூறப்படும் ஓட்டோவும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பருத்தித் துறைப்பொலிஸார்தெரிவித்தனர். நேற்று முன்தினம் கிடைத்த தகவலையடுத்துத்தாம் மேற்கொண்ட அதிரடிச் சுற்றி வளைப்பில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பருத்தித் துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர்களுக்கு குறித்த இருவரும் ஓட்டோவில் கஞ்சாப் பொதிகளை எடுத்து வந்து விநியோகிக்க முயன்றுள்ளனர் என்று அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது.

அது பற்றிய தகவல் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளது. அதனையடுத்துப்பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் இருவரும் கஞ்சா பைக்கற்றுக்களுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே சுற்றி வளைப்பு நடத்தப்பட்டது என்று பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட 2 பேரும் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள் எனவும், குறித்த கஞ்சாப் பைக்கற்றுக்கள் எங்கிருந்து வந்தன என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்த பொலிஸார், கைது செய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறினர்.

இதேவேளை சில நாள்களுக்கு முன்னர் தொண்டமானாறு பாலத்துக்குக் கீழே இருந்து 2.8 கிலோகிராம், உயிர்கொல்லி போதைப் பொருளான ஹெறோயின் மீட்கப்பட்டிருந்தது. எனினும் அதனைக் கடத்தியவர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு இதுவரை எந்தவித தகவலும் கிடைக்கவில்லை. (ற-ஐ-4-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பட்டித்தோட்டத்தில் நடக்கும் மண் அகழ்வை நிறுத்த நடவடிக்கை

## பிரதேச செயலர் வசந்தகுமார் தெரிவிப்பு



மன்னார்,மார்ச் 15

மன்னார் பட்டித்தோட்டம் பகுதியில் சட்ட விரோதமாக இடம்பெறும் மண் அகழ்வுக்குத் தீர்வு காணும் விதமாக இன்று நேரில் சென்று நடவடிக்கைகள் எடுக்கவுள்ளேன் என்று மன்னார் பிரதேச செயலர் வசந்தகுமார் தெரிவித்தார்.

மண் அகழ்வை நிறுத்துமாறு பல முறை எச்சரித்திருந்தபோதும், அது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதால், இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மன்னார் பட்டித்தோட்டம் பகுதியில் கடந்த பல வருடங்களாக பல ஏக்கர்க்கணக்கில் மண் அகழ்வு நடைபெற்று வருகின்றது. பட்டித்தோட்டத்தில் மண்மேடுகள் காணப்படுவதால் ஒரு நாளைக்கு பல உழவு இயந்திரங்களில் குறித்த மண் அகழப்பட்டுக் கொண்டு செல்லப்படுகின்றது. தற்போது குறித்த மண் மேடுகள் காணாமற்போயுள்ள நிலையிலும், மண் கொள்ளையர்கள் குறித்த பகுதியில் மண் அகழ்வை நிறுத்தாது தொடர்ச்சியாக மேற்கொண்ட வண்ணமே உள்ளனர்.

இதனால் பட்டித்தோட்டம் கிராமம் எதிர்காலத்தில் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தற்போது பெய்யும் சிறிய மழைக்கே மண் அகழ்வை மேற்கொண்ட பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

இது குறித்துப் பிரதேச மக்கள் - எமது வளமான மண் சூறையாடப்படுவது தொடர்பாக மன்னார் பிரதேச செயலர் உட்பட மன்னார் பொலிஸாருக்கும் பல முறை தெரியப்படுத்தியும் நடவடிக்கைகள் எடுத்ததாகத் தெரியவில்லை. குறித்த மண் அகழ்வைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தடுத்து நிறுத்தவேண்டும். - என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதுகுறித்து மன்னார் பிரதேச செயலர் வசந்தகுமாரிடம் கேட்டபோது;

குறித்த பகுதியில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வு இடம்பெறுவது தொடர்பாகப் பலரும் முறையிட்டிருந்தனர். இந்த மண் அகழ்வை நிறுத்துமாறு சம்மந்தப்பட்டவர்களுக்கு எச்சரித்திருந்தோம்.

ஆயினும் நிறுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. இதற்காகக் குழு ஒன்றை நியமித்துள்ளோம். மண் கொண்டு செல்பவர்களை மடக்கிப் பிடிக்குமாறு பொலிஸாருக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

இதனைவிட இன்று சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று இதற்கான நிரந்தரமான தீர்வு காண உள்ளேன். சட்ட விரோதமான விதத்தில் மேற்கொள்ளப்படும் குறித்த செயலைத் தொடர்ச்சியாக அனுமதிக்க முடியாது. எனவே இன்னும் ஒரு சில நாள்களில் இந்த மண் அகழ்வு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும்.- என்றார். (ற-ஐ-21)

> “ பட்டித்தோட்டத்தில் மண்மேடுகள் காணப்படுவதால் ஒரு நாளைக்கு பல உழவு இயந்திரங்களில் குறித்த மண் அகழப்பட்டுக் கொண்டு செல்லப்படுகின்றது. தற்போது குறித்த மண்மேடுகள் காணாமற்போயுள்ள நிலையிலும், மண் கொள்ளையர்கள் குறித்த பகுதியில் மண் அகழ்வை நிறுத்தாது தொடர்ச்சியாக மேற்கொண்ட வண்ணமே உள்ளனர். ”

## வித்தியானந்தக் கல்லூரி வளர்ச்சி குறித்து முதலமைச்சருடன் பேச்சு

முல்லைத்தீவு,மார்ச் 15

தேசியப் பாடசாலையான முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியின் வளர்ச்சி குறித்தும், எதிர்காலத் திட்டமிடல்கள் குறித்தும் கல்லூரியின் அபிவிருத்திச் சங்க விசேட குழுவினர் வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரனுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த கலந்துரையாடல் முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்துள்ளது.

வித்தியானந்தக் கல்லூரிக்கு இதுவரை காலமும் மாணவர்களை வழங்கும் ஊட்டப் பாடசாலைகளான அயற் பாடசாலைகளில் புதிதாக வகுப்புக்கள் அதிகரிக்கப்படுவதால் பாடசாலைகளைகளின் தரம் உயர்த்தப்படுகிறது.

இதனால் வித்தியானந்தக் கல்லூரி எதிர்காலத்தில் எதிர்நோக்கக் கூடிய சவால்கள் குறித்தும், அவ்வாறான பாடசாலைகளில் கல்வி கற்கும் தமது இளம் சந்ததியினரது திறமைகள், ஆற்றல்கள் மழுங்கடிக்கப்படுகின்றன என்றும் கல் லூரியின் அபிவிருத்திச் சங்க விசேட குழுவால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது முதலமைச்சரின் நேரடிப் பிரதிநிதிகளை அனுப்பி முள்ளியவளைப் பிரதேச பாடசாலைகளின் நிலை குறித்து ஆராய்ந்து உண்மை நிலை பற்றி அறிந்து கொள்ளுமாறும் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கவிசேடகுழுவால்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அத்துடன் விவசாயிகள் தமது நெல்லைச் சந்தைப்படுத்த முடியாத நிலையில் உள்ளமை, போதிய நெற்களஞ்சிய சாலைகள் நிர்மாணிக்கப்படாமை போன்ற குறைபாடுகளும், சிறுவர், பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும், பொலிஸ்நிலையங்களின் குறைபாடுகள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்தும் முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

அவற்றைக் கேட்டறிந்து கொண்ட முதலமைச்சர், உரிய அமைச்சர்கள் அதிகாரிகளுடன் கலந்துரையாடி உரிய தீர்வுகள் பெற்றுத் தரப்படும் என்று பதிலளித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-21,102)

## வடமாகாண விவசாயக் கண்காட்சி உயிலங்குளத்தில் நேற்று ஆரம்பம்





மன்னார், மார்ச் 15

“சந்தைப் பொருளாதாரத்தை நோக்கிய சூழல் பாதுகாப்புடனான விவசாய உற்பத்தி” எனும் தொனிப்பொருளிலான வடமாகாண விவசாயக் கண்காட்சி நேற்று மன்னார் உயிலங்குளம் விவசாயப் பயிற்சி நிலையத்தில் ஆரம்பமானது.

வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெற்ற குறித்த விவசாயக் கண்காட்சியை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி விக்கினேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

விவசாயக் கண்காட்சி,நேற்று திங்கட்கிழமை முதல் நாளை புதன் கிழமை வரையிலான மூன்று தினங்கள் நடைபெறுகின்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறிஸ்கந்தராசா, கௌரவ விருந்தினர்களாக வடமாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடமாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராஜா,.வடமாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த கண்காட்சியை மத்திய விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவை உள்ளடங்கலாக சுமார் 22 திணைக்களங்கள், வங்கிகள் இணைந்து ஒழுங்கமைத்துள்ளன.

சூழலைப் பாதிக்காத விவசாய நடைமுறையை ஒத்த பல்வேறு செயற்பாடுகளை உள்ளடக்கி மேற்படி கண்காட்சி அமைந்துள்ளது. குறித்த கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பல தரப்பட்டவர்களும் கலந்து கொண்டனர். (ற-ஐ-56)

## ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு பயிற்சிப் புத்தகங்கள் வழங்கல்

மன்னார், மார்ச் 15

மடு கல்வி வலயத்துக்குட்பட்ட பெரிய பண்டிவிரிச்சான் தமிழ்க் கலவன் பாடசாலையில், ஆரம்பக் கல்வியில் பின் தங்கிய மாணவர்களுக்கு வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலனால் ஒரு தொகுதி பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் மடுப் பிரதேசத்தை சேர்ந்த பெரிய பண்டிவிரிச்சான் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த 12 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களின் ஆரம்பக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் குறித்த பயிற்சிப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை குறித்த மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு ஆசிரியர் ஒருவரும் நியமிக்கப்பட்டு விசேட கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்தோடு மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விடத்தல் தீவுக் கிராமத்தில் வாசிப்பு கண் குறைபாடுகள் காணப்பட்டவர்களுக்கு வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் இலவச மூக்குக்கண்ணாடிகளை வழங்கியுள்ளார்.

குறித்த கிராமத்தைச் சேர்ந்த 150 பேர் தெரிவு செய்யப்பட்ட நிலையில், அவர்களுக்கு ஏற்ற வகையில் இலவசமாக வாசிப்பு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (ற-ஐ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடலேரிகளில் கொட்டப்படும் குஞ்சு மீன்களால் துர்நாற்றம்

## தென்மராட்சிப் பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

சாவகச்சேரி, மார்ச் 15

தென்மராட்சி பிரதேச கடலேரிகளில் குஞ்சு நண்டுகளும், குஞ்சு மீன்களும் கொட்டப்படுவதால் கடற்கரையோரங்களில் பெரும் துர்நாற்றம் வீசுகின்றது என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

கடலேரியில் தற்போது பட்டிக் கூடுகள் பல இடங்களில் கட்டப்படுவதால் அவற்றுள் பிடிபடும் குஞ்சு நண்டுகளும், குஞ்சு மீன்களும் விற்கமுடியாத நிலையில் கரையில் கொட்டப்படுகின்றன. அதனால் அந்தப் பகுதிகளில் பெரும் துர்நாற்றம் வீசுகின்றது. குறித்த பகுதிகளால் பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

> பட்டிக் கூடுகள் அமைக்கப்படுவதால் பெருமளவு கடல் உணவு இனங்கள் குஞ்சுகளிலேயே அழிக்கப்படுவதால் பட்டிக் கூடுகள் அமைப்பதைத் தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

இது தொடர்பாகப் பிரதேசத்தில் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

முன்னர் கடலேரியில் இறால் பிடிப்பதற்கென ஒற்றைக் கூடுகள் கட்டப்பட்டு இறால் பிடிக்கப்பட்டு வந்ததால் மீன் குஞ்சுகள், குஞ்சு நண்டுகள், இறால் குஞ்சுகள் போன்றவை கூட்டுக்குள் செல்வதில்லை. அதனால் அவை பாதுகாக்கப்பட்டன.

அண்மையில் கடலேரியில் பட்டிக் கூடுகள் பல இடங்களில் அமைக்கப்பட்டு கடல் உணவுகள் பிடிக்கப்படுகின்றன. குறித்த பட்டிக் கூடுகளுக்குள் பெருமளவு குஞ்சு இறால்கள், குஞ்சு நண்டுகள், குஞ்சு மீன்கள் போன்றவை பிடிபடுகின்றன. இவற்றை விற்பனை செய்ய முடியாததால் தொழிலாளர்கள் அவற்றைக் கடலேரியின் கரையோரங்களில் கொட்டுகின்றனர்.

பட்டிக் கூடுகள் அமைக்கப்படுவதால் பெருமளவு கடல் உணவு இனங்கள் குஞ்சுகளிலேயே அழிக்கப்படுவதால் பட்டிக் கூடுகள் அமைப்பதைத் தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்று தெரிவித்தனர். (ற-ஐ-9)

### ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்க மாநாடு

வரணி, மார்ச் 15

இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் 52 ஆவது வருடாந்த மாநாடு, எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி புத்தளம் மாவட்டம் ஆனமடுவ மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குறித்த மாநாட்டில் இடம் பெறும் புதிய நிர்வாக சபைத் தெரிவில் உரிய பதவிகளுக்குப் போட்டியிட விரும்பும் உத்தியோகத்தர், வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு வசதியாக உரிய விண்ணப்பப் படிவங்களைத் தங்களது மாவட்ட கிளைச் செயலாளர் ஊடாக எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பு பதிவுத் தபாலில் சங்கத்தின் பிரதான செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

கௌரவ தலைவர், உப தலைவர் பதவிகள் (4), பிரதான செயலாளர், பிரதிச் செயலாளர் பதவிகள் (4) மற்றும் பொருளாளர் என்பனவற்றுக்கு விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என்பதுடன் உரிய விண்ணப்பப்படிவங்களை மாவட்டக் கிளைச் செயலாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும் என பிரதான சங்கச் செயலாளர் ட்ப்.ஜீ.கமல் கித்சிறி அறிவித்துள்ளார். (ற-ஐ-122)

### தேசிய சேமிப்பு வங்கியின் 44 ஆவது ஆண்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 15

தேசிய சேமிப்பு வங்கியின் 44 ஆவது ஆண்டு நிகழ்வுகள் நாளை அனைத்துக் கிளைகளிலும் சமய அனுஷ்டானங்களுடன் நடைபெறவுள்ளன.

அத்துடன் சித்திரைப் புது வருடத்தையொட்டிய 'அவுறுது வாசனா' சேமிப்புத் திட்டத்தில் 20 ஆயிரம் ரூபா, 17 ஆயிரத்து 500 ரூபா, 12 ஆயிரத்து 500 ரூபா வைப்பிலிட்டுள்ள வாடிக்கையாளருக்குப் பெறுமதிமிக்க பரிசுப் பொருள்கள் நாளை தொடக்கம் வழங்கப்படவுள்ளன. (ற-ஐ-9)

### கும்பாபிசேகம்

வடமராட்சி, மார்ச் 15

புலோலி மந்திகை இலந்தையடி தோட்டத்து ஞான வைரவர் ஆலயத்தின் மகா கும்பாபிசேகம் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4.47 மணிமுதல் 5.20 மணிவரையிலான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் பிரதம குரு சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிசேகத்தை நடத்தவுள்ளார்.

கும்பாபிசேகத்துக்கான கிரியைகள் நாளை புதன் கிழமை காலை 6.05 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறும். மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (ற-ஐ-173)



நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மின் தடையை அடுத்து வீட்டில் கொளுத்தப்பட்ட மொழுகுவர்த்தியால் வீடு ஒன்று முற்றாக எரிந்து சேதமாகியுள்ளது. இந்தச் சம்பவம் மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரி வீதியில் நடந்துள்ளது. இரவு 9 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வீட்டில் இருந்த கட்டில், அலுமாரி, கதிரை உள்ளிட்ட தளபாடங்கள், கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளிட்ட ஆவணங்கள்;, உடுதுணிகள், அலைபேசிகள், மின்சார உபகரணங்கள் என்பவை முற்றாக எரிந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ற-ஐ,5)

### லயன்ஸ் கழகத்தால் மாணவருக்கு உதவி

அச்சுவேலி, மார்ச் 15

லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவர்களுக்கு 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் துணைச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆஸ்திரேலியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள பொறியியலாளர் வே.கணேசலிங்கம் இதற்கான நிதி உதவியை வழங்கியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை அதிபர் சி.சத்தியரதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து சைக்கிள்கள், சப்பாத்துக்கள், புத்தகப் பைகள், பயிற்சிப் புத்தகங்கள் என்பவை மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. நிகழ்வில் பொறியியலாளர் வே.கணேசலிங்கம், லயன்ஸ் கழகம் 306 பி மாவட்ட உப ஆளுநர் மருத்துவர் வை.தியாகராசா, கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி ஏ.எஸ்.சற்குணராசா உட்பட பலர் கலந்து கொண்டனர். (ற-ஐ-11)

# வடமாகாண சாரணிய வரலாறு ஓகஸ்டில் நூலாக வெளியாகும்

## யாழ்.மாவட்ட சாரணர் சங்க ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

வடமாகாணத்தின் சாரணிய வரலாற்றைக் கூறும் நூல் ஒன்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வெளியிடப்படவுள்ளது. இந்த நூலில் சாரணியத்துக்கு வித்திட்ட யாழ்ப்பாணத்தின் பிரதான பாடசாலைகளின் பதிவுகளும் உள்வாங்கப்படும். - இவ்வாறு யாழ்.மாவட்ட சாரணர் சங்க ஆணையாளர் எஸ்.தேவரஞ்சன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சாரணியம் உருவாக்கப்பட்டமை தொடர்பாக தேசிய சாரணர் மகாநாட்டில் வெளியிடப்பட்ட நூலில் தவறுதலாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பெயர் விடுபட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முடிவடைந்துள்ள ஒன்பதாவது தேசிய சாரணர் மகாநாட்டில் வெளியிடப்பட்ட நூல் வரலாறு சார்ந்தது அல்ல. இதுவரையில் நாட்டில் நடைபெற்ற சாரணர் மாநாடுகள் தொடர்பான ஒரு தொகுப்பு சார்ந்த நூலேயாகும். அதனை கொழும்பில் இருந்து வந்தவர்கள் வெளியிட்டனர். தவறுதலான அச்சுப்பதிப்பில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பெயர் குறித்த நூலில் இருந்து விடுபட்டிருக்கலாம்.

சாரணியத்தின் வரலாறு தெரிந்த மூத்தவர்களின் அறிவுரைகளுடன் தற்போது ஒரு நூல் வடமாகாணத்தின் சாரணிய வரலாற்றைக் கூறும் வகையில் உருவாக்கப்பட்டு வருகின்றது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இந்த நூல் வெளியிடப்படும் வகையில் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

1918 ஆம் ஆண்டு யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியின் அதிபர் தோம்சன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க யாழ். மத்திய கல்லூரி, யாழ்.பரி யோவான் கல்லூரி, யாழ். பத்திரிசியார் கல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த 121 மாணவர்களை இணைத்துமென்டிஸ் என்பவர் முதலாவது தேசிய ஜம்போறியை ஒழுங்கு படுத்தினார். பின்னர் சாரணியம் தொடர்பில் வெளியிட்ட நூலில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.- என்றார்.

நடந்து முடிந்துள்ள தேசிய ஜம்போறியின் போது வெளியிடப்பட்ட நூலில் யாழ்.சாரணிய வரலாறு மறைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் முதன் முதலாக சாரணியத்தை ஆரம்பித்த பாடசாலைகளில் யாழ். மத்திய கல்லூரி, யாழ்.பரியோவான் கல்லூரி, யாழ். பத்திரிசியார் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி என்பவை குறிப்பிடத்தக்கவையாகும்.

ஆனால் தேசிய ஜம்போறியை முன்னிட்டு வெளியிடப்பட்ட நூலில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பெயர் இணைக்கப்பட்டிருக்கவில்லை. ஏனைய பாடசாலைகளின் பெயர்கள் மட்டும் இணைக்கப்பட்டு நூல் வெளியிடப்பட்டுள்ளது. ஏற்பாட்டாளர்கள் உரிய ஆவணங்களை நன்றாக அறிந்த பின்னரே இது போன்ற நூல் வடிவங்களை அமைப்பதற்கு அனுமதிகளை வழங்கியிருத்தல் வேண்டும்.

ஒரு கல்லூரியின் வரலாற்றைக் குழி தோண்டிப் புதைத்த பெருமை தேசிய ஜம்போறியை முன்னின்று நடத்தியவர்களுக்கே உரியது என்று வட்டுக்கோட்டை கல்விச் சமூகமும், பழைய மாணவர்கள், மூத்த சாரணர்களும் தெரிவித்திருந்தனர். (ற-ஐ-ரி5-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் இறுதிக் கட்டத்தில் பிரபாகரன் உயிருடன் இருந்தாரா என விசாரணை

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கூறுகின்றார்



கொழும்பு, மார்ச் 15
போரின் இறுதிக் கட்டத்தில் பிரபாகரன் உயிருடன் இருந்தாரா? போர் முறைமைக்கு முரணான வகையில் அவர் கொல்லப்பட்டாரா ? என்பவை விசாரணைகளின் மூலம் கண்டறியப்படும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

போர்க் குற்றச்சாட்டு தொடர்பாக ஏற்கனவே சர்வதேச தரப்பினர் அவதானித்து வரும் நிலையில், இப்போது அமைச்சர் சரத் பொன்சேகா கூறியுள்ள கருத்துக்கள்மேலும்சர்ச்சைகளைஎழுப்பியுள்ளன. அரசு இந்த விவகாரம் தொடர்பாக ஆராய்ந்து சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாகவும், வெள்ளைக் கொடி விவகாரத்திலும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் மூலமாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

அவ்வாறான தேவை இப்போது அரசுக்கு இல்லை. உள்ளக விசாரணைகள் மூலமாக இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எம்மால் முடியும். அதேபோல உள்ளகப் பொறிமுறைகள் சரியாகநடைபெறும். போரின் இறுதித் தருணங்கள் தொடர்பாக அரசு தீவிரமான விசாரணைகளை மேற்கொள்ளும்.

இராணுவம் செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்றாலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் இராணுவத்தை இலக்கு வைக்கும் நோக்கம் எமக்குக் கிடையாது. இறுதிப் போரில் பொது மக்கள் பாதிக்கப்பட்டனர். பொது மக்கள் காணாமற்போனதாகக் கூறப்படுகிறது. அதேபோல் பொது மக்கள் இராணுவம் வசம் சரணடைந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக பல கோணங்களில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உண்மைகளைக் கண்டறியும் நடவடிக்கைகள் பலமாக முன்னெடுக்கப்படும். சரத் பொன்சேகா பல இரகசியத்தகவல்களை முன்வைத்து வரும்நிலையில் அவரிடம் இருந்து உண்மைகளை அறியும் விசாரணையை ஆரம்பித்தல் மிகவும் சாதகமாக இருக்கும்.

இறுதிப்போர் தொடர்பாக உண்மையில் என்ன நடந்தது என்பதை அவர் நன்கு அறிந்தவர்.

மேலும் பிரபாகரன் தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துகளும் ஆராயப்படவேண்டும். அவர் போர் முடிந்த பின்னரும் உயிருடன் இருந்தாரா? என்பதை ஆராய வேண்டும்.

போர் விதிமுறைகளுக்கு முரணாக அவர் கொல்லப்பட்டிருந்தால் அவற்றையும் கருத்திற் கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளைக் கையாள வேண்டும் -என்றார். (ற-ஐ-5)

# ஒருங்கிணைந்த நேர அட்டவணை இ.போ.சவைப் பாதிக்கும்

கொழும்பு,மார்ச் 15
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்களுக்கும், தனியார்துறை பஸ்களுக்கும் ஒருங்கிணைந்த நேர அட்டவணை முறைமையை நடைமுறைப்படுத்துவது, இலங்கை போக்குவரத்துச் சபையைப் பாதிக்கும் என இ.போ.ச தொழிற் சங்கங்களின் ஒருங்கிணைந்தகூட்டணி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஒருங்கிணைந்த நேர அட்டவணை முறைமைக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் அனைத்துத் தொழிற்சங்கங்களும் 2004 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகவே எதிர்ப்புத் தெரிவித்துவந்துள்ளன.

இலங்கை போக்குவரத்துச் சபை தொழிற்சங்கங்களின் எதிர்ப்பை கவனத்திற் கொள்ளாது, ஒருங்கிணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்தினால் அதற்கு எதிராக கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையொன்றில் இறங்க வேண்டி ஏற்படும்என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-22)

# பிள்ளைகளை அழைத்துச் செல்ல சேலை அணியத் தேவையில்லை

கொழும்பு,மார்ச் 15
பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கூட்டிச் செல்ல வரும் தாய்மார்கள் சேலை உடுத்தியே வர வேண்டும்எனும்நடைமுறையை ரத்துச்செய்வதற்கு கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தீர்மானித்துள்ளார்.

சேலைக்குப் பதிலாக பொருத்தமான உடையொன்றை அணிந்து பாடசாலைக்கு வருவதற்கான வாய்ப்பை அவர்களுக்கு ஏற் படுத்திக் கொடுக்கத் தீர்மானிக் கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதைவிட கர்ப்பிணித் தாய்மாருக்கும் கூட சேலைக்குப் பதிலாக பொருத்தமான உடையொன்றுடன் பாடசாலைக்கு வருவதற்கு வாய்ப்பளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

பிரசவ மற்றும் பெண்ணியல் மருத்துவர்களின் ஆலோசனைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-22)

# இந்தியக் குடியரசுத் தலைவர் இலங்கைக்கு வர விருப்பம்

## நிதியமைச்சர் தகவல்

கொழும்பு, மார்ச் 15
விரைவில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிதி அமைச்சர் ரவி, கடந்த சனிக்கிழமை இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப்பைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே பிரணாப் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இரு நாடுகளினதும் பொருளாதார நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது என்று கூறப்படுகிறது.

இந்தப் பிராந்தியத்தில் இலங்கை பலமுள்ள ஒரு நாடாக மாறுவதற்கு, இந்தியாவின் உதவிகளையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று இந்தியக் குடியரசுத் தலைவர் தெரிவித் துள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் ஒன்றினது வெற்றி மற்ற நாட்டுக்கு முக்கியமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் விரைவில் இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நடந்த மாநாடு ஒன்றில் பங்கேற்பதற்குச் சென்றிருந்த போதே, நிதியமைச்சர், இந்தியக் குடியரசுத் தலைவரைச் சந்தித்துப் பேசியுள்ளார். (ற-ஐ-5)

# மின்சாரசபைத் தலைவரின் பதவி விலகல் நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 15.
இலங்கை மின்சார சபையின் தலைவர் அனுர விஜேபாலவின் பதவி விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று மின்வலு அமைச்சின் செயலாளர் சுரேன் படேகொட தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட மின்தடையைத் தொடர்ந்து இலங்கை மின்சார சபையின் தலைவர் அனுர விஜேபால தாம் பதவி விலகுவதாகத் தெரிவித்திருந்தார்.

'நல்லாட்சியின் சிறந்ததொரு முன்மாதிரியே எனது பதவி விலகல். கடந்த 6 மாதங்களில் மூன்று தடவைகள் நாடுதழுவிய ரீதியில் மின்சாரத் தடைகள் ஏற்பட்டன. இந்தச் சம்பவம் எனது தலைமையின் கீழ் ஏற்பட்டமைக்கு வருத்தம் தெரிவித்தே பதவி விலகுகின்றேன்' என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

நாடு முழுவதிலும் மின்சாரத் தடை ஏற்பட்டமைக்கு மின்சார சபையின் தலைவர் பொறுப்புச் கூற முடியாது என்பதால், இந்த பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று அமைச்சின் செயலாளர் சுரேன் படேகொட குறிப்பிட்டுள்ளார்.

இந்த மின்சாரத் தடைகள் நாசவேலை காரணமாக இடம் பெறவில்லை எனவும், அவை தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இடம்பெற்றவையே என்பது விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏதேனும் ஓர் மின் விநியோக நிலையத்தில் ஏற்படும் கோளாறு முழு நாட்டினதும் மின் விநியோகத்தைபாதிப்பது ஓர் பிரச்சினையே எனவும் அது குறித்து விசாரணை நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

# மகிந்த மிகவும் நல்லவர் சொல்கிறார் ஹிருணிகா

கொழும்பு, மார்ச் 15
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மிகவும் நல்லவர் என்று கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

கொலன்னாவ ரஜமகா விகாரையில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசாக்கு உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யார் அழுதாலும், யார் தேங்காய் உடைத்தாலும் இன்னமும் நான்கு ஆண்டுகளுக்கு இந்த நாட்டின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவே ஆட்சி செய்வார். இந்த அரசு பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நல்லவர். எனினும் அவரைச் சுதந்திரமாக நிம்மதியாக இருக்க சிலர் இடமளிப்பதில்லை என்றும் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புதிய கொடுப்பனவுக்கு இணக்கம்

கொழும்பு,மார்ச் 15
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புதிய கொடுப்பனவுகளைப்பெற்றுக்கொடுப்பதற்கு கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் அனைத்துக் கட்சிகளினதும் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அடுத்த வாரத்தில் சபாநாயகர் கரு ஜயசூரிய இந்தக் கொடுப்பனவுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கமைய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தொலைபேசிகளுக்கான கொடுப்பனவாக மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாவும், அலுவலகக் கொடுப்பனவாக மாதாந்தம் 75 ஆயிரம் ரூபாவும், வீட்டுவாடகைக் கொடுப்பனவாக மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

அத்துடன் வீட்டு வாடகைக் கொடுப்பனவானது, நாடாளுமன்றத்தில் இருந்து 25 கிலோ மீற்றருக்கு அப்பால் வசிக்கும் உறுப்பினர்களுக்கு மட்டுமே கிடைக்கும்.

நியமனம் செய்யப்பட்ட செயற்குழுக்களை பிரதி நிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கூட்டமொன்றுக்கு 4 ஆயிரம் ரூபாவும், செயற்குழுக்களின் தலைமைப் பதவியை வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கூட்டமொன்றுக்கு 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

இந்த அனைத்துக் கொடுப்பனவுகளையும் சேர்த்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு லட்சம் ரூபாவுக்குக் கிட்டிய தொகையொன்று எதிர் வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து அவர்களது சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ற-ஐ-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என்னைப் பழிவாங்குவதற்காக பிரபாகரனைக் கொண்டு வருவர்

## மகிந்த ராஜபக்ச எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 15
என்னைப் பழிவாங்குவதற்காக இப்போதுள்ளவர்கள் மீண்டும் பிரபாகரனைஉயிருடன்கொண்டு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, போர் விதிமுறைகளுக்கு முரணாகப் போரிடப்பட்டது என்று குற்றம் சுமத்தித்தன்னைப் போர்க் குற்றவாளியாக்கும் முயற்சிகள் தீவிரமாக இடம்பெறுகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

என்னைப் பழிவாங்கவும், எனது குடும்பத்தைத் தண்டிக்கவும் தற்போதைய அரசு தீவிரமாக முயற்சித்து வருகிறது. செய்யாத குற்றங்களுக்காக நாம் தண்டனை அனுபவித்து வருகிறோம். எனது புதல்வர் யோசித செய்யாத குற்றத்துக்காக சிறையில் உள்ளார். ரக்பி வீரர் தாஜுதீன் சாவு தொடர்பாக மற்றைய புதல்வர் நாமல் ராஜபக்சவைக் கைது செய்ய அரசு திட்டம் தீட்டுவதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவருகின்றன.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் புதிய சர்ச்சையைக் கிளப்பியுள்ளனர். நாம் எவ்வாறு போரை முன்னெடுத்தோம், அதற்கான செலவுகள் எப்படி மேற்கொள்ளப்பட்டன என்ற அனைத்தும் சரத் பொன்சேகாவுக்கு நன்றாகவே தெரியும். அவர் அப்போதைய இராணுவத் தளபதி என்ற வகையில் எமக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கினார். அதை நான் மறைக்காமல் கூறவேண்டும்.

ஆனால் அதையும் தாண்டி அவர் தனிப்பட்ட ரீதியில் செய்த தவறுகள் தொடர்பாகவும் எம்மிடம் பதிவுகள் உள்ளன. அந்தக்காரணிகளை எல்லாம் நாம் ஊடகங்களிடம் முன்வைத்தால், இன்று அவருக்கு இருக்கும் கொஞ்ச நஞ்ச மரியாதையும் பறிபோய் விடும். அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துகளை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதேபோல் போர் எப்போது முடிவுக்கு வந்தது, பிரபாகரன் கொல்லப்பட்டரா? இல்லையா? என்ற தகவலும் எனக்குத் தெரியும்.

சரத் பொன்சேகா மட்டுமே எமக்குத்தகவல்களை வழங்கவில்லை. இராணுவத்தின் பல வழிகளில் இருந்தும், எமக்குத் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டு கிடைத்துக் கொண்டிருந்தன. சரத் பொன்சேகா அதிகாரபூர்வமாக செயற்பட்ட ஓர் அதிகாரி மட்டுமேயாவர். அதைவிட அவர் பல இரகசியங்களை அறிந்திருக்கவில்லை.

> விடுதலைப் புலிகளுக்கு நாம் பணம் கொடுத்ததாகவும், சுனாமி உதவி நிதி என்ற பெயரில் நாம் புலிகளைப்பலப்படுத்தியதாகவும் இன்று ஒரு சிலர் குற்றம் சுமத்தி வருகின்றனர். இது முழுப் பொய்யாகும். நாம் புலிகளை பலப்படுத்த நினைத்திருந்தால் பிரபாகரனைக் கொன்றிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

இப்போதும் கூட, ஐக்கிய தேசியக் கட்சியினர் தனிப்பட்ட பழிவாங்கல் மற்றும் போர்க் குற்றச் சாட்டுகள் மூலம் என்னையும் கோத்தாபய ராஜபக்சவையும் பழிவாங்கப் பார்க்கின்றனர். அதற்குச் சரத் பொன்சேகா உடந்தையாகச் செயற்படுகிறார். தேசியப் பட்டியல் மூலம்நணில்அவருக்கு வாழ்க்கை கொடுத்துள்ளார். அந்த நன்றிக்கடன் இப்போது வெளிப்படுகிறது.

பிரபாகரன் கொல்லப்பட்டபின்னரேநான் போர் முடிவடைந்ததை அறிவித்தேன். அவரது உடலை எமது இராணுவம் உறுதிப்படுத்தியது. தலையில் துப்பாக்கி ரவைகள் பட்டு தலை சிதைத்த நிலையில் அவரது உடல் கிடப்பதாக ஒளிப்படங்களுடன் எனக்கு அந்த நேரத்திலேயே இராணுவம் தெரிவித்தது. இவை நடந்த போது சரத் பொன்சேகா எம்முடன் இருக்கவில்லை. அவ்வாறு இருக்கையில் அவர் கூறும் கதைகளை எவரும் நம்பப் போவதும் இல்லை. போர் விதிமுறைகளுக்கு முரணாக நாம் போரிட்டோம் என்று சித்தரித்து எம்மை போர்க் குற்றவாளியாக்கும் முயற்சிகளின் விளைவுகளே இவை.

விடுதலைப் புலிகளுக்கு நாம் பணம் கொடுத்ததாகவும், சுனாமி உதவி நிதி என்ற பெயரில் நாம் புலிகளைப்பலப்படுத்தியதாகவும் இன்று ஒரு சிலர் குற்றம் சுமத்தி வருகின்றனர். இது முழுப் பொய்யாகும். நாம் புலிகளை பலப்படுத்த நினைத்திருந்தால் பிரபாகரனைக் கொன்றிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

நாட்டையும் மக்களையும் விடுவிக்கவும்,பலமான நாடாக கட்டியெழுப்பவுமே நாம் போரைத் தைரியமாக எதிர்கொண்டோம். எனக்கு முன்னிருந்த தலைவர்களால் முடியாத காரியத்தை நாம் செய்து காட்டியதே இன்று எவராலும் பொறுத்துக் கொள்ள முடியாத காரியமாக மாறியுள்ளது.

இப்போது இருக்கும் நிலைமையில் என்னைப் பழிவாங்கும் ஒரே நோக்கத்தில் பிரபாகரனை மீண்டும் உயிருடன் கொண்டு வந்தாலும் ஆச்சரியமில்லை. இன்னும் சில நாள்களில் அந்தச் செய்தியும் ஊடகங்களில் வெளிவரும் - என்றார். (ஐ-ஐ-5)

## என்னை நேசிக்கும் மக்களுக்காக மீண்டும் அரசியலுக்கு வருவேன்

### மகிந்த எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 15
மக்கள் என்னை இன்னமும் நேசிக்கின்றார்கள். அவர்களுக்காக நான் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடுவேன். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சிங்களஊடகமொன்றுக்குவழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஒவ்வொருவரது விருப்பு வெறுப்புக்களுக்கு அமைய அரசியலில் ஈடுபட முடியாது. பொது மக்களின் கோரிக்கைகளுக்கு அமையவே நான் அரசியலில் ஈடுபடுவேன். நாட்டில் தற்போது நிலவி வரும் நிலைமைக்கு அமைய நான் செல்லும் இடத்தில் எல்லாம் மக்களின் பேராதரவும் கிடைக்கப் பெறுகின்றது.

என்னைச் சுற்றி இணைந்து கொள்ளும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது.

நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் கைவிடமாட்டேன். எனது அரசியல் வாழ்க்கை பற்றி ஒவ்வொரு கதை சொல்லப்படுகின்றது. மக்கள் என்னை நேசிக்கின்றார்கள். அவர்களின் தேவைக்காக நான் அரசியலில் ஈடுபடுவேன். அதனை எவராலும் தடுக்க முடியாது - என்றார். (ஐ-ஐ-5)

## எரிபொருள் விலை வீழ்ச்சியால் நாட்டு மக்களுக்கு பயன் இல்லை

### அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 15
உலக சந்தையில் எரிபொருள்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ள போதிலும்,நாட்டில் அதன் பயனை மக்களுக்கு ஒரே முறையில் வழங்க முடியாதுள்ளது என்று பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்முகம்கொடுத்துள்ள பலபில்லியன்ரூபாகடன்சுமையே இதற்குக் காரணம் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உலகசந்தையில்மசகு எண்ணெயின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், உள்நாட்டில் அதன் பலனை பொது மக்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்காமை குறித்து அமைச்சரிடம் வினவியபோதே அவர் இவ்வாறுகூறியுள்ளார்.

இன்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முகம்கொடுத்துள்ள கடன் பிரச்சினையால், கூட்டுத்தாபனத்துக்கு மாத்திரமன்றி, முழு நாட்டின் பொருளாதாரத்துக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தற்பொழுது 365 பில்லியன் கடனை பல்வேறு நிறுவனங்களுக் கும் வழங்க வேண்டியுள்ளது. இந்தக்கடன்களுக்கு மாதாந்தம் வழங்க வேண்டிய வட்டி 1.2 பில்லியன்களாகும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-ஐ-5)

## டெங்கை ஒழிக்க நிரந்தரப் படை



கொழும்பு, மார்ச் 15
டெங்கு நுளம்பை ஒழிக்கும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நிரந்தர செயலணிப் படையொன்றை நிறுவுவதற்கு சுகாதாரப் போசாக்குகள் மற்றும் சுதேச வைத்திய அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

சுகாதாரப் போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்னவின் பணிப்புரைக்கமைய ஆயிரம் உதவி உத்தியோகத்தர்களைக் கொண்ட நிரந்தர செய லணிப் படையை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளை முறையான விதத்தில் கொண்டு செல்வது தொடர்பாக ஜனாதிபதி டெங்கு ஒழிப்புச் செயலணிப் படையை விரிவுபடுத்தி ஒருங்கிணைத்து விடுமாறும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-ஐ-4,22)

## குற்றவாளிகளுக்கு உதவும் அதிகாரிகள் மீது நடவடிக்கை

### அமைச்சர் டீ.எம்.சுவாமிநாதன் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 15
சிறைச்சாலைகளில் இருந்தவாறே குற்றவாளிகளுக்கு உதவும் சிறைச்சாலைகளின் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சிறைச்சாலைகளின் மறுசீரமைப்புகள் புனர்வாழ்வு, மீள்க்குடியமர்வு மற்றும் இந்து சமய விவகாரங்கள் அமைச்சர் டீ.எம்.சுவாமிநாதன் தீர்மானித்துள்ளார்.

சிறைச்சாலைகளின் உத்தியோகத்தர்களை ஒரே இடத்தில் பணியாற்ற அனுமதிக்காது சிறைச்சாலைகளுக்குள் இடமாற்றும் செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது-

சிறைச்சாலைகளுக்குப்போதைப் பொருள்கள் கொண்டு வரப்படுவதைத் தடுப்பதற்கு வெளிநாட்டிலிருந்து அல்சேசன், ஜேர்மன் பெர்ட்,லப்ரடோ போன்ற இந்து நாய்கள் வாங்கப்படவுள்ளன. அதேவேளை போதைப்பொருள்களை மோப்பம் பிடிப்பதற்கு பொலிஸாரால் பயிற்சியளிக்கப்பட்டுள்ள நாய்கள் இதற்காக ஈடுபடுத்தப்படவும் உள்ளன.

சிறைச்சாலைகளிலுள்ள சாவுத் தண்டனை தீர்ப்புகளுக்கு உள்ளாகியிருக்கும் ஒரு சில சிறைக் கைதிகளால் இயக்கப்படும் பாதாள உலகக் குழுக்கள் தொடர்பில் சிறைச்சாலைகளின் புலனாய்வுப் பிரிவுகளினால் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. பல்வேறு பிரதேசங்களில் உள்ள, கூட்டாகச் செயற்பட்டு குற்றச்செயல்களைப் புரிவோர் சிறைச்சாலைகளில் இருந்தவாறு பிரதான பாதாள உலகக் குழுவை இயக்குவது விசாரணைகளிலிருந்துவெளிப்பட்டுள்ளன.

அத்தகைய குழுக்களுக்கு ஒத்துழைப்பை வழங்கும் சிறைச்சாலைகளின் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டுசேவையிலிருந்து நீக்குவதற்கும்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (ஐ-ஐ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அதிகாரப் பகிர்வு என்பது ஏய்க்காட்டும் கோஷமா...?

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்கள் ஆகிய இரண்டும் மிகப் பெரிய அளவில் திட்டமிட்ட முறையில் அதிகரித்துச் செல்வது, மக்களுக்குப் பெரும் பாதிப்புத் தருவது தடுக்கப்பட்டாக வேண்டும். அது குறித்து பல தடவைகள் இப்பத்தியில் அவ்வப்போது வெளிப்படுத்தி உள்ளோம்.

அதேவகை சார்ந்து, குடாநாட்டுக்கு நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்ட சட்டம் ஒழுங்குத்துறை அமைச்சர் சாகல ரத்னாயக்க, பொருத்தமான அறிவுறுத்தல்களை வழங்கினார்.

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை, எந்த வடிவிலும் பாதிப்புறாத வகையில் பார்த்துக் கொள்வது, பொலிஸாரின் தலையாய கடமை என்றும் அவர் அறிவுறுத்தினார். குற்றச்செயல்கள் குறித்து உடனுக்குடன் விசாரணைகளை மேற்கொண்டு, மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பொலிஸார் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் இடித்துரைத்துச் சென்றுள்ளார்.

அவர் அறிவுறுத்திச்சென்ற செயற்பாடுகள், வெறும் கூட்ட அறிக்கையாக (Minute) அமையாமல், செயல் அளவில் மேலுயர வேண் டும். அதனையே, நாளுக்கு நாள் பாதிப்புறும் மக் கள் எதிர்பார்க்கின்றனர்.

யாழ்.தீபகற்பம், ஒரு கால வேளையில் குற்றமற்ற--அற்ப குற்றச் செயல்களையே கொண்ட--மாவட்டமாக விளங்கியது என்பதனைப் புள்ளி விவரங்கள் தொட்டுக்காட்டியுள்ளன.

உதாரணத்துக்கு, சுமார் பதினான்கு வருடங்களுக்கு முன்னர்--2002 ஆம் ஆண்டில்--யாழ்ப்பாணக் குடாநாட்டில் குற்றச் செயல்கள் குறைந்து விட்டதாக, பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டமை இங்கே தொட்டுக்காட்டப்பட வேண்டிய ஒன்றே. அதற்கான ஒரு பின்னணியும் அப்போது அமைந்திருந்தமை ஞாபகத்துக்கு வருகிறது. அதனைக் குறிப்பிடாமல் தவிர்க்க முடியவில்லை.

இப்போதெல்லாம், குற்றச் செயல்கள் தொடர்பாக கைது செய்யப்படுவதும், பின்னர் விடுவிக்கப்படுவதும், கேத்திர கணிதத்தில் படித்த ஓர்அலகாகத் தொடர்கிறது! அதனைத் தட்டிக்கேட்க எவரும் இலர் என்ற நிலையே வெளிச்சமாகத் தெரிகிறது!

இந்தச் சந்தர்ப்பத்தில், சட்டம், ஒழுங்கு அதிகாரத்தை வடக்கு மாகாண சபையிடம் வழங்குவது குறித்துக் கொழும்பு அரசு ஏன் சிந்திக்கக் கூடாது? ஏனைய மாகாண சபைகளுக்கும் அந்த அதிகாரத்தை வழங்குவதன் ஊடு நாடளாவிய மட்டத்தில் குற்றச்செயல்களைக் குறைக்கவும் கட்டுப்படுத்தவும் வழிபிறக்கும் இல்லையா...?

மாகாண சபைகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டே சட்டமும் ஒழுங்கும் இருப்பதாக நாட்டின் அரசியல் சாசனம் தெரிவிக்கிறது. ஆயினும் கொழும்பில் இயங்கும் நாடாளுமன்றம் அதனை வழங்குவதற்குப் 'பிகு' பண்ணுவதாகத் தகவல்கள் வெளிப்பட்டுள்ளன!

அதுவே நியதியாக அமையவேண்டும் என்று கொழும்பின் மத்திய அரசு கருதினால், அல்லது நினைத்தால், அதிகாரப் பகிர்வு என்ற சொற்பதம் வெறும் ஏய்க்காட்டும் உத்தியே. அதுவே தொடர்ந்தால் நல்லிணக்க அரசு என்ற பதம் வெறும் தந்திரமாகச் சளிந்து போகும்...! அல்லவா...?

# அதிரடி அரசியல் நகர்வுகளே இன்றைய அரசுக்குத் தேவை

சரா





2015 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் நாட்டில் நல்லதொரு அரசியல் திருப்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் தம்மை இணைத்துக் கொண்டு 40 ஆண்டுகால அரசியல் அனுபவத்தைப் பெற்றிருந்த, பொலனறுவை விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த, மக்களின் உணர்வுக்கு மதிப்பளிக்கும் மைத்திரிபால சிறிசேனவை நாட்டுமக்கள் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்திருந்தனர். ஒரு விதத்தில் பார்க்கும்போது பொலனறுவை விவசாயி ஒருவரின் புதல்வரான இவரிடம் காணப்படும் ஜனநாயகப் பண்புகளே மக்கள் இவரை நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுப்பதற்குப் பெரிதும் காரணமாகியிருக்கக் கூடும் எனக் கூறுவதில் தவறேதும் இருக்க முடியாது.

ஒரு காலகட்டத்தில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஏழை விவசாயி ஒருவரின் மகனான ஆபிரகாம் லிங்கன் தெரிவு செய்யப்பட்டிருந்தமைக்கும் கூட அவரிடம் காணப்பட்ட ஜனநாயகப் பண்புகளே பெரிதும் காரணமாயிருந்தன. அதேவேளை, அவர் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டிருந்ததும், மக்களோடு மக்களாக மிக எளிமையான வாழ்க்கையைப் பிரதிபலித்திருந்ததும் அவரை உயர்த்தியிருந்தது.


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம்ஆபிரகாம்லிங்கனின் ஜனநாயகப் பண்புகள், மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் தன்மைகள், ஆடம்பரங்கள், ஆர்ப்பாட்டங்கள் இல்லாத எளிமையான போக்குகள் காணப்படுவது தொடர்பாக சமுதாயத்தில் புகழ்ந்து பேசப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைசேர்ந்து ஜனநாயக நல்லாட்சியொன்றை ஏற்படுத்தும் உயரிய நோக்குடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசொன்றை நிறுவிக் கொண்டிருந்தவேளையில், இவருக்கு முன் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கொடிகட்டிப்பறந்த முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்ட அவரது அரசியல் சகாக்களினால்திறைசேரியின்கையிருப்பு முழுமையாகவே காலி செய்யப்பட்டிருந்தது. நாட்டின் நிதிக்கையிருப்பை வெறுமையாக்கி, வெளிநாட்டுச் செலாவணிக் கையிருப்பும் தீர்ந்து போய், நாட்டின் நிதிநிலைமை வெறுமை கண்டிருந்த நிலையிலும், நாட்டின் தலைமையை ஏற்று, நாட்டை நிர்வகிக்க பல்வேறு சவால்களை எதிர் கொண்டிருந்த போதிலும், அவை அனைத்தையும் தமது அரசியல் மதிநுட்பத்தைப் பயன் படுத்தி வென்று முறியடித்து பல

> ஒரு கால கட்டத்தில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஏழை விவசாயி ஒருவரின் மகனான ஆபிரகாம் லிங்கன் தெரிவு செய்யப் பட்டிருந்தமைக் கும் கூட அவரிடம் காணப்பட்ட ஜனநாயகப் பண்புகளே பெரிதும் காரணமாயிருந்தன.

சத்திய சோதனைகளின் மத்தியில் ஓராண்டு ஆட்சியைப் பூர்த்தி செய்திருப்பதென்பது உண்மையில் பாராட்டிப் பேசப்பட வேண்டிய சாதனையொன்றுதான்.


அதேவேளை, இன்று வரையிலான இந்த மைத்திரி-ரணில் கூட்டு அரசை உண்டு -இல்லையென்றாக்கிவிடுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த தலைமையிலான அவரது தரப்பு, முன்னர் அவரை அண்டிப் பிழைப்பு நடத்திய தரப்புக்கள், ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய, குறிப்பாக விமல் வீரவன்ச உள்ளிட்ட நிலை கெட்டுப்போன தரப்பினர் பட்ட பாடுகளை இந்த நாட்டு மக்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்த 2016ஆம் ஆண்டிலும் அதே சக்திகள் நாட்டு மக்களை இந்த அரசுக்கு எதிராக குறிப்பாக மைத்திரி - ரணில் கூட்டுத் தலைமைமீது கசப்புணர்வுகளை ஏற்படுத்திவிட தம்மாலான அனைத்து முயற்சிகளையும் மிக மும்முரமாக செய்தவண்ணமேயுள்ளன என்பதையும் நாடறியும். அந்தச் சதி முயற்சிகளின் சில அம்சங்களாக மகிந்த தரப்பினரின் சுதந்திரக் கட்சியைப் பிளவு படுத்தும் முயற்சி, அத னோடு இணைந்ததொன்றாகப் புதிய அரசியல் கட்சியொன்றை உருவாக்கும் எத்தனங்களைக் குறிப்பிடலாம். மறுபுறத்தில் மைத்திரி - ரணில் அரசின் ஊழல் மோசடி ஒழிப்புக் கொள்கையின் உடனான நீதித்துறை நடவடிக்கைகள் மகிந்த தரப்பினருக்குப் மிகப் பெருத்த பாதகங்களையும் சிரமங்களையும் ஏற்படுத்தியுள்ளதால், இந்த அரசின் மீது அவர்களால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களும் கெட்ட பெயர்களும் மைத்திரி - ரணில் ஆட்சிக்குப் பாதகத்தையும், சில பல சாதகமற்ற நிலைப்பாடுகளையும் உருவாக்கி வருவதைக் காண முடிகிறது.

அதேவேளை, தமிழ் மக்களின் மீள் குடியமர்வு, காணிப் பிரச்சினைகள் சம்பந்தமான நகர்வுகளில் அவர்களது மனங்களைப் புண்ணாக்கிவிடும் விதமான நடவடிக்கைகள் தவிர்க்கப்படல் வேண்டும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆரம்ப கால கொள்கை கோட்பாடுகள் மீது தமிழர் தரப்புக்கு சந்தேகங்களை ஏற்படுத்திவிடுவதற்கு வழி சமைத்து வருவதானது இன்றைய அரசின் முன்நகர்வுகளுக்கும் சர்வதேச வரவேற்புகளுக்கும் பாதகங்களை ஏற்படுத்திவிடக்கூடும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.முபாறக்



# முஸ்லிம் மக்களுக்கு எதிரான டொனால்ட் ட்ரம்ப்

அமெரிக்கா வல்லரச நாடு என்பதால் அங்கு என்ன நடந்தாலும் முழு உலகத்துக்கும் தெரிய வரும்; முழு உலகிலும் பரபரப்பாகப் பேசப்படும். ஒரு சிறிய விடயம் கூட பெரிதாகக் காட்டப்படும். சர்வதேச ஊடகங்களில் இருந்து அமெரிக்காவால் தப்பிக்க முடியாது.

அப்படியானதொரு நிலையில், அந்த நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் என்றால் சொல்லவும் வேண்டுமா? இந்த வருடம் நவம்பர் மாதம்தான் அந்தத் தேர்தல் இடம்பெறப் போகின்றது. என்றாலும் கூட, கடந்த வருடத்தின் இறுதியில் இருந்தே அதன் பரபரப்புத் தொடங்கிவிட்டது.

இந்தத் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான கட்சிகளான ஜனநாயகக் கட்சியும் குடியரசுக் கட்சியும் தத்தமது வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் தேர்தலில் ஈடுபட்டு வருகின்றன.

வேட்பாளர் நியமனத்தைப் பெறுவதற்கான இந்தப் போட்டியில் ஜனநாயக் கட்சியின் சார்பில் ஹிலாரி கிளின்டனும், குடியரசுக் கட்சியின் சார்பில் டொனால்ட் ட்ரம்பும் முதலிடத்தில் உள்ளனர்.

இடம்பெற்றுக்கொண்டிருக்கும் இந்த வேட்பாளர் தெரிவுத் தேர்தலாலும், அதனையொட்டிய தொலைக்காட்சி விவாதங்களாலும், இப்போது அமெரிக்காவின் தேர்தல் களம் களை கட்டத் தொடங்கியுள்ளது. அமெரிக்கத் தேர்தல் வரலாற்றில் இதுவொரு வித்தியாசமான தேர்தலாகும். அதற்குக் காரணம் கோமாளி ஒருவர் அதில் போட்டியிடுவதுதான்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய செயற்பாடுகள் கடந்த வருடமே தொடங்கிவிட்டன. அந்த வருடம் உலகில் இடம்பெற்ற சில விரும்பத்தகாத நிகழ்வுகளே டொனால்ட் ட்ரம்பைப் பிரபல்யப்படுத்தின.

ஈராக் மற்றும் சிரியா ஆகிய நாடுகளைத் தளமாகக்கொண்டு இயங்கும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்து செயற்படும் நாடுகளுள் பிரான்ஸும் ஒன்று. தமக்கு எதிராகச் செயற்படும் நாடுகளைப் பழிவாங்கிவரும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் கடந்த வருடம் பிரான்ஸையும் பழிவாங்கினர். அந்த நாட்டின் தலைநகர் பரிஸில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தி 130 பேரைக் கொலை செய்தனர்.

> அமெரிக்காவின் பள்ளிவாசல்கள் அனைத்தும் நீதிமன்ற உத்தரவின்றி சோதனை செய்யப்பட வேண்டும்; அமெரிக்க முஸ்லிம்களை தனியாக அடையாளம் காண்பதற்காக அவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும்; முஸ்லிம்களை அமெரிக்காவுக்குள் நுழையவிடக் கூடாது. பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக பயங்கரவாதிகளின் உறவினர்கள் சித்திரவதை செய்யப்பட வேண்டும் என்றெல்லாம் டொனால்ட் ட்ரம்ப் உளறி வருகின்றார்.

இந்தத் தாக்குதல் மேற்கு நாடுகளில் எதிரொலித்தது. எல்லா நாடுகளும் தத்தமது பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்காகப் பயங்கரவாதிகளைத் தேடுகின்றோம் என்ற பெயரில் அப்பாவி முஸ்லிம்களைப் பழிவாங்கின. அவர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகினர்.

இந்தப் பிரான்ஸ் தாக்குதல் சம்பவத்தை தேர்தல் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தத் தொடங்கினார் ட்ரம்ப்; முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தைக் கக்கத் தொடங்கினார்.

பிரான்ஸ் சம்பவத்தைத் தொடர்ந்து அமெரிக்காவின் கலிபோர்னியாவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து ட்ரம்ப் மேலும் உசாரானார். அமெரிக்காவின் பள்ளிவாசல்கள் அனைத்தும் நீதிமன்ற உத்தரவின்றி சோதனை செய்யப்பட வேண்டும்; அமெரிக்க முஸ்லிம்களை தனியாக அடையாளம் காண்பதற்காக அவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும்; முஸ்லிம்களை அமெரிக்காவுக்குள் நுழையவிடக் கூடாது என்றெல்லாம் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதத்தைக் கக்கத் தொடங்கினார். அது மாத்திரமன்றி, பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக வித்தியாசமான யோசனைகளை எல்லாம் முன்வைத்தார். பயங்கரவாதிகளின் உறவினர்கள் சித்திரவதை செய்யப்பட வேண்டும். நான் ஜனாதிபதியானால் அதற்கு அனுமதி வழங்குவேன் எனக் கூறினார்.

முஸ்லிம்களுக்கு எதிரான நிலைப்பாட்டுக்கு அப்பால் அவரது வெளிநாட்டுக் கொள்கைகளும் கேலிக் கூத்தாகவே இருக்கின்றன. அமெரிக்காவையும் மெக்சிக்கோவையும் பிரிப்பதற்காக சுவர் எழுப்பப்பட வேண்டும் எனக் கூறியுள்ளார். அத்தோடு, பிரிட்டனுக்கு எதிராகவும் மிக மோசமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். இதனால் அவரை பிரிட்டனுக்குள் நுழைவதற்கு அனுமதிக்கக்கூடது எனக் கோரி பிரிட்டன் நாடாளுமன்றில் பிரேரணையும் சமர்ப்பிக்கப்பட்டது.

இருந்தும், அவர் தனது கோமாளித்தனத்தை நிறுத்திக் கொள்வதாக இல்லை. கடந்த வாரம் கூட அமெரிக்க முஸ்லிம்களுக்கு எதிராகக் கருத்தொன்றைத் தெரி வித்தார். இஸ்லாம் அமெரிக்காவுக்கு முழுமையாக எதிரானது என அவர் கூறினார்.

அமெரிக்கா என்பது அடிப்படையில் முஸ்லிம்களுக்கு எதிரானதுதான். முஸ்லிம்களிடையேயும் முஸ்லிம் நாடுகளிடையேயும் பிளவுகளை ஏற்படுத்தி அந்தச் சமூகத்தைப் பலவீனமான சமூகமாக வைத்திருக்க வேண்டும் என்பதே அதன் திட்டம். அந்தத் திட்டம் இப்போது முஸ்லிம் நாடுகளில் மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இலங்கையின் ஞானசார தேரரைப்போல் நடந்துகொள்ளும் டொனால்ட் ட்ரம்ப் ஒருவேளை அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் அமெரிக்கா மட்டுமல்ல முழு உலகமும் அவமானப்பட வேண்டிவரும். அமெரிக்காவின் முஸ்லிம்கள் மாத்திரமன்றி, உலக முஸ்லிம்கள் அனைவரும் இவரால் துன்பப்பட வேண்டி வரும். இவரது கையில் அதிகாரம் கிடைத்தால் அவர் எதைப்பற்றியும் சிந்திக்காது எதையும் செய்வார் என்பதை இதன் மூலம் விளங்கிக்கொள்ளலாம். இவரால் உலக முஸ்லிம்கள் பாதிக்கப்படு வது மாத்திரமன்றி அமெரிக்காவுடனான ஏனைய நாடுகளின் உறவிலும் பாதிப்பு ஏற்படும்.

# ஆசிரியப் பெருந்தகைகள் இவ்வாறு செய்யலாமா?

அனைத்துப் பட்டதாரிகளுக்கும் வேலை வழங்குக என்ற சுலோகம் கொண்ட சுவரொட்டிகள் யாழ்.குடாநாடெங்கும் பரவலாகக் காணப்பட்ட வேளையில் இங்கிலாந்தில் உள்ள கடும் பனிக்குளிருக்குத் தப்பி யாழ்ப்பாணம் வந்த எனக்கு இங்குள்ள பனிக்குளிர் ஒரு பொருட்டாகத் தென்படவில்லை. அதிகாலையில் சித்திவிநாயகர் கோயிலுக்குச் சென்று பூசையில் கலந்து கொண்டு வழிபட்டுப் பின்னர் திருமுறை ஓதுத லில் பங்குபற்றி சந்தோசமாகப் பொழுதைப் போக்கும் வேளையில் யாழ்.அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலைவன் பாடசாலை அதிபர் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிக்கு என்னைச் சிறப்பு விருந்தினராக அழைக்க விரும்புவதாகவும் கடந்த இரு வரு டங்களாகச் செய்த நிதி உதவியை இந்த வருடமும் செய்யும் வண்ணமும் கேட்டுக் கொண்டார். நான் பிறந்த மண்ணின் பாடசாலை மாணவர்களின் நலன் விரும்பி என்ற முறையில் ஒத்துக்கொண்டேன். (சென்ற வருடம் 50,000 ரூபாக்கு ஒரு (டேபிள் டென்னிஸ் செற்) அன்பளிப்புச் செய்துள்ளதும் குறிப்பிடத் தக்கது.)

நான் அந்தக் கிராமத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் அந்தப் பாடசாலைப் பெற்றோர்களிடம் அவர்களின் பிள்ளைகளின் கல்வியைப் பற்றி விசாரிப்பதுண்டு. அந்தப் பெற்றோர்கள் பின்வரும் விடயங்கள் பற்றிக் குறை கூறிக் கவலைப்பட்டார்கள். 1. அந்தப் பாடசாலை ஆசிரியர்கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை எடுப்ப தில்லை. மாறாக அந்தப் பிள்ளைகளைப் பிரத்தியேக வகுப்புக்கு அனுப்புமாறு பெற்றோர்களைக் கேட்டுக் கொள்வார்கள்.

2. ஆசிரியர்களின் வருகை பெரும்பாலும் காலை 8.30 மணிக்குப் பிற்பாடுதான். அத்துடன் பி.ப 1.30 மணிக்கு முதல் பாடசாலையை மூடி விடுவார்கள். காரணம் அவர்கள் தங்கள் பிள்ளைகளை வேறு பாடசாலையில் சேர்த்து விட்டு பள்ளிக்கூடம் விட்டதும் கூட்டப்போக வேண்டும். அப்படிப் பல்வேறு காரணங்கள்.

3. தரம் 5 வரை உள்ள இந்தப் பாடசாலையில் மொத்தம் 16 பிள்ளைகளே. ஆனால் அதிபர் உட்பட மொத்தம் 7 ஆசிரியர்கள் கடமை புரிகின்றார்கள் என அறிகின்றேன். அதிலும் ஆங்கில ஆசிரியர் இல்லை என்பதால் ஆங்கிலம் கற்பிப்பதே இல்லை. போர்ச்சூழலின் முன்னர் ஓர் ஆசிரியரே எல்லாப் பிள்ளைகளையும் கவனித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 4. ஏ9 வீதியிலிருந்து கிழக்கே 5 கிலோமீற்றர் தூரத்திலுள்ள இந்தக் கிராமத்துக்குப் போக்குவரத்துக் கஷ்டம் என்று இந்த ஆசிரியர்கள் சம்பளத்துக்கு மேலதிகமாக 2,500 ரூபா சம்பளம் பெறுகின்றார்கள் என அறிகின்றேன். எனவே கூடுதலான சம்பளமும் பெற்றுக்கொண்டு தங்கள் வசதிக்கு ஏற்ற பாடசாலையாகவே எடுத்துக் கொண்டார்கள். இதனைத் தட்டிக் கேட்க எங்களில் ஒருவரும் இல்லை என்றும் கூறினார்கள். 5. அண்மையில் எமது கிராமத்தைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் இந்தப் பாடசாலைக்கு மாற்றலாகி வந்து நேரத்துக்கு வந்து பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளில் அக்கறை எடுத்தார். இதனால் அதிபர் உட்பட மற்றைய ஆசிரியர்கள் இவருடன் தனிப்பட்ட கோபம் கொண்டு ஒரு சில பெற்றோர்களுடன் சேர்ந்து திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்தும் அது பயன் அளிக்கவில்லை என அறிகின்றேன்.

எனவே என்னிடம் பணம்பெற்றுக்கொண்டு விளையாட்டு, பரிசளிப்பு நிகழ்வின் போது எனக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தாலும் நாங்கள் அங்கு (இங்கிலாந்தில்) அந்தக் குளிரிலும் கஷ்டப்பட்டு வேலை செய்து சேமித்துப் பணம் அனுப்பினாலும், இந்த ஆசிரியர்கள் அதன் பெறுமதி தெரியாமல் ஆசிரியத் தர்மத்துக்கு எதிராகப் பொறுப்பற்ற முறையில் செயற்படுகின்றார்கள் என்ற எனது உள்ளக் குமுறலை எனது உரையில் கூறியிருந்தேன். மற்றும் பாடசாலை அபிவிருத்தி கருதி அந்தப் பாடசாலையின் மைதானத்தைத் திருத்துவதற்கு அங்குள்ள இந்தப் பாடசாலையின் நலன்விரும்பிகளுடன் நிதி வசூலித்து அனுப்ப முடியும் என்று குறிப்பிட்டிருந்தேன். உடனே ஓர் ஆசிரியரைத் தவிர மற்றைய ஆசிரியர்கள் விளையாட்டு நிகழ்வு என்றும் பாராமல் கூக்குரல் இட்டார்கள். ஓர் ஆசிரியர் இந்தப் பாடசாலையை விட்டு விலகப்போவதாக மிரட்டல் விட்டு தனது கடமையைத் தொடர்ந்து செய்ய மறுத்துவிட்டார். இன்னும் ஓர் ஆசிரியை அழுது புலம்பத் தொடங்கி விட்டார். அத்துடன் பெற்றோர்களில் ஒருவர் (பாடசாலை அபிவிருத்தி சபையின் செயலாளர்) நாங்கள் கௌரவித்ததன் பின்னர் இப்படிப் பேசலாமா? என்று விரல் நீட்டி என்னை அடிக்கவும் ஆயத்தமாக இருந்தார். இவ்வளவுக்கும் அதிபர் எனக்கு ஒருவித பாதுகாப்பும் தராமல் மன்னிப்புக் கோராமல் நான் கூறியது பிழை என்று மைக்கில் பேசிக்கொண்டு இருந்தார். சிறப்பு விருந்தினர் என்று என்னை வலிய அழைத்துவிட்டு இதுவா இவர்கள் செய்யும் கௌரவம்? இதுவா ஆசிரிய தர்மம். அனைத்துப் பட்டதாரிகளுக்கும் வேலை வழங்குக என்று வேலை இல்லாப் பட்டதாரிகள் கோஷம் போடும்போது, இவர்கள் இவ்வாறு செய்யலாமா? நிகழ்வுக்கு அன்று பிரதம விருந்தினராக வந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் சண். தயாளன் உட்பட கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளிடம் இந்தக் கேள்வியை உதயன் மூலம் கேட்க விரும்புகின்றேன்.

*த.செல்வரத்தினம், 120, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## மூவரைக் குதறி கொன்றது கரடி

புதுடில்லி, மார்ச் 15
இந்தியாவின் மத்திய பகுதியில் நேற்று முன்தினம் கரடி ஒன்று 3 பேரைக் கடித்துக் கொன்றுள்ளது எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.
கடந்த சனிக்கிழமை மலைப் பழங்குடி கிராம வாசிகள் இருவரைக் கரடி கடித்துக் குதறிக் கொன்றதை அடுத்து சட்டீஸ்கரா மாநிலத்தில் பொலிஸார் கரடியை வேட்டையாடத் திட்டமிட்டனர். வன அதிகாரிகளுடன் சென்று தேடினார்கள். இதன்போது வன விலங்கு அதிகாரியொருவரைக் கரடி தாக்கியது. இதனால் அவர் உயிரிழந்தார். உடனடியாகப் பொலிஸார் கரடியைச் சுட்டுக் கொன்றனர் எனப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.
கரடி மிகவும் கோபமாக வனத்துறை அதிகாரியைத் தாக்கியது, பாதுகாப்புக் கருதி வேறு வழியின்றி அதனைச் சுட்டுக் கொன்றோம். அது எல்லோரையும் தாக்க ஆரம்பித்தது என அவர் மேலும் தெரிவித்தார்.
உணவுக்காகக் காட்டுக்குள் சென்ற பழங்குடியினர் வீடு திரும்பாமல் இருந்ததை அடுத்து, அவர்களைத் தேடிச் சென்ற போதே தமது உறவினர்களது உடல்கள் கிடைத்தன எனப் பழங்குடிக் கிராமவாசிகள் தெரிவித்தனர். (து-ரி4)



# ஐவரிகோஸ்ட்டில் திடீர் துவக்குச் சூடு

## 16 பேர் கொலை; 22 பேர் காயம்



அபிட்ஜன், மார்ச்.15
ஐவரிகோஸ்ட்டில் இடம்பெற்ற திடீர் துப்பாக்கிச் சூட்டில் 16 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. பிரபல சுற்றுலாத்தலத்தில் ஹோட்டல்கள் அமைந்துள்ள பகுதியில் 6 நபர்கள் திடீரெனத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தச் சம்பவத்தில் 4 ஐரோப்பியர்கள், 2 சிப்பாய்கள் உட்படத் தாக்குதல் நடத்தியவர்களும் உயிரிழந்துள்ளனர் என ஜனாதிபதி அலாசீன் ஒவாட்ரா தெரிவித்தார்.
தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. 22 பேர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தனர். இவர்களில் பாதுகாப்புப் படையினர் மூவர் உள்ளடங்குகின்றர் எனவும் அவர் தெரிவித்தார்.
அல்குவைதாவினர் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளதாக உலகப் பாதுகாப்பு உளவுத்துறையினர் தகவல் வெளியிட்டுள்ளனர் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தாக்குதல் நடத்தியவர்கள் இரு பிரிவினராகப் பிரிந்து 3 மணி நேரத்துக்கு மேல் தாக்குதல் நடத்தினர். பாதுகாப்புப் படையினர் 45 நிமிடங்களில் சம்பவ இடத்துக்கு விரைந்தனர் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். தாறுமாறாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டின்போது, மக்கள் ஓடி ஒளிந்தனர். அப்பகுதி மக்கள் பெரும் வீடுகளினுள் சென்று தம்மைப் பாதுகாத்துக் கொண்டனர் என நேரில் பார்த்தவர் தெரிவித்தார்.
தாக்குதல் குறித்து பிரஞ்சு அரசு அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-
கொல்லப்பட்டவர்களில் எமது நாட்டினரும் உள்ளடங்குகின்றனர். இந்தத் தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலில் ஈடுபடும் நாடுகளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-ரி4)

## கார்க் குண்டுத் தாக்குதலில் துருக்கியில் 34 பேர் சாவு

அங்காரா, மார்ச்.15
துருக்கி தலைநகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் 34 பேர் உயிரிழந்ததுடன், 125 பேர் காயமடைந்தனர். உயிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனச் சுகாதார அமைச்சர் மெஹ்மெட் மொசினொக்மு தெரிவித்தார். மக்கள் நடமாட்டம் அதிகமான சதுக்கத்தில் இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. ரயில் நிலையம், பஸ் நிலையம் என்பவற்றுக்கு அருகில் இந்தத் தாக்குதல் இடம் பெற்றது. தாக்குதல் இடம் பெற்ற பகுதிக்கு அருகில் அரச கட்டடம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.
பொலிஸ் கார், தீயணைப்பு வீரர்கள், மருத்துவ உதவியாளர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.
இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம். எதற்காக இந்தத் தாக்குதலை நடத்தினார்களோ





தெரியாது. ஆனல் அவர்களது எண்ணம் நிறைவேறாது என உள்துறை அமைச்சர் இப்கான் அலா தெரிவித்தார். மேலும் இவ் வாறான தீவிரவாதத் தாக்கதலுக்கு எதிராகத் துருக்கி போராடும் எனவும் அவர் தெரிவித்தார்.
பிராந்தியங்களுக்கிடையே ஒற்றுமை இன்மையே வன்முறைகளுக்குக் காரணம் என நாட்டு ஜனாதிபதி தயிப் ஏர்டொகன் தெரிவித்தார். மேலும் பாதுகாப்புப் படையினருடன் போராடத் தீவிரவாதிகளுக்கு பலம் போதாமையால், பொது மக்கள் மீது தமது தாக்குதலை நடத்துகின்றனர் என அவர் தெரிவித்தார்.
தாக்குதலுக்குக் காரணமாணவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்களின் ஒளிப்படங்கள் அதிகாரிகளினால் வெளியிடப்பட்டன.
தாக்குதலை யார் நடத்தினார்கள் என்பது குறித்து தகவல்களை வெளியிட நாம் விரும்பவில்லை. விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் அதிகமானோர் காயப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (து-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாய்லாந்து வங்கி
ழந்தனர் என வங்கி
களை வேலையாள்
தைத் தவிர்க்க ஒக்சி

## பிளாஸ்
## பக்றீறி

டோக்கியோ, மார்
ஜப்பானிய விஞ்
மூலக் கூறுகளை
யாவைக் கண்டுபி
வில் அமைந்துள்
தில் இந்த பக்
றீறியா முதல் முத
லாக கண்டறியப்
பட்டுள்ளது.
250 மாதிரிகள்
சோதனை செய்
யப்பட்ட பின்னர்
இந்தப் பக்றீரியா
கண்டுபிடிக்கப்
பட்டுள்ளது.
ஐடொநெல்லா
சக்கை யென்
சிஸ்னும்ஆய்வு
மையம் பிளாஸ்
டிக்கை ஆரம்ப
மூலக்கூறாக மாற்
பிடித்ததுடன், பிள
மாற்ற 6 வாரங்க
தெரிவிக்கப்பட்டு
செயற்பாட்டை து
விஞ்ஞானிகள் ஈ

## 600 பே
## ஐ.எஸ

பாரிஸ், மார்ச்.15
ஐ.எஸ். அமைப்பு
போராளிகளில் 600
யும், ஆயிரக்கண
சதுர பரப்பளவு கி
றர் நிலப்பரப்பையும்
3 வாரங்களில்
துள்ளதாக அமெரிக்
ஜாங்கச் செயலகம்
வெளியிட்டுள்ளது.
அமெரிக்க இராஜ
செயலர் ஜோன் கெ
ன்ஸ், பிரிட்டன், இ
ஜேர்மனி ஆகிய நாட்
விவகாரத்துறை அ
சர்களுடன் சிரியப்
குறித்து பேச்சு ந
பின்னர், பாரிஸில்
தகவலைத் தெரிவி
ளார். அவர் மேலும்
விக்கையில், போ
குழுக்கள் 3 ஆயிர



ங்கி ஒன்றில் தீயணைப்பு இரசாயனத்தினால் ஏற்பட்ட விபத்தில் 8 பேர் உயிரி
ங்கி அதிகாரிகள் தெரிவித்தனர். நேற்று முன்தினம் தீயணைப்புச் சாதனங்
பாள்கள் கட்டடத்தில் பொருத்தும்போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்
ஒக்சிசன் வாயு திறக்கப்பட்டதை அடுத்து விபத்து மேலும் கோரமாகியது. (த-ரி4)

# ஏஞ்சலா மேர்க்கலின் ஆதரவு சரிவு

பேர்லின், மார்ச்.15

அகதிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வரும் ஜேர்மன் அதிபருக்கு எதிராக அந்த நாட்டுக் குடிமக்கள் பெருமளவில் வாக்களித்துள்ளனர். இதனால் அதிபரின் கட்சி 2 மாகாணங்களில் படுதோல்வியைச் சந்தித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



ஜேர்மனியில் குடியேறும் அகதிகளுக்கு அதிபரான ஏஞ்சலா மேர்கல் ஆதரவு அளித்து வருவது தொடர்பாக நேற்று 3 மாகாணங்களில் பொது வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டது.


இந்த வாக்கெடுப்பில் அதிபரின் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி, அகதிகளுக்கு எதிரான கொள்கைகளை உடைய ஏ.எப்.டி. கட்சி உள்ளிட்ட கட்சிகள் பங்கேற்றன. இந்த வாக்கெடுப்பில் ஆர்வமாகப் பங்கேற்ற குடிமக்கள் அதிபரின் கட்சிக்கு எதிராக பெருமளவில் வாக்களித்துள்ளனர்.

கிறிஸ்தவ ஜனநாயக கட்சியின் பலமான பேடன் வைர்ட்டம்பெர்க் மாகாணத்தில் அக்கட்சிக்கு 27.5 சதவிகித வாக்குகளே கிடைத்துள்ளன. இதன் மூலம் வாக்கெடுப்பு நடைபெற்ற 3 மாகாணங்களில் அதிபரின் கட்சி ஒரு மாகாணத்தில் மட்டுமே ஓரளவு வெற்றி பெற்றது. ஆனால் அகதிகளுக்கு ஆதரவான ஏ.எப்.டி கட்சி வாக்கெடுப்பு நடைபெற்ற 3 மாகாணங்களிலும் வெற்றிபெற்றுள்ளதால் ஜேர்மன் குடிமக்கள் மத்தியில் அகதிகள் மீதான எதிர்ப்பு மேலும் வலுத்து வருகிறது என்பது தெளிவாகிறது. (த-ரி4)

## ஸ்ரிக் மூலக்கூறை உடைக்கும்
## ரியா ஜப்பானில் கண்டுபிடிப்பு

மார்ச்.15
விஞ்ஞானிகள் பிளாஸ்ரிக்
களை உடைக்கும் பக்ரீறி
ண்டுபிடித்துள்ளனர். ஒசாக்கா
ந்துள்ள மீள்சுழற்சி மையத்
பக்
முத
யப்
கள்
சய்
னர்
யா
கப்
லா
ன்
ப்வு
ாஸ்
ம்ப
மாற்றும் பக்ரீறியாவைக் கண்டு
பிளாஸ்ரிக்கை மூலக்கூறாக
ங்கள் வரை எடுப்பதாகவும்
ட்டுள்ளது. இதனால் அதன்
துரிதப் படுத்தும் முயற்சியில்
ள் ஈடுபட்டுள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் 311 மில்லியன் தொன் பிளாஸ்ரிக் உற்பத்தி செய்யப்படு கிறது. உலகப் பிரச்சினையின் மூலமாக பிளாஸ்ரிக் கருதப்பட்டது. தற்போது இந்தக் கண்டுபிடிப்பு சூழல் சமனிலையைப் பேணமிகவும் உறு துணையாக அமையும் என நம்பப்படுகிறது.



கடந்த 70 வருடங்களாகப் பிளாஸ்ரிக்கை உக்க வைப்பது தொடர்பாக ஆராய்ச்சி நடத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பக்ரீறியா, பிளாஸ்ரிக்கை உணவாக உட்கொள்கின்றது என நுண்ணங்கியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் மீள் சுழற்சி மையங்களுக்கு இவற்றை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (த-ரி4)

# போராளிகள் கொலை
# ஸுக்குப் பின்னடைவு

ப்பு தமது
600 பேரை
ணக்கான
கிலோ மீற்
யும், கடந்த
ல் இழந்
மரிக்க இரா
கம் தகவல்
து.
ராஜாங்கச்
கெரி பிரா
இத்தாலி,
நாட்டுவெளி
ற அமைச்
யப் போர்
நடத்திய
ில் இந்தத்
தெரிவித்துள்
லும் தெரி
போராளிக்
ஆயிரம் சதுர



கிலோ மீற்றர்களை இராணுவத்தினரிடம் இழந்துள்ளனர். அத்துடன் அவர்களது போராளிகளில் 600 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட லண்டன் பரப்புக்குச் சமனான நிலப் பகுதி தற்போது இராணுவத்தின் வசப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

சிரியாவில் நடைமுறையில் உள்ள போர்நிறுத்த உடன்படிக்கை மூலம் 80 தொடக்கம் 90 சதவீதமான வன்முறைச் செயல்கள் குறைக்கப்பட்டுள்ளன. குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ ஆரம்பித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மனித உரிமைகள் அவதானிகளின் தகவல் மூலம் 270 ஆயிரம் மக்கள் கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து இடம்பெற்ற போரில் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையில் நேற்றைய தினம் ஜெனிவாவில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்றிருந்தன. சிரிய ஜனாதிபதி அசாத் இந்தப் பேச்சில் கலந்து கொள்ளமாட்டார் என நேற்று முன்தினம் தகவல்கள் வெளியாகின. ஆனால் தொடர்ந்தும் சமாதானப் பேச்சை முன்னெடுப்பதாக ஜோன் கெரி தெரிவித்துள்ளார். (த-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள்



*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் வரிசையில் கன்னி ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிய விவரங்கள்)*

## கன்னி

மன்னிக்கும் குணம் உள்ள நீங்கள், செய்நன்றி மறவாதவர்கள். அப்படிப்பட்ட உங்களுக்கு 08.01. 2016 முதல் 25.07.2017 வரை உள்ள காலகட்டத்தில் ராகுவும் கேதுவும் என்ன பலன் தரப் போகிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

**இராகுவின் பலன்கள்:**

இதுவரை உங்கள் ராசியில் அமர்ந்துக் கொண்டு திக்குத் திசையறியாது திண்டாட வைத்தார். காரணகாரியமே இல்லாமல் பிரச்சினைகளில் சிக்க வைத்து வேடிக்கை பார்த்தாரே. வாழ்க்கை மீதும் ஒரு வெறுப்பை உண்டாக்கி இது என்ன செக்கு மாட்டு வாழ்க்கை என்று புலம்ப வைத்தாரே! முகத்தில் ஒரு மலர்ச்சியே இல்லாமல் ஒரு நிமிடம் சிரித்தாலும், அடுத்த இரண்டு நாள்களுக்கு ஒரு கலவரத்தை ஏற்படுத்தி அழ வைத்தாரே. அப்படிப்பட்ட ராகுபகவான் இப்போது உங்கள் ஜென்ம ராசியை விட்டு விலகி 12ஆம் வீட்டுக்கு இடம் பெயர்கிறார்.

எனவே, முடங்கிக் கிடந்த நீங்கள், இனிப் புத்துயிர் பெறுவீர்கள். மருந்து, மாத்திரையிலிருந்து விடுபடுவீர்கள். எப்போதும் சோகம் படர்ந்திருந்த உங்கள் முகத்தில் இனிமேல் புன்னகை தவழும். சோர்வு, களைப் புடன் காணப்பட்டீர்களே! இனித் துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். மாதக் கணக்கில், வாரக் கணக்கில் தள்ளிப்போன, தடைப்பட்ட காரியங் களையெல்லாம் முழுமூச்சுடன் முடித்துக் காட்டுவீர் கள்.

குடும்பத்திலும் நீங்கள் நல்லதையே சொன்னாலும் உங்கள் பேச்சு சபை ஏறாமல் அவமதிக்கப்பட்டீர்களே; இனி உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். உங்கள் ஆலோசனைகளை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்று சேருவீர்கள். உங்களைக் குறை கூறிக் கொண்டிருந்தவர்களின் மனசு மாறும். நேர்மறை எண்ணங்கள் உருவாகும். வீட்டில் தாமதமாகிக் கொண்டிருந்த சுபகாரியங்கள் துரித கதியில் இடம்பெறும். தினம்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். என்றாலும் ராகு விரைய ஸ்தானமான 12 இல் மறைவதால் எதிர்பாராத பயணங்கள் உண்டாகும். வீண் அலைக்கழிப்புகளும் இருக்கத்தான் செய்யும். நீங்கள் ஒரு செலவு மதிப்பீட்டைப் போட்டு இதற்குள் முடிக்க வேண்டுமென்று நினைத்தால் முடியாமல் இரண்டு மடங்கு அதிகமாக செலவாகும். அவ்வப்போது கனவுத் தொல்லையால் தூக்கம் குறையும். எவ்வளவுதான் பணம் வந்தாலும் சேமிக்க முடியாதபடி செலவுகளும் இருந்து கொண்டேயிருக்கும். சாதுக்கள், சித்தர்களின் சந்திப்பு நிகழும். நீண்ட காலமாகச் செல்ல வேண்டுமென்று நினைத்திருந்த அண்டை மாநிலப் புகழ் பெற்ற புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்;. உறவினர், நண்பர்கள் வீட்டு விசேடங்களை நீங்களே செலவு செய்து முன்னின்று நடத்துவீர்கள். சிறுகச் சிறுகச் சேமித்து வைத்ததில் புறநகர் பகுதியிலாவது வீட்டு மனை வாங்க முயற்சி செய்வீர்கள்.

**இராகுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

உங்களின் விரையாதிபதி சூரியனின் உத்திரம் நட்சத்திரம் முதல் பாதத்தில் 08.01.2016 முதல் 10.03.2016 வரை ராகுபகவான் சென்றதால் இக்கால கட்டத்தில் அவசர முடிவுகளை தவிர்க்க வேண்டியிருந்தது. மறதியால் விலை உயர்ந்த நகை, அலைபேசியை இழக்க நேரிடும்.

பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். அதிக வட்டிக்கு வாங்கியிருந்த கடன் தொகையை குறைந்த வட்டிக்கு பணம் வாங்கி மீளச் செலுத்துவீர்கள். அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளில் தாமதம் வேண்டாம்.

ராகுபகவான் உங்கள் தன-பாக்கிய அதிபதியான சுக்கிரனின் பூரம் நட்சத்திரத்தில் 11.03.2016 முதல் 15.11.2016 வரை செல்வதால் தொட்ட காரியம் துலங்கும். பணப்புழக்கம் அதிகமாகும். விலை உயர்ந்த ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். தந்தையாரின் உடல் நிலை சீராகும். அவருடனான மோதல்கள் விலகும். வீடு, வாகன வசதிகள் பெருகும். புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். மகனுக்கு நீங்கள் எதிர்பார்த்த குடும்பத்திலிருந்து நல்ல மணப்பெண் அமைவாள். வேற்றுமதத்தவர்களால் திடீர் திருப்பம் உண்டாகும்.

(தொடரும்)

எஸ்.மல்லிகா



# பெண்மை இன்றி அமையாது உலகு

*(பெண்மை இன்றி அமையாது உலகு என்ற தலைப்பில் கடந்த சனிக்கிழமை வெளியான ஆக்கத்தின் தொடர்ச்சி)*

**இந்த வருட பெண்கள் தொனி**

ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தொனிப் பொருளுடன் பெண்கள் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த வருடம், 'பால்நிலைச் சமத்துவம்' என்ற தொனிப் பொருளில் இந்தத் தினம் கொண்டாடப் படுகிறது. பெண்மை இன்றி அமையாது உலகு என்று கூறுமளவுக்கு, பெண்களின் இயக்கத்தில் தான், உலகச் சுழற்சியே நிகழ்கிறது. இவர்களையும் அரவணைத்துச் செய்யப்படும் அபிவிருத்திகள் நாட்டுக்கும், வீட்டுக்கும் முன்னேற்றத்தை அளிக்கும். இனம், மதம், பொருளாதாரம், அரசியல் ஆகிய பல்வேறு வேறுபாடுகளை மறந்து, அனைத்துப் பெண்களும் கொண்டாடி வரும் இந்த மகளிர் தினத்தை அர்த்தமுள்ளதாக்க அனைத்துப் பெண்களும் சமவுரிமைக் காகக் குரல் கொடுக்க வேண்டும்.

ஆணும், பெண்ணும் சமமெனக் கொள்வதால், அறிவு ஓங்கி இந்த வையகம் தழைக்கும் என்று தீர்க்கதரிசனம் சொல்லிவிட்டான் பாரதி. பாரதியின் கனவுக்கு உருக் கொடுத்து, பெண்களின் உரிமைக்கு மதிப்பளித்து, பால்நிலைச் சமத்துவ உல கம் படைக்க ஒவ்வொரு வரும் உழைக்க வேண்டும்.

**இன்னும் கனவு தான்**

என்னதான் வீட்டையும் நாட்டையும் பெண்கள் சிறப்பாக நிர்வகித்து வந்தாலும், பெண்களது அரசியல் பிரவேசம் அதி குறைவாகவே இருக்கிறது. நாடாளுமன்றத்திலும் அமைச் சரவையிலும் பத்து சதவீதத்தினர் மட்டுமே பெண்களாக உள்ளனர். ஜனாதிபதி, பிரத மர், முதல்வர் எனப் பல பதவிகளைப் பெண் கள் வகித்தாலும், அந்த விகிதமும் குறைவு தான். மேலும், அரசியலில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டாலும், அனைத்து அரசியல் கட்சிகளின் எதிர்ப்பின் காரணமாக இது நிறைவேறாத கனவாகவே வளர்முக நாட்டுப் பெண்களுக்கு உள்ளது. பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளைச் சிலர் சலுகைகளாக நினைத்து மறுப்பது வேதனை பயக்கிறது. எனவே, இவ்வாண்டு பெண்கள் தொனிக் கமைய- பெண்களுக்கு பால்நிலைச் சமத்துவம் அளித்து, அவர்களுக்கு அரசியலிலும் கூடுதல் இடம் அளிக்க வேண்டும். உலகுக்கே முதல் பெண் பிரதமரைத் தந்த பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் அதிக இட ஒதுக்கீடுகளைப் பெண்களுக்கு இலங்கை அரசு வழங்க வேண்டும்.

**கேளிக்கைக்கு அல்ல விடுதலை**

புரட்சி எனும் மகத்தான ஆயுதம் கொண்டு நடத்தப்பட்ட பெண்கள் விடுதலையைப் பல பெண்கள் அமைப்புக்கள் கேளிக்கைகளிலும் விழாக்களிலும் தொலைத்து வருகின்றன. அதற்காக இந்த விடுதலை ஈட்டப்படவில்லை. இன்றைய நாளில் பெண்கள் கடந்து வந்த பாதைகளைத் திரும்பிப் பார்க்கவும் அடைய வேண்டிய இலக்குகள் குறித்துத் திட்டம் தீட்டவும் திடசங்கற் பம் பூண வேண்டும். சாதனை மகளிரை ஊக்குவிக்க வேண்டும். இவற்றை விடுத்து, வெறும் இனிப்புப் பண்டங்களை வழங்கியும் நாலு வார்த்தைகள் முழங்கியும் பெண்கள் தினத்தைக் கொண்டாடுவதில் அர்த்தமில்லை. அதேநேரம், எம்மை அடக்க நினைக்கும் ஆண்களுக்குத் தக்க பாடம் புகட்ட வேண்டும். சிறைக் கொடுமைக்கு எதிராகவும் இந்நாளில் பெண்கள் அமைப்புக்கள் உரத்துக் குரல் கொடுக்க வேண்டும்.


**விடுமுறை**

இம்முறை பெண்கள் தினத்தையொட்டிப் பல்வேறு வழிகளில் பெண்கள் கௌரவிக்கப்பட்டும் அவர்களுக்கு விடுதலை வழங்கப்பட்டும் வருவது மகிழ்ச்சியளிக்கிறது. சில ஆண்டுகளாக ஆண்கள் துணையின்றிப் பெண் விமானிகளே பங்கேற்கும் விமானங்களை எயார் இந்தியா இயக்கி வருவது உவகையளிக்கிறது.

மேலும், ரஷ்யா, உக்ரைன், உஸ்பெகிஸ்தான், வியட்நாம், ஆர்மோனியா, கியூபா முதலான நாடுகளில் பெண்களுக்கு இன்றைய தினம் விடுமுறை வழங்கப்பட்டு அவர்கள் கௌரவிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு நாடுகளில் மட்டுமல்ல, வீடுகளிலும் பெண்கள் கௌரவிக்கப்பட வேண்டும், சமத்துவம் பெற வேண்டும். அப்போதுதான் பெண்களின் விடுதலை அர்த்தம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒப்பீட்டுக் கல்வி அணுகுமுறையில் இலங்கையின் கல்விப் பிரச்சினைகள்:

கலாநிதி பா.தனபாலன்

கல்வியே ஒரு நாட்டு அபிவிருத்தியின் அச்சாணி. மனிதத்துவ விடுதலைக்கான கருவி. கல்வி என்பது இந்த உலகை மாற்றம் செய்யக் கூடிய மிகப்பலமான ஆயுதமாகவும் கருதப்படுகின்றது. இந்தக் கல்விச் செயலாற்றுகையை வரலாற்று ரீதியாக, அரசியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக, சமூக பண்பாட்டு ரீதியாக, பிரதேச ரீதியாக ஒப்பீடு செய்து பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் குறித்த நாட்டின் கல்விப் பிரச்சினைகளைச் சரியாக இனங்காண முடியும். அத்தோடு கல்விப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் முன்வைக்க முடியும்.

இந்தக் கல்வியை எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தயாராக்க வேண்டும். சமூகத்தில் அபிவிருத்தியைத் தோற்றுவிப்பதற்காகக் கல்வியானது தலைமை தாங்கி செயற்படுத்தப்பட வேண்டும். இளம் தலை முறையினரின் எதிர்கால வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு அவர்கள் முகம் கொடுக்கக் கூடிய வல்லமையை அவர்களுக்கு அளிக்கத்தக்க விதத் தில் கல்வி வழங்கப்பட வேண்டும். நாட் டுக்குப் பொருத்தமான கல்வியினாலேயே அந்த நாடு அரசியல், பொருளாதார, சமூக கலாசார அபிவிருத்தியைப் பெற முடியும் என ஒப்பீட்டுக் கல்வி ஆய்வு எண்ணக் கருக்கள் எடுத்தியம்புகின்றன. இங்கு ஒப்பீட்டுக் கல்வி என்பது வரலாறு, சமயம், அரசியல், பொருளாதார, சமூக, கலாசார ரீதியாக கல்விச் செயலாற்றுகைகளின் தன்மைகளை ஒப்பீடு செய்து பகுத்தாராய்ந்து கல்வியின் பயன்படு தன்மையை உணர்த்தும் செயன் முறையாகும். இது, குறித்த நாடு அல்லது உலகளாவிய ரீதியில் கல்விக் கொள்கைகள், சட்டங்கள், அபிவிருத்திகள், பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகள் என்பவற்றை எண்ணக் கருக்களாகக் கொண்டிருக்கும், இலங்கையின் ஒப்பீட்டுக் கல்வி ஆய்வின் நோக்கங்களாக:-

01.வரலாற்று ரீதியாக ஐரோப்பியரின் வருகைக்கு முன்னரான தன்னிறைவுப் பொருளாதார கல்வி நிலையை சரியாக விளங்கிக் கொள்ளல்.
02.போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் வழங்கிய கல்வி முறை நிலைமைகளைப் புரிந்து கொள்ளல்.
03.சுதந்திரத்துக்குப் பின் பாடசாலைக் கல்வி அபிவிருத்திப் போக்குக்களை அறிதல்.
04. நடைமுறைப்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் வெற்றி-தோல்விகளை படிப்பினைகளாகப் புரிந்து கொள்ளல்.
05.இலங்கையின் கல்வி தொடர்பான பிரச்சினைகளை இனம் காணல். அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வழிகளைக் கண்டறிதல்.
06.எதிர்கால கல்வி அபிவிருத்தி திட்டமிடல் மூலம், துரித பொருளாதார சமூக, கலாசார விருத்தியை அடைதல்.

இந்த வகையில் இலங்கையில் 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விச் சட்டமும், அதன் திருத்தங்களான; 1939: 61, 1945:21, 1946:3, 1951:5, 1958:37, 1960:5 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் சட்டம், 1968:25 ஆம் இலக்க பொதுப்பரீட்சைகள் சட்டம், 1979:64 இலக்கப் பிரிவேனா கல்விச் சட்டம் 1985:28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டம், 1986:30 ஆம் இலக்க தேசிய கல்வியியற் கல்லூரிகள் சட்டம், 1991ஆம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக்குழு சட்டம் என்பவை ஒப்பீட்டுக் கல்வி ஆய்வுஅணுகுமுறைக்கு மிக முக்கிய விடயங்களாகவுள்ளன. மேலும் இலங்கையின் கல்வி ஒப்பீட்டு ஆய்வு எண்ணக்கருவில் சர்வதேசப் பிரகடனங்களையும் இலங்கை ஏற்றுள்ளது. அவை:-

01.மனித உரிமைகள் மீதான சர்வதேசப் பிரகடனம் 1948.
02.கல்வி மீதான பாரபட்சங்களுக்கு எதிரான சமவாயம் 1960.
03.சமூக, பொருளாதார, சுகாதார உரிமைகள் மீதான சமவாயம் 1966
04.பிள்ளைகளின் உரிமைகள் மீதான சமவாயம் 1989.
05.சகலருக்கும் கல்வி மீதான உலகப்பிர கடனம் 1990.
06.செயற்பாட்டுக்கான டக்கார் சட்டகம், EFA 2000.
07.மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள் 2000.

**ஒப்பீட்டு விமர்சனங்கள்**

1939ஆம் ஆண்டின் கல்விச்சட்டம் எழுபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இன்றைய காலத்துக்குப் பொருத்தமற்றதாகிவிட்டது. கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் மற்றும் மாற்றங்களை விளைதிறனுடன் நடைமுறைபடுத்த வேண்டுமெனில் கல்விச்சட்டங்கள் திருத்தப்பட வேண்டும். அத்துடன் மேற்படி சர்வதேச பிரகடனங்கள் கைக்கொள்ளப்பட வேண்டும். பொதுக் கல்வி தொடர்பான பிரச்சினைகளுக்கு பலவீனமான சட்டப்பின்னணிகள் உதவாது. சகல சட்ட விதிகளின் பொருத்தமான அம்சங்கள் உள்வாங்கப்பட்டு அபிவிருத்தி சார்ந்த, எளிமையான, பரந்த அடிப்படைகளைக் கொண்ட புதிய கல்விச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும். இதில் 13 ஆவது அரசியல் திருத்தப்படியான மாகாண சபைகளுக்கான கல்வியதிகாரங்களும் இணைக்கப்பட வேண்டும் எனத் தேசிய கல்வி ஆணைக் குழு (2003) எடுத்தியம்பியுள்ளது.

1987 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் 13 ஆம் திருத்தப்படி கல்வி அதிகாரம் மாகாணங்களுக்குப் பகிரப்பட்டது. (அட்டவணை III) ஒதுக்கப்பட்ட பட்டியலில் கல்வி உள்ளடக்கப்பட்ட நிலையில் மத்திய அரசு கல்விக் கொள்கைகளை மாத்திரமே உருவாக்க முடியும். மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் அட்டவணை II பட்டியல் I இல் தரப்பட்டுள்ளது. அரச பாடசாலைகளுக்கு வளங்களை வழங்குதல் (தேசியப் பாடசாலைகளைத் தவிர) பாடசாலைகளின் மேற்பார்வையும் முகாமையும், ஆசிரியர், அதிபர் நியமனம், மாகாணக் கல்விச் சபைகளை அமைத்தல், ஆளணி செயலாற்றுகை மதிப்பீடு, சேவைக்காலப் பயிற்சிகள் நடத்தல், கட்டடம், நூலகம், விளையாட்டு மைதானங்கள் அமைத்தல் என்ற வகையில் சிறந்த அதிகாரப் பகிர்வு இருந்தும் மாகாணங்களுக்கிடையிலான கல்வி வேறுபாடுகள், இடைவெளிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அதுவும் போர்த் தாக்கங்கள் காரணமாக வடக்கு- கிழக்கு மாகாணங்கள் கல்வியில் பெரும் பின்னடைவைக் காட்டுகின்றன. ஒப்பீட்டுக் கல்வி ஆய்வுப் பேறுகளின் விளைவாக இலங்கையின் தற்போதைய கல்விப் பிரச்சினைகள்:

1. உழைக்கும் உலகம் என்னும் யதார்த்த நிலையிலிருந்து இலங்கைப் பாடசாலைகள் விலகி பரீட்சை மைய நோக்குடன் பாடம் படிப்பிப்பதை விட பரீட்சை எவ்வாறு எழுதுவதென்றே ஆசிரியர்கள் படிப்பிக்கும் பரிதாப நிலை.
2. தொழில்களைத் தீர்மானிப்பதைப் பொறுத்தவரையில் மாணவர்கள் தமது தனிப்பட்ட ஆற்றலையும், பலத்தையும் மதிப்பீடு செய்யும் திறன் அற்றுக் காணப்படுகின்றனர். பட்டதாரிகளுக்கு தொழிலின்மை.
3. பரீட்சைப் பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்றன. கல்வியில் சமத்துவம் இன்மை நிலவுகின்றது.
4. பாடசாலைச் சூழல் சமூகத்திலிருந்து தனிமைப்பட்டிருப்பதால் குழு உணர்வு, சமூகத் திறன்கள், ஆளிடை ஆளகளத்திறன்கள், தலைமைத்துவம், தொடர்பாடல் தேர்ச்சி குறைவுடையோராக மாணவர்கள்.
5. தொழில் தகைமையுடையோர், அற்றோருக்கு வேலைவாய்ப்பின்மை, உயர் தொழில், கல்வி பெற சந்தர்ப்பமின்மை.
6. தொழில் வழிகாட்டல், கல்வி வழிகாட்டல் பெரிய வழிகாட்டல்கள் பாடசாலை, குடும்பம், சமூக நிலைகளில் காணப்படாமை. இலக்கற்ற குருட்டுக் கல்விச் செயன்முறையால் பலர் பாதிப்படைந்து காணப்படுகின்றனர். உயர் கல்வி வாய்ப்புக்கள் இன்மை.
7: தொழில் வாழ்க்கையில் ஈடுபடும் வகையில் மாணவர்களை ஆயத்தம் செய்ய முடியாத நூற்கல்வி சார் பாட ஏற்பாடு. தொழில் நுட்பக் கல்வி போதாமை.
8. பாடசாலைசமூகச் சூழலில் வன்முறைகள், இனவாதம், போதைப் பொருள் பாவனைப் பெருக்கங்கள் இனவாதச் செயன்முறைகள் தொடர்கின்றன.
9.அரசியல்வாதிகள் கல்வித்துறையில் அக்கறையீனமாகக் காணப்படல்.
10. கல்வி முகாமைத்துவத்தில் பொருத்தமான வளப்பங்கீடுகள் இன்மை. ஆசிரியர்,அதிபர்களைசரியாகமுகாமை செய்யாமை. முகாமைத்துவக் குறைபாடுகள், ஊழல் மோசடிகள், வினைத்திறன் இன்மைகள், மாகாணங்களுக்கிடையேயான கல்வி ஏற்றத்தாழ்வுகள் அதிகம் காணப்படல்.

(தொடரும்)

கட்டுரையாளர்,
நிபுணத்துவ ஆலோசகர்,
கல்வியமைச்சு, பத்திரமுல்ல.

> “கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் மற்றும் மாற்றங்களை வினை திறனுடன் நடைமுறைபடுத்த வேண்டுமெனில் கல்விச்சட்டங்கள் திருத் தப்பட வேண்டும். அத்துடன் மேற்படி சர்வதேச பிரகடனங்கள் கைக் கொள்ளப்பட வேண்டும். பொதுக் கல்வி தொடர்பான பிரச்சினைகளுக்கு பலவீனமான சட்டப் பின்னணிகள் உதவாது சகல சட்ட விதிகளின் பொருத்தமான அம்சங்கள் உள்வாங்கப்பட்டு அபிவிருத்தி சார்ந்த, எளிமையான, பரந்த அடிப்படைகளைக் கொண்ட புதிய கல்விச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்திணை : குறிஞ்சி



குழந்தைகளே! நான்தான் குறிஞ்சி மலர்.

பசுமைப் பள்ளியின் குழந்தைகள் தொலைவிலிருந்து, இந்த மலையைப் பார்த்தபோது முழுக்க ஊதா நிற சாயம் பூசியது போலிருந்தது. அருகே செல்லச் செல்லத்தான் அவை சாயம் அல்ல, பூக்கள் எனத் தெரிந்தது. அதுவும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் நீலக் குறிஞ்சிப் பூக்கள்.

குறிஞ்சியைப் பார்த்ததும் மகிழ் என்கிற சிறுவனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. "குறிஞ்சியே! திரும்பவும் உன்னைப் பார்க்க வேண்டும் என்றால், அதற்கு 12 ஆண்டுகள் ஆகும் இல்லையா?" என்றான்.

"அடுத்த 12 ஆண்டுகளில் இந்த மலையே இருக்குமா என்று தெரியவில்லை. பிறகு நான் மட்டும் இருப்பேன் என்று எப்படிச் சொல்ல முடியும்? என்று வாட்டத்துடன் சொன்னது குறிஞ்சிப் பூ."

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?" எனக் கேட்டான் மகிழ்.

அப்போது 'டொம்' என்று காதைக் கிழிக்கும் ஒலி தொலைவில் கேட்டது. குழந்தைகள் காதுகளைப் பொத்தி கொண்டனர். அது அருகே இருந்த மற்றொரு மலையை வெடி வைத்துப் பிளக்கும் ஒலி.

"மலைகளே சுக்குநூறாக அழியும்போது, மலையில் பூக்கும் நான் மட்டும் எப்படி வாழ முடியும்?"

"ஏன் இப்படி பிளக்கிறார்கள்?" மகிழ் கேட்டான்.

"கட்டடங்களுக்குப் பளபளப்பான நிலம் பதிப்பதற்காகக் கற்கள் போட, அதை உடைக்கிறார்கள்."

"நிலத்தில் பதிக்கும் பளபளப்புக் கற்கள் மலையை உடைத்தா செய்கிறார்கள்?" குழந்தைகளுக்கு இந்தச் செய்தி புதிதாக இருந்தது.

"உண்மைதான்; வீதிகள், ரயில் பாதைகள் போடப் பயன்படும் சல்லிக் கற்களுக்காகவும், வீடு கட்டவும், அணை கட்டவும், வேறு பல காரணங்களுக்காகவும் மலைகளை உடைக்கிறார்கள்."

"வீதிகள் நமக்கு அவசியம்தானே?"

"சரி! அது உங்களுக்கான அடிப்படை வசதி என்பதால் அப்படிச் சொல்கிறீர்கள். ஆனால் உங்கள் வீட்டில் பதிக்கும் பளபளப்புக் கற்கள் உங்களுக்கு அவசியமா? நிறையப் பணத்தைத் தேடிக் கொள்வதற்காகக் கோடிக் கணக் கான வயதுடைய மலைகளை உடைப்பது நியாயமா?" என்றது குறிஞ்சிப்பூ.

நியாயமே இல்லை என்றனர் குழந்தைகள்.

"வானிலிருந்து பெய்யும் மழையைத் தாங்கி, அதை தம் காட்டிலும் புல்வெளிகளிலும் தேக்கி வைக்கிறது மலை. அப்படித் தேக்கிய நீரைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கசியவிட்டு சிறு சிறு ஓடைகளாக மாற்றுகிறது. அந்த ஓடைகள் இணைந்து ஆறாக மாறுகின்றன. எனவே, மலைகள் அழிந்தால் மனிதர்களும் அழிவார்கள்.மலைகள் இல்லாவிட்டால் ஆற்று நீர் முழுவதும் ஒரே தடவையில் விரைந்து ஓடி, கடலில் கலந்துவிடும். விவசாயம் செய்யக்கூட, நீர் பத்தாது. நிலத்தடி நீரும் குறைந்து போகும்."


குழந்தைகளுக்கு மலையின் அவசியம் புரிந்தது. இப்போது குறிஞ்சிப்பூ ஒரு கேள்வி கேட்டது. "குறிஞ்சித் திணை என்றால் என்ன குழந்தைகளே?"

"மலையும், மலை சார்ந்த இடமும்" என்றார்கள் குழந்தைகள்.

"நல்லது! தெரிந்து வைத்திருக்கிறீர்கள்" என்று அவர்களைப் பாராட்டிய குறிஞ்சிப் பூ, "ஆனால் மலைகள் எல்லாம் அழிந்த பிறகு அது சார்ந்த இடம் எங்கே இருக்கப்போகிறது?" என்றது.

குறிஞ்சிப் பூவின் குரலில் வேதனை வழிந்தோடியது. குழந்தைகளுக்கும் அது தொற்றிக்கொள்ள, அவர்கள் ஒரு முடிவெடுத்தார்கள்.

"குறிஞ்சி என்பது எப்போதும் மலைதான். இனி அதை உடைக்க விடமாட்டோம்!"



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





# வரலாற்றில் இன்றைய தினம்

1802 - அரச வர்த்தமானி முதன்முதலாக வெளியிடப்பட்டது.

1988 - காமினி திசாநாயக்கா ராஜீவுடன் முக்கிய பேச்சு வார்த்தை நடத்தும் பொருட்டு டில்லிக்குச் சென்றார்.

1988 - பூட்டப்பட்டுள்ள கடைகளைத் திறக்குமாறு ஐ.பி.கே.எப் கோரிக்கை.

1988 - இஸ்ரேல் பொலிசிலிருந்து பாலஸ்தீனியர் கூண்டோடு விலகல்

2002 - 9 மாதங்களாக சிறையிலிருந்த மாணவன் திவ்வியன் விடுதலை.

2002 - பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் இனி புதிய வழக்குத் தாக்கல் இல்லையென அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவிப்பு.

2008 - தமிழர் மீது, சிங்கள அபிலாசைகளைத் திணிப்பதே மகிந்த அரசின் இலக்கு என றோவின் முன்னாள் அதிகாரி ராமன் தெரிவிப்பு; அதற்கு இந்தியா துணைபோகக் கூடாதெனவும் வலியுறுத்து.

2008 - அமரர் பொன் கணேசமூர்த்திக்கு தேசியத் தலைவரால் மாமனிதர் கௌரவம் வழங்கப்பட்டது.

# அரிஸ்ரோற்றில்



கி.மு.நான்காம் நூற்றாண்டுக் காலப் பகுதியில் வாழ்ந்த கிரேக்கத்தின் பிரபலமான தத்துவவாதியும் விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுபவருமான அரிஸ்ரோற்றில் பொருள்கள் எல்லாம் அவற்றின் பாரத்தின் அளவுக்கு ஏற்ப பூமியின் மையத்தை நோக்கி விழுகின்றன எனக் கூறினார். இதன்படி பாரமான பொருள்கள் வேகமாகவும் விரைவாகவும் பூமியை நோக்கி விழுகின்றன - என்றார்.

அத்துடன் வான், பொருள்களை எல்லாம் தத்தமது சரியான இடம் நோக்கி இயங்குகின்றன எனவும் கருதினார். இவரது கூற்றுக்களும் சிந்தனைகளும் மறுபேச்சின்றி ஏற்றுக் கொள்ளப்பட்ட காலமது. தொலமி என்பவர் அரிஸ்ரோற்றிலின்சிந்தனைப்படி அமைந்த பிரபஞ்சத்தின் மாதிரி அமைப்பையும்கொடுக்க அரிஸ்ரோற்றலின் கொள்கைகள் உறுதியாகின. இந்தப் பிரபஞ்சமாதிரியை மதங்களும் ஏற்றுக்கொண்டு தமது மதக் கோட்பாடுகளுக்கு அமைவாக தொலமின் பிரபஞ்ச மாதிரி வடிவம் அமைந்து இருந்ததைக் கண்டு, அதனை ஏற்றுக் கொண்டார்கள் எனலாம்.

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக அரிஸ்ரோற்றிலின் கொள்கைகளும் கருத்துக்களும், மறுப்பேதுமின்றி, இடையிடையே சிற்சில எதிர்ப்புகள்வந்த போதிலும் (அந்த எதிர்ப்புகளும், எதிர்த்தவர்களும் ஏதோ விதத்தில் அழிக்கப்பட்டு) உலக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருந்தன.



# வண்ண வண்ணப் பூக்கள்

வண்ண வண்ணப் பூக்கள்
அழகு நிறைந்த பூக்கள்
வெள்ளை நிறத்தில் ஒன்று
மஞ்சள் நிறத்தில் ஒன்று
சிவப்பு நிறத்தில் ஒன்று
ஊதா நிறத்தில் ஒன்று
எல்லாமே கொள்ளை அழகுதான்
கைகளில் எடுத்து தடவினால்
கொள்ளை இன்பம் பிறக்குது
சிறுவர் நாம் எப்போதும்
பூக்களை நேசிப்போம்
அவற்றின் அழகை ரசிப்போம்

சு.றிசானி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகாத்மா காந்தியின் தண்டி யாத்திரை

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி

இன்றுள்ள அரசியல் சூழலில் தண்டி யாத்திரை எமக்குக் கற்றுத்தரும் பாடம் முக்கியத்துவம் பெறுகின்றது. 1930 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதி பிரார்த்தனைக்குப் பின்பு குஜராத் மாநிலம் அகமதாபாத் நகர் சபர்மதி ஆசிரமத்திலிருந்து 241 மைல் தொலைவில் உள்ள தண்டி கடற்கரைக்குப் பாத யாத்திரையாகப் புறப்பட்டார் அவ்வேளையில் 61 வயதான மகாத்மா காந்தி. 70 பேர்கள் மட்டும் அடங்கிய சிறுகூட்டம் அவரைப் பின் தொடர்ந்தது. வழிநெடுக கிராமங்கள் வழியாகச் சென்று தண்டி கடற்கரையில் ஆங்கில அரசின் சட்டத்தை மீறி உப்பு எடுப்பது என்பதே இந்த யாத்திரையின் நோக்கம்.

சாதாரண ஏழைகளும் பயன்படுத்தியே ஆகவேண்டிய உணவுப் பொருள் உப்பு. ஆனால் ஆங்கில அரசு ஏழை, பணக்காரர் என்ற பாரபட்சமின்றி உப்பு மீது வரி விதித்தது. ஏழைகளின் ரட்சகரான மகாத்மாவுக்கு இந்த வரி விதிப்பு அப்பாவி மக்களுக்கு எதிரான அநீதியாகப்பட்டது. மக்களின் ஈடுபாடும் பங்கேற்பும் இல்லாத எந்தப் போராட்டமும் வெற்றி பெறாது என்பது காந்திஜியின் கருத்து. எனவே தான் மக்கள் கருத்தை ஒன்று திரட்ட மகாத்மா யாத்திரை புறப்பட்டார்.

> **70 பேர்கள் மட்டும் அடங்கிய சிறுகூட்டம் அவரைப் பின் தொடர்ந்தது. வழிநெடுக கிராமங்கள் வழியாகச் சென்று தண்டி கடற்கரையில் ஆங்கில அரசின் சட்டத்தை மீறி உப்பு எடுப்பது என்பதே இந்த யாத்திரையின் நோக்கம்.**

பாத யாத்திரைக்கு முன்பு வைஸ்ராய் இர்வினுக்கு காந்திஜி துணிவுடன் நீண்ட ஒரு கடிதம் எழுதினார். அதில், நீங்கள் உங்கள் சம்பளத்தைப் பாருங்கள்! மாதம் ஒன்றுக்கு ரூபா 21,000க்கு மேல் பெறுகின்றீர்கள். நாள் ஒன்றுக்கு ரூபா 700க்கு மேல் பெறுகின்றீர்கள். (இது 86 ஆண்டுகளுக்கு முன்னால் பெற்ற தொகை. இப்போது அந்தத் தொகைக்கு என்ன மதிப்பு என்பதைக் கணக்கிட்டால் அது வியப்புக் கலந்த வேதனையைத் தரும்) இந்தியாவில் ஒரு மனிதனின் சராசரி வருமானமோ 2 அணாவுக்கும் குறைவு. எனவே ஓர் இந்தியனின் சராசரி வருமானத்தைப் போல் 5000 மடங்குக்கு மேல் நீங்கள் சம்பளம் பெறுகிறீர்கள். இந்த ஒரு விடயத்தை (அதாவது உப்பு வரியை ரத்து செய்வதை) யோசித்துப் பாருங்கள் என்று உங்களை நான் தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன் என்று குறிப்பிட்டிருந் தார். ஆனாலும் ஆங்கில அரசு அதற்குப் பணியவில்லை.

வேறுவழியின்றி தண்டி யாத்திரை தொடங்கியது. தொடக்கத்தில் ஒரு சிறிய கூட்டமே காந்திஜியைப் பின் தொடர்ந்தது. ஆனால் ஏப்ரல் 5 இல் காந்திஜி தண்டியை அடைந்த போது பல்லாயிரக்கணக்கானோர் அவருடன் அணிவகுத்து நின்றனர். இது வழிநெடுகிலும் அவருக்கு கிடைத்த பேராதரவு ஆகும். திட்டமிட்டபடி தண்டி கடற்கரையில் சிறிது உப்பைக் காந்திஜி கையில் அள்ளிக் கொண்டார். இதன் விளைவாக நாடு முழுவதும் விடுதலைக் கனல் மூண்டது. பல்லாயிரக்கணக்கானோர் தாங் களாகவே முன்வந்து ஆங்காங்கே உப்புக் காய்ச்சினர். ஆங்கில அரசின் உப்புச் சட்டம் தகர்க்கப்பட்டது.

பொதுச் செயலாளர்
அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

# மெய்ஞானமுணர்ந்து நடுநிலை காப்போம்

எமது சிந்தனைக் குதிரையைத் தட்டிவிட்டு அது தரும் பொது முடிவைச் செயற்படுத்துவதே நடுநிலை தவறாத ஞானம். உண்மையை எதிர்த்துப் பொய்பேசுவதும், பெறாமையும். மனக்கசப்பும், கட்சி மனப்பான்மையும் மண்ணுலகு சார்ந்த ஞானமாகும். விண்ணிலிருந்து வரும் ஞானத்தின் தலையாய பண்பு, அதன் தூய்மையாகும். மேலும் அது அமைதியை நாடும், பொறுமை கொள்ளும், இணங்கிப்போகும் தன்மையுடையது. இரக்கமும் நற்செயல்களும் நிறைந்தது. நடுநிலை தவறாதது, வெளிவேடமற்றது. அமைதி ஏற்படுத்துவோர் விதைத்த அமைதி என்னும் விதையிலிருந்து நீதி என்னும் கனி விளைகிறது. (யாக்3:718)

உள்ளம் உள்ளங்கை அளவுதான், ஆனால் அதன் சிந்தனை வெளிப்பாடும், செயற்பாடும் உலகை விடப் பெரியது. நல்லெண்ணங்களும், தீய நாட்டங்களும் ஒரே உள்ளத்தில் பொதிந்து கிடக்கின்றன. தீயதைக் கட்டுப்படுத்தி நன்மையை மேலோங்கவிடுவது. உள்ளக் கட்டுப்பாட்டிலும் ஞானத்தின் தெளிவிலும் தங்கியுள்ளது. சரி, பிழை எதுவென எமது உள்ளம் எந்த நேரமும் சொல்லிக்கொண்டேயிருக்கும். ஆனால் சந்தர்ப்பமும், சூழ்நிலையும், பாகுபாடும், பக்கம் சாரும் நிலைமையையும் தோற்றுவிக்கின்றன. இதுவே பிரச்சினைகளுக்கு ஆரம்பப் புள்ளியாகின்றது. இந்த நிலையை மாற்றி நடுநிலையாகச் செயற்படுவோம்.




இறைவனின் மெய்ஞானத்தின் திட்டத்தை நிறைவேற்றவே இயேசு நடுநிலையாளராகப் பிறந்து சிலுவையில் உயிர்த் தியாகமீந்து விடுதலை தந்தார். எமது பணி வாழ்வாலும் நடுநிலைதவறாத நன்னடத்தையாலும் உள்ளத்தில் இருந்து செயலாற்றும் மெய் ஞானத்தின் ஆளுகைக்கு இடமளிப்போம்.

# மின்தடை கோளாறா? சதியா?

இரு நாள்களாக முழுநாட்டையுமே பல மணி நேரங்கள் ஸ்தம்பித நிலைக்கு இட்டுச்சென்ற மின்விநியோக செயலிழப்புக்குத் தொழில்நுட்ப ரீதியான தவறுகளே காரணம் என மின்சார சபைத் தரப்பிலிருந்து கூறப்பட்டாலும், இது தொடர்பில் விரிவான விசாரணைகளை நடத்தி உண்மைகளை வெளிக்கொண்டுவருவது அவசியமானது.

கடந்த மாதத்தில் இலங்கைக்கு வருகைதந்த நியூஸிலாந்துப் பிரதமர் ஜோன் கீ இலங்கையை ஆசியாவின் ஒளி என வருணித்த 24 மணி நேரத்துக்குள்ளாக முழு நாடுமே இருளில் தத்தளித்தது. இதனைப் பத்தோடு பதினொன்றாக எண்ணி இருந்துவிடலாகாது. மாறாகப் பல்வேறு கோணங்களிலும் ஆராயவேண்டும்.

இந்த நாட்டை அடுத்த பல தசாப்தங்களுக்கு தமது உரிமைச் சொத்தாகக் கட்டி ஆளநினைத்த ராஜபக்ஷ தரப்பினர் எதிர்பாராத வகையில் ஜனநாயக ரீதியில் மக்களால் தோற்கடிக்கப்பட்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நாள் முதல், எப்படியேனும் மீண்டும் ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும் என்று பல்வேறு வகையிலும் அந்தத் தரப்பினர் முயற்சித்துவருவது ஒன்றும் இரகசியமானதல்ல.

மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ராஜபக்ச தரப்பினர் எந்தவிதமான உத்திகளையும் - அது நாட்டையும் மக்களையும் அதளபாதாளத்திற்கு இட்டுச் செல்வதாக இருந்தாலும்கூட, பின்பற்றத் தயங்கமாட்டார்கள் என்பதைத் தற்போதைய ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 14மாதங்கள் ஆகி விட்டபோதிலும், ராஜபக்சவின் 9வருட கால ஆட்சிக் காலத்தில் வரப்பிரசாதங்களை அனுபவித்தவர்களும், அவரது அடிவருடிகளும், இன்னமும் கணிசமான அளவில் அரச துறையில் காணப்படுகின்றனர். இவர்கள் இன்னமும் முக்கிய பதவிகளிலும் இருந்து வருகின்றனர்.

தமது இதயத்தில் மன்னராகத் தாம் சிம்மாசனமேற்றி வைத்திருந்த போர் வெற்றி நாயகனுக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலையைப் பொறுக்கமுடியாதவர்களும், தமது வரப்பிரசாதங்களும் சலுகைகளும் பறிபோய்விடும் என்ற அச்சத்தைக் கொண்டுள்ளவர்களும், மீண்டும் ராஜபக்ச கும்பலை அதிகாரத்துக்கு ஏற்றுவதற்கு எந்த எல்லைக்குப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதற்கு இலங்கையின் வரலாற்று உதாரணங்கள் சான்று பகர்கின்றன.




மைத்திரி- ரணில் அரசு, ராஜபக்ச கூட்டத்தை வெறுமனே செல்லாக்காசாக எண்ணிவிடக் கூடாது. போர்க்குற்ற விசாரணைகளின்போது இராணுவத்தினர் மீதும் விசாரணைகள் நடத்தப்படப் போகின்றன என்ற அச்சநிலை இராணுவத்தின் உயர்மட்டத்தினரிடையே பல்வேறு அச்சங்களைத் தோற்றுவித்துள்ளமை வெள்ளிடை மலையாகியுள்ள நிலையில், பதவிவெறிபிடித்த ராஜபக்ச கூட்டத்துடன் இராணுவத்தின் ஒரு சாராரும் கைகோர்த்துக் கொள்ளக்கூடிய ஏது நிலைகளையும் புறந்தள்ளி விடக்கூடாது. தமது இருப்புக்கே அச்சுறுத்தல் வரும் என எண்ணும் போது, உலக நாடுகளைப் பற்றியோ, சர்வதேச அபிப் பிராயத்தைப் பற்றியோ எவருமே கவனத்திற் கொள்ளமாட்டார்கள். மாறாக, எந்தவழி முறையைப் பயன்படுத்தியேனும், தமது இருப்பைப் பாது காத்துக்கொண்டு மீண்டும் அதிகாரத்திற்கு வரவே எத்தனிப்பார்கள் என்பதை நிராகரித்துவிட முடியாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



**மேடம்:** விடாமுயற்சியுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம்.

**இடபம்:** மனதில் நேர்மை எண்ணம் அதிகரிக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் நன்மதிப்பை பெறுவர். பெண்களுக்கு, சகோதரர்களின் உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் தடை உருவாகி மறையும். வருமானம் கிடைப்பதில் தாமதம் உருவாகும். வாகனப் பயணத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும்.

**கடகம்:** எண்ணம் செயல் வடிவம் பெறும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேறும். குடும்பத்தினருடன் ஆன்மிகச் சுற்றுலா செல்வீர்கள். உறவினர் மத்தியில் நற்பெயர் உண்டாகும்.

**சிங்கம்:** வாழ்வில் இனிய அனுபவம் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். வருமானம் அதிகரிக்கும். விருந்து விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**கன்னி:** மனதில் இருந்த அவநம்பிக்கை மறையும். தொழில், வியாபாரத்தில் இருந்த குளறுபடிகள் மறையும். பெண்கள் செலவுக்குப் பணமின்றி தவிப்பர். வெளியூர் பயணத் திட்டத்தில் மாறுதல் இருக்கும்.

**துலாம்:** பிறரிடம் உதவி கேட்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். குடும்பச் செலவுக்கு சேமிப்புக் கைகொடுக்கும். பாதுகாப்புக் குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**விருச்சிகம்:** தனித்திறமையுடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். வாகன வகையில் பராமரிப்புச் செலவு ஏற்படும். பெண்கள் சிக்கனத்தைக் கடைப் பிடிப்பர்.

**தனுசு:** சாதனை நிகழ்த்தும் வாய்ப்பு தேடி வரும். தொழில், வியாபாரத்தில் விற்பனை அதிகரிப்பால் இலாபம் உயரும். நிலுவைப் பணமும் கிடைக்கும். நண்பரின் தேவையறிந்து உதவி புரிவீர்கள்.

**மகரம்:** நற்செயலில் ஈடுபட்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராகும். பிள்ளைகளின் வழியில் சுபச் செலவு ஏற்படும்.

**கும்பம்:** அவப்பெயர் வராத வகையில் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். ஆரோக்கியம் மேம்படும்.

**மீனம்:** பெரியவர்களின் வழிகாட்டுதல் நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் ஆடம்பரத்தில் நாட்டம் கொள்வர்.

**இம்சையரசன்** @Ramlakshmanan7

வீட்டில் ஒவ்வொருநாளும் நடக்கும் ஜல்லிக்கட்டில் அதிகமாக பந்தாடப்படுவது ஆண் காளைகளே. சில காளைகள் ஊரை விட்டே ஓடி விடும். அடி தாங்க முடியாமல்.



எப்படி எல்லாம் கோயில் கட்டுறாங்கள்... நாய்களுக்கும், பூனைக்குமான உடற்பயிற்சி

### மாணவர் குணம் புரிந்தால் ...

சிறுவர் பாடசாலை ஒன்றில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

"சில பிராணிகள் மனிதர்களுக்கு உபகாரமாய் இருக்கும். சில பிராணிகள் எந்த உபகாரமும் செய்வதில்லை. எனவே உபகாரம் செய்வதை மட்டும் வீட்டில் வளர்க்கிறோம்" என்று கூறி மாணவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டார்.

"பசு என்ன தரும்?" என்று கேட்டார்.

"பால்" என்றார்கள் பிள்ளைகள் எல்லோரும்.

"கோழி என்ன தரும்?" "முட்டை"

"செம்மறி ஆடு?" "கம்பளி"

"ம்.. ம்.. ம்.. இதனால் தான் பசு, கோழி, ஆடு இதையெல்லாம் வீட்டில் வளர்க்கிறோம்" என்று நிறுத்தி,

"குரங்கு என்ன தரும்?" என்று கேட்டார்.

கொஞ்ச நேரம் அமைதியானது வகுப்பறை. பிறகு பின்னாலிருந்து ஒரு பலவீனமான குரல்,

"ஹோம் வேர்க்" – என்றது.

WhatsApp



## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | 6 | | | 5 | | 7 | |
| | 1 | 7 | 9 | | 4 | | | 8 |
| | | | | 7 | | | | |
| | | | | | | | 3 | |
| | | 4 | 6 | | 1 | 9 | | |
| | 6 | | | | | | | |
| | | | | 9 | | | | |
| 7 | | | 4 | | | | 9 | |
| | 4 | | 3 | | | 1 | 2 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 6 | 3 | 5 | 7 | 1 | 9 | 8 |
| 7 | 1 | 3 | 9 | 8 | 6 | 5 | 4 | 2 |
| 8 | 5 | 9 | 2 | 1 | 4 | 7 | 6 | 3 |
| 2 | 8 | 5 | 6 | 9 | 3 | 4 | 7 | 1 |
| 3 | 6 | 1 | 4 | 7 | 5 | 2 | 8 | 9 |
| 9 | 4 | 7 | 1 | 2 | 8 | 3 | 5 | 6 |
| 1 | 7 | 2 | 5 | 6 | 9 | 8 | 3 | 4 |
| 5 | 9 | 4 | 8 | 3 | 2 | 6 | 1 | 7 |
| 6 | 3 | 8 | 7 | 4 | 1 | 9 | 2 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## தமிழில் ஆடவரும் 'அடா ஷர்மா'

சிம்பு நடிப்பில் வெளிவரவுள்ள படம் "இது நம்ம ஆளு". இதில் சிம்புவுக்கு ஜோடியாக நயன்தாரா நடித்துள்ளார். பாண்டிராஜ் இயக்கியுள்ள இந்தப்படத்துக்குக் குறளரசன் இசையமைத்துள்ளார். சமீபத்தில் வெளியான 'இது நம்ம ஆளு' படத்தின் பாடல்கள் இரசிகர்களிடையே நல்ல வரவேற்புப் பெற்று வருகின்றன.

99 வீதமான படப்பிடிப்பு நீண்ட நாள்களுக்கு முன்பே முடிந்துவிட்ட நிலையில் "மாமன் வெயிட்டிங்" என்ற குத்துப் பாடலுக்கு மட்டுமே படப்பிடிப்பு நடத்த வேண்டிய நிலையில் உள்ளது. இந்தப் பாடல் காட்சியில் நயன்தாரா நடிக்க மறுத்துவிட்டாராம். இதனால் ஆண்ட்ரியாவை வைத்து படமாக்க படக்குழு திட்டமிட்டது.

எனினும் தற்போது திடீரென ஆண்ட்ரியாவுக்குப் பதிலாக, பிரபல தெலுங்கு நடிகை அடா ஷர்மாவை இந்தப் பாடலில் நடிக்க வைக்கத் திட்ட மிட்டுள்ளனர் படக்குழுவினர். இந்தப்பாடலின் மூலம் தமிழுக்கு அறிமுகமாகிறார் அடா ஷர்மா. ஏற்கனவே நயன்தாரா, ஆண்ட்ரியா ஆகிய இருவரும் நடித்திருக்கும் இந்தப் படத்தில் மூன்றாவது நடிகையாக அடா ஷர்மா இணைந்திருக்கிறார். ஒரு பாடல் மட்டுமன்றி இவருக்கு சில காட்சிகளையும் வைத்திருக்கின்றனர். அந்தக் காட்சிகளில் சிம்புவை விரும்பும் பெண்ணாக இவர் நடித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அனேகமாக இந்தப் பாடலின் படப்பிடிப்பு அடுத்த வாரம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 40 | 40 | 40 | 40 | 40 | 25 | 30 |
| கத்தரி | 100 | 80 | 100–120 | 100 | 120 | 100 | 60 | 80 |
| கரட் | 80 | 120 | 80–160 | 100 | 200 | 160 | 80 | 130 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 60 | 60 | 35 | 40 |
| பயிற்றை | 60 | 80 | 70 | 100 | 50 | 60 | 40 | 40 |
| பாகல் | 140 | 120 | 100 | 120 | 120 | 120 | 100 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 90 | 80 | – | – | 120 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 90 | 80 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 60 | 50 | 60 | 80 | 90 | 60 | 50 |
| பூசணி | 60 | 40 | 40 | 50 | 60 | 60 | 35 | 30 |
| தக்காளி | 25 | 40 | 30 | 40 | 50 | 40 | 25 | 30 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 40 | 80 | 40 | 35 | 30 |
| கீரை | 40 | 40 | 40 | 15 | 40 | 30 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 35 | 40 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 160 | 160 | 140 | 200 | 200 | 130 | 160 |
| புடோல் | 50 | 60 | 50 | 60 | 80 | 60 | 30 | 40 |
| கோவா | 40 | 50 | 60 | 60 | 80 | 60 | 35 | 40 |
| வெண்டி | 50 | 80 | 70 | 60 | 100 | 80 | 60 | 40 |
| போஞ்சி | 100 | 120 | 120 | 140 | 100 | 120 | 30 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 130 | 140 | 120 | 160 | 70 | 120 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40–50 | 40 | 40 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | 65 | 100 |
| தேசிக்காய் | 140 | 120 | 100 | 80 | 120 | 40 | 90 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 120 | 140 | 140 | 140 | 160 | 80 | 120 |
| இராசவள்ளி | 150 | 140 | 160 | 140 | 160 | 140 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 300 | 250 | 600 | 400 | 350 | 280 |
| பனங்கிழங்கு | 05 | 03 | 05 | 02 | – | – | 03 | – |






## அணி கலன்கள்

வட இந்திய அணிகலன்கள் அறிமுகமாகியுள்ளன. தனித்துவமான வடிவமைப்பில் பகட்டாக இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை 4,000 ரூபாவில் இருந்து 4,500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.



## வாழைப்பழ பாயாசம்

**தேவையானவை:**

வாழைப்பழம் – 4
சீனி – 100 கிராம்
முற்றிய தேங்காய் – 1
ஏலக்காய் – தேவையான அளவு
முந்திரிப் பருப்பு – 25 கிராம்
பேரீச்சம் பழம் – 6

**செய்முறை:**

வாழைப்பழங்களின் தோலை உரித்துவிட்டு சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும்.

முந்திரியப் பருப்பு, பேரீச்சம் பழத்தை சிறு துண்டுகளாக நறுக்கி நெய்யில் பொன்னிறமாக வறுத்து வைத்துக்கொள்ளவும்.

தேங்காயைத் துருவி அரைத்து, அதில் சிறிதளவு நீர் விட்டு பால் எடுத்துக்கொண்டு அந்தப் பாலில் சீனி போட்டுக் கலந்து வைக்கவும்.

ஏலக்காய்ப் பொடியைத் தேங்காய்ப் பாலில் போட்டுக் கலக்கி, அதன் பின்னர் வாழைப்பழம், முந்திரி, பேரீச்சம்பழம் ஆகிய அனைத்தையும் சேர்த்து நன்றாகக் கலக்கவும்.



## அரைக்கும் பொருள்கள்



தோசைக்கு மா அரைக்கும் போது 4 கப் அரிசிக்குப்பதில் 3 கப் அரிசியும், ஒரு கப் சவ்வரிசியும் பயன்படுத்தினால் சுவையான பேப்பர் ரோஸ்ட் தயாரிக்கலாம்.

தோசை மாவில் சிறிது வெந்தயத்தைச் சேர்த்துக் கொள்ளுங்கள். உடலுக்கு நல்லது.

அதிக பருப்பு வகைகளைப் பயன்படுத்துவதால் சிலருக்கு வாயுத்தொல்லை, ஜீரணக் கோளாறு ஏற்படலாம். கொஞ்சம் இஞ்சியையும் சேர்த்து அரைத்து விட்டால் கவலையே இல்லை.

அரிசி, பருப்பு வகைகளைச் சம அளவு என்ற விகித்தில் வறுத்து ரவையாக உடைத்து வைத்திருந்தால் தேவையான போது ஊறவைத்து பச்சைமிளகாய், தேங்காய் துருவல், அரைத்து புளிப்பு தயிர்கலந்து திடீர் அடை செய்ய முடியும்.

அரிசியை அரைக்கும் ஆலையில் அல்லது மிக்சியில் அரைத்து வைத்துக் கொண்டால், வடை சுடும்போது கொஞ்சம் சேர்த்துக் கொள்ளலாம். அரிசி மா சேர்த்தால் வடை மொரமொரப்பாக இருக்கும்.



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 600 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 100 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | – | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 500 | – | 450 |
| சுறா | 550 | 500 | 600 | 800 | 600 | – | 600 |
| சீலா | 250 | 400 | 400 | 400 | 400 | 200 | 400 |
| விளை | 600 | 500 | 400 | 500 | 450 | 300 | 400 |
| முரல் | 300 | 350 | 350 | 400 | 300 | 300 | 350 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | 300 | 200 |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 400 | – | – |
| திரளி | 250 | 250 | 200 | 200 | 300 | – | 300 |
| நகரை | 200 | 300 | – | 250 | 300 | – | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 50 | 100 |
| ஒட்டி | 250 | 250 | 150 | 200 | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 300 | 200 | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 300 | 270 | 300 | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 350 | 200 | 250 | 350 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | 350 | 300 | – | 200 |

**நாளை**
பங்குனி -03
புதன்கிழமை 16.03.2016
திதி: அட்டமி
பி.ப.03.30 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம்
பி.ப.12.49 வரை
ராகுகாலம்:
12.19-01.49 வரை
சுபநேரம்:
04.49-06.19 வரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நுட்பம்



## மெல்லிய வில்லை

மனிதத் தலை முடியைவிட 2 ஆயிரம் மடங்கு மிக மெல்லிய லென்ஸை ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

அவுஸ்திரேலியன் நேஷனல் யுனிவர்சிட்டி என்ற பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழுவே இதனை உருவாக்கியுள்ளது.

இதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட 50 நானோ மீற்றர் என்ற அடர்த்திக்கும் மிகவும் குறைவாக தற்போது 6.3 நானோ மீற்றர் என்ற அளவிலேயே இது உருவாக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விஞ்ஞானிகள் கூறுகையில், மருத்துவம், தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் போன்ற துறைகளில் இதன் பயன்பாடு மிகச் சிறந்ததாக இருக்கும் எனவும், வளைந்த திரையைக் கொண்ட கணினிகளில் கூட இதனை பயன்படுத்தலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

மடிக்கப்படக்கூடிய திரையைக் கொண்ட கணினிகளில் ஏற்கனவே இது பரிசோதிக்கப்பட்டுள்ள நிலையில், மிக மலிவான விலையில் சாதனங்களை உருவாக்க முடியும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.




## செயற்கை அறிவு கொண்ட கணினி

இணையத்தள தேடுதல் சேவையை அளித்து வரும் முன்னணி நிறுவனமான கூகுள், செயற்கை அறிவைக் கொண்ட புதிய கணினியைத் தான் வடிவமைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கணினி மென்பொருளுக்கு செயற்கை அறிவை உருவாக்கும் முயற்சிகள் பல வருடங்களாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை மேற்கொள்ளும் முயற்சியில் கூகுள் ஆய்வாளர்களும் இறங்கியிருந்தனர். அதில் தற்பொழுது அவர்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது.

அந்த வகையில் பல்வேறு சிக்கலான நகர்வுகளை அடிப்படையாகக் கொண்ட சீன விளையாட்டான கோ விளையாட்டை விளையாடும் வகையில் கூகுள் நிறுவனம் தனது புதிய கண்டுபிடிப்பை மேற்கொண்டுள்ளது. செயற்கை அறிவைக் கொண்ட இந்த புதிய கணினிக்கு 'ஆல்பா கோ' என்று பெயரிடப்பட்டுள்ளது.

அதன் திறமையைச் சோதிக்க கூகுள் நிறுவனம் முடிவு செய்தது. அதன்படி, கோ விளையாட்டில் ஆறு முறை உலகச் சாம்பியனான தென் கொரியாவின் லீ சீடோலுடன், ஆல்பா கோ 5 போட்டிகள் கொண்ட தொடரை நடத்த முடிவு செய்யப்பட்டது.

தென் கொரியத் தலைநகர் சியோலில் நடத்தப்பட்ட முதல் 3 போட்டிகளிலும், லியோ சிடோலை வீழ்த்தி 'ஆல்பா கோ' புதிய சாதனையைப் படைத்துள்ளது.

# கலாபொல கண்காட்சி மூலம் 13 மில்லியன் ரூபா வருமானம்



"முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு பார்வையாளர் வருகையும் ரூபாய் 13 மில்லியன் விற்பனையும் இடம்பெற்றிருப்பதைக் கண்டு நாம் மெய் சிலிர்த்துப் போயுள்ளோம்." என்று ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புப் பிரிவின் தலைமை அதிகாரியான செல்வி நதீஜா தம்பையா கூறினார்.

ஜோர்ஜ் கீற் மன்றம் மற்றும் ஜோன் கீல்ஸ் குழுமம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட "காலபொல 2016" கண்காட்சி, பதிவு செய்யப்பட்ட 308 கலைஞர்களின் பங்கு பற்றுதலுடன் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் – இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஜேர்மன் தூதுவர் கலாநிதி யோர்கன் மோர்ஹார்ட், ஜோர்ஜ் கீற் மன்றத்தின் தலைவர் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் தலைவர் சுசந்த ரட்ணாயக்க ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

கலாநிதி. யோர்கன் மோர்ஹார்ட் இந்த நிகழ்வில் உரையாற்றுகையில், "இலங்கையானது இயற்கை மற்றும் அதன் அற்புதமான மக்கள் போன்றவற்றில் மாத்திரம் செழிப்புமிக்க நாடாகத் திகழவில்லை. மாறாக, படைப்பாற்றல் விடயத்திலும், இலங்கை வளம் பொருந்தியதாகக் காணப்படுகின்றது என்பதைக் காண்பதும் அதற்குச் சாட்சியாக இருப்பதும் எப்போதும் எமக்கு மனங் கவர்வதாக உள்ளது" என்றார்.

கலாபொல 2016 கண்காட்சியில் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் துணை நிறுவனமான சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் பி.எல்.சி. இனால் "சிறுவர்களின் ஓவிய பிரிவு" ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. இது 184 சிறுவர் கலைஞர்களை தம்பக்கம் கவர்ந்திழுத்திருந்ததுடன், இவர்களுக்கு சான்றிதழ்களும் எலிபண்ட் ஹவுஸ் நிறுவனத்தின் சிற்றூண்டி உபசாரம் மற்றும் சகுரா முகவர் நிறுவனத்தால் அனுசரணை அளிக்கப்பட்ட ஓவிய உபகரணங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (கு)

# டோக்கியோ சிமெந்து புதிர்ப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வெற்றி

டோக்கியோ சிமெந்து புதிர்ப் போட்டி 3இல், 106 வருடங்கள் வரலாறு கொண்ட யாழ்ப்பாணம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி யாழ்.மாவட்டத்தில் ஏனைய 17 பாடசாலைகளின் மத்தியில் முதலிடத்தில் வெற்றியீட்டியுள்ளது.

முதலிடத்தைக் கைப்பற்றிய மகாஜனா அணிக்குப் பொறுப்பான ஆசிரியை செல்வி பி.பத்மலோஜினி கூறுகையில், "கல்வித்திணைக்களம் நடத்தும் விஞ்ஞான புதிர்ப் போட்டிகளிலும், சமூக விஞ்ஞான புதிர்ப் போட்டிகளிலும் எமது மாணவர்கள் ஆண்டு தோறும் பங்குபற்றுகின்றனர். ஜி.சி.ஈ (உ/த) பரீட்சையில் பொது அறிவை முக்கிய பகுதியாகக் கொண்ட பொது வினாத்தாளில் சித்தியடைவது பல்கலைகழக அனுமதிக்கு அவசியமாகும். டோக்கியோ சிமெந்து புதிர் போட்டி மாணவர் பொது அறிவை வளர்ப்பதில் பெரிதும் உதவுகிறது." என்றார்.

வணிகம்

யாழ். மாவட்ட வெற்றியாளரான தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, இம் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள, தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் அகில இலங்கை டோக்கியோ சிமெந்து புதிர்ப் போட்டி 3 இன் இறுதிச் சுற்றுக்களில் பங்குபற்றவுள்ளது. இறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் பாடசாலைகளின் 32 அணிகள் போட்டியிட்டு மோதும் அகில இலங்கை இறுதிச் சுற்றுக்கள் சுவர்ணவாஹினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும். வெற்றியீட்டுவோருக்கு 5 மில்லியன் ரூபா பரிசுப் பணம் மற்றும் பல பெறு மதியான பரிசுகளையும் உள்ளடக்கிய அகில இலங்கை இறுதிப்போட்டியாக இது நடைபெறும். மடிக் கணினிகள், டெப்லட் கணினிகள் உள்ளிட்ட பல பெறுமதியான பரிசுகள் கடந்த காலங்களில் அகில இலங்கை இறுதிப்போட்டிகளில் வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

# சம்பத் ஈ–ரெமிட்டன்ஸ் காஷ் வாசி 3 பூர்த்தி



சம்பத் ஈ–ரெமிட்டன்ஸ் அண்மையில் அதன் விற்பனை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டமான காஷ் வாசி 3இன் பரிசளிப்பு நிகழ்வை கொழும்பு 2, சேர் லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தையிலுள்ள வங்கித் தலைமை அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் முன்னெடுத்திருந்தது.

சம்பத் வங்கி காஷ் வாசி 3 நிகழ்ச்சித்திட்டத்தை 2015 செப்ரெம்பர் முதலாம் ஆம் திகதி ஆரம்பித்திருந்தது. சம்பத் ஈ–ரெமிட்டன்ஸ் வாடிக்கையாளர்கள் மில்லியன் ரூபா வரையிலான ஏராளமான பணப்பரிசுகளையும் ஏனைய பரிசுகளையும் வென்றிருந்தனர்.

காஷ் வாசி 3 நிகழ்ச்சித் திட்டத்தின் முதற் பரிசாகிய ஒரு மில்லியன் ரூபா [illegible] சேர்ந்த சமீர [illegible] திசாநாயக்க என்பவருக்குக் கிடைத்துள்ளது. ஒரு வர்த்தகரான திசாநாயக்க சம்பத ஈ–ரெமிட்டன்ஸ் வசதிகளைப் பயன்படுத்தி சுமார் பத்து ஆண்டுகளாக இத்தாலியிலுள்ள அவரது நண்பர் அனுப்பி வந்த பணத்தைப் பெற்றிருந்தார். தான் காஷ் வாசி 3 வாயிலாக வென்றெடுத்துள்ள ஒரு மில்லியன் ரூபா தனது வாழ்க்கையையே மாற்றிவிட்டதாக திசாநாயக்க தெரிவித்தார்.

ஒரு இலட்சம் ரூபா பணப் பரிசை சம்பத் வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட அதிர்ஷ்டசாலிகளான மூன்று வெற்றியாளர்கள் ஹேமந்த சோமசிறி, சரோஜா மயில்வாகனம், பீ.என். கனகரத்ன ஆகியோராவர். மேலும் எல்.ஈ.டி. தொலைக்காட்சிகள் ஐந்து, ஹோம் தியேட்டர்கள் பத்து, சலவை இயந்திரங்கள் மூன்று, ஹைவை ஸ்டீரியோ தொகுதிகள் பத்து, குளிர் சாதனப் பெட்டிகள் இரண்டு என்பவற்றையும் ஆறுதல் பரிசுகளாக சம்பத் வங்கி வழங்கியிருந்தது.

(கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகல மின்

முழுவதற்குமான மின்சார விநியோகம் தடைப்பட்டது. சுமார் 7 மணித்தியாலங்களுக்கு மேலாக இது நீடித்தது. யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு 10.50 மணிவரை மின்சாரத் தடை நீடித்தது. பியகம மின்விநியோக நிலையத்தில் உள்ள மின் மாற்றியில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தினாலேயே இந்த மின் தடை ஏற்பட்டதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன, மின் உற்பத்தி மற்றும் விநியோக நிலையங்கள் அனைத்தையும், இராணுவத்தின் பாதுகாப்பின் கீழ் கொண்டு வர உத்தரவிட்டுள்ளார்.

(த-வ-5)

## கிடைத்தது

உள்ளிட்ட 5 பேருக்கும், நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்றம், பிணை வழங்கியது.

சி.எஸ்.என். தொலைக்காட்சி தொடர்பிலான நிதி மோசடிக் குற்றச்சாட்டில் ஜனவரி மாதம் 30 ஆம் திகதி யோசித ராஜபக்ச உள்ளிட்ட 5 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இதன் பின்னர், யோசித ராஜபக்சவைக் கடற்படையிலிருந்து இடைநிறுத்தியுள்ளதாக, கடற்படைப் பேச்சாளர் அறிவித்திருந்தார்.

யோசித ராஜபக்சவுக்கு எதிராகக் கடுவெல நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கடுவெல நீதிமன்றத்தில் பிணைக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதும், அதனை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த நிலையில் கடுவெல நீதிமன்றத்தின் விளக்கமறியல் உத்தரவுக்கு எதிராக, யோசித ராஜபக்ச சார்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில், மீளாய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நேற்று மீளாய்வு செய்யப்பட்ட போதே, யோசித ராஜபக்சவைப் பிணையில் விடுவிக்கக் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஹெய்யந்துடுவ உத்தரவிட்டார். கடுவெல நீதிவான் நீதிமன்றத்துக்கு இந்தப் பிணை உத்தரவை உடனடியாக அனுப்பி வைக்கவும் அவர் கட்டளையிட்டார்.

இதில் ஒரு லட்சம் ரூபா காசுப் பிணையிலும், தலா ஒரு மில்லியன் பெறுமதியான இருவரின் சரீரப் பிணையிலும், யோசித ராஜபக்ச விடுவிக்கப்பட்டுள்ளார். அத்துடன், யோசித ராஜபக்சவுடன் கைதான ஏனைய நால்வரையும் பிணையில் விடுவிக்க உத்தரவிட்ட நீதிபதி, அனைவரையும் வெளிநாடு செல்வதற்கும் தடை விதித் துள்ளார்.

(த-வ-5)

## இன்னும்

தேவைப்படும் எனவும் மேலும் நீர் மின் உற்பத்தி நிலையங்களை அண்டிய நீர்த் தேக்கங் களில் நிலவி வரும் வறட்சி நிலைமையும் மின் தட்டுப்பாட்டுக்கான ஒரு காரணமாகும் என்று தெரி விக்கப்படுகிறது.

இதேவேளை, குடாநாட்டிலும் நேற்றுச் சுழற்சி முறையிலான மின்சார விநியோகமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. நேற்றுக் காலை முதல் இரவு வரை பிரதேச ரீதியான சுழற்சிமுறை மின் விநியோகமே இடம்பெற்றது. இதனால் அரச அலுவலகங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் பலவற்றின் பணிகள் பாதிப்படைந்தன. மக்கள் தமது அன்றாட அலுவல்களை உரிய நேரத்தில் நிறைவேற்ற முடியாமல் சிரமப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

(ற-ஜ-5)

## வெள்ளைக்கொடி

வெள்ளைக் கொடி விவகாரத்தில் நேரடியாகச் சம்பந்தப் பட்டவருமான சந்திரநேரு சந்திர காந்தன்.

நாடாளுமன்றத்தில் கடந்த 10 ஆம் திகதி அமைச்சர் சரத்பொன்சேகா தெரிவித்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உயிரிழப்புத் தொடர்பான கருத்துக்கள் குறித்து தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் சந்திரநேரு சந்திரகாந்தன் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழத் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பில் அமைச்சராக இருக்கின்ற சரத்பொன்சேகா வெளியிட்டுள்ள கருத்துக்கள் பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கின்றன. அமைச்சர் சரத் பொன்சேகாவின் இந்தப் பேச்சானது ஏதோவொரு தொலைநோக்குப் பார்வையுடனான சந்தர்ப்பத்தை முன்வைத்தே நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உச்சக் கட்டமாக இருந்த முள்ளிவாய்க்கால், நந்திக்கடல் பகுதிகளில் போரின் கடைசி நிமிடங்களில் நடைபெற்ற விடயங்கள் பற்றி பீல்ட் மார்ஷல் பொன்சேகா வெறுமனே ஒரு சில வார்த்தைகளைப் பேசிவிட்டுச் சென்றுவிட முடியாது.

நாடாளுமன்றத்திலோ, வெளியிலோ இந்த விடயம் தொடர்பான பேச்சுக்கள் மௌனமாக இருந்தவேளையில், சரத் பொன்சேகா இந்த விடயத்தை தற்போது பேச்சுக்கு எடுத்திருப்பது வித்தியாசமானதொரு பார்வையைக் கொண்டு வந்திருக்கின்றது.

என்னுடன் பேசப்பட்டு நடத்தப்பட்ட - நான் நேரடியாகத் தொடர்புபட்ட இந்த வெள்ளைக் கொடி விவகாரத்துக்கு நீதி கிடைக்கப் போகின்ற சந்தர்ப்பமாகக்கூட இதனைப் பார்க்க முடியும். இந்தத் தருணம் விசாரணை என்ற விடயத்தில் கண்ணும் கருத்துமாக செயற்பட வேண்டியது மிக முக்கியமாகும். இதற்குரிய காலம் வந்திருப்பதாக உணர்கின்றேன்.

இதனூடாக பல மர்ம முடிச்சுகள் வெளிவரலாம். உள்ளக விசாரணையோ, சர்வதேச விசாரணையோ நடத்தப்பட வேண்டும். இன்னும் காலம் தாழ்த்தப்படக் கூடாது. வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பில் அரசியல் தலைமைகளோ, சர்வதேசமோ எந்தவொரு விடயத்தையும் செய்ததாக இல்லை.

அத்துடன் இதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டியது அனைத்துத் தரப்பினரதும் பொறுப்பாகும். வெறுமனே பூச்சாண்டி காட்டுவதும் காலத்தைக் கடத்துவதும் அனைத்து சமூகத்திற்கும் செய்கின்ற துரோகமாக இருக்கும்.

சர்வதேச நீதி விசாரணை வரும் வரையில் புலம்பெயர் சமூகங்களின் ஒத்துழைப்புடன் வெள்ளைக்கொடி விவகாரத்தின் நீதிக்காகக் குரல் கொடுப்பேன். அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுத்த காணாமற்போன மற்றும் கடத்தப்பட்டவர்கள் தொடர்பான விடயங்கள், எனது தந்தை மாமனிதர் சந்திரநேருவின் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்) படுகொலை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக தனிமனிதனாக நின்று போராடுவேன் - என்றார்.

(த-வ-5)

## தீர்ப்பை

தீர்ப்பு நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி மூத்தவிநாயகர் கோயிலடியைச் சேர்ந்த 69 வயதுடைய வயோதிபரே இவ்வாறு நஞ்சருந்திச் சிகிச்சை பெற்று வருகிறார் என்று நீதிமன்றில் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பதின்ம வயதுச் சிறுமி, மாலை கட்டுவதற்கு பூ எடுப்பதற்காகச் சென்றபோது, அவருக்குக் கட்டாயப்படுத்தி மயக்க மருந்து கலந்த மென்பானம் வழங்கி, சிறுமி மயங்கிய பின்னர் வன்புணர்ந்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டு குறித்த முதியவருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால், யாழ்.மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கின் விசாரணை யாழ்.மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்த நிலையில் அதன் தீர்ப்பு நேற்று என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி நேற்று யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் குறித்த வழக்குத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் குறித்த சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை.

வன்புணர்ந்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் நபர் சார்பில் இதுவரை முற்பட்டு வாதாடி வந்த சிரேஷ்ட சட்டத்தரணி த.விக்னராஜா நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார். இதன்போது, சந்தேக நபர் தொடர்பில் சட்டத்தரணியிடம் கேட்கப்பட்டபோது, வைத்தியசாலைக்குச் சென்று வருவதாகச் சந்தேக நபர் கூறியிருந்தார் என்று நீதிமன்றில் தெரிவித்தார்.

எனினும் குறித்த சந்தேகநபர் அவரது வீட்டில் முற்றம் கூட்டிக்கொண்டிருந்ததாக நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

ஆனால் நெடுநேரமாகியும் அவர் நீதிமன் றுக்கு வரவில்லை. இதனால் குறித்த சந்தேக நபரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு, மேல் நீதி மன்ற நீதிபதி பதி மா.இளஞ்செழியன், மன்றின் கட்டளைப்படி பிடியாணை உத்தரவு பிறப்பித்தார்.

இதனால் குறித்த வழக்கு விசாரணைகளைச் சில மணித்தியாலம் ஒத்தி வைப்பதாக நீதிபதி அறிவித்தார் .

இதன்படி பொலிஸார் முதலில் யாழ். போதனா வைத்தியசாலையில் தேடியும் அவரைக் காணவில்லை. இதன் போது, மீண்டும் திறந்த நீதி மன்றில் குறித்த வழக்கை எடுத்த நீதிபதி, குறித்த எதிரியை அவரின் வீட்டுக்குச் சென்று கைது செய்வதற்கு, அப்பகுதிப் பொலிஸாருக்கு மன்றின் கட்டளைப்படி உத்தரவிட்டார். மேலும் குறித்த எதிரி தலைமறைவானால், அவருக்குப் பிணை நின்றவர்களை மன்றில் முற்படுத்துமாறு பதிவாளருக்குக் கட்டளை வழங்கினார். இந்தக் கட்டளையின் பிரகாரம் நீதிபதி, வழக்கை நேற்றுப் பிற்பகல் 3 மணிவரை ஒத்தி வைத்தார்.

எனினும் குறித்த சந்தேக நபர் முற்றம் கூட்டிக் கொண்டிருந்ததன் பின்னர் அவரது வீட்டில் அலைபேசியில் யாருடனோ கதைத்துக் கொண்டிருந்தார் என்று நீதிமன்றுக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் பின்னர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. அவர் நஞ் சருந்தியுள்ளார் என்றும் அதற்கு சிகிச்சை அளிக்கப் பட்டு வருவதாகவும் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இந்த நிலையில் குறித்த வழக்குப் பிற்பகல் 3 மணிக்கு மேல்நீதிமன்றில் தீர்ப்புக் காக அழைக்கப்பட்டபோது, வழக்கின் எதிரிக்கு மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக பொலிஸாரால் மன்றில் அறிவிக்கப்பட்டது.

வன்புணர்வு வழக்குத் தீர்ப் புக்குப் பயந்து அவர் நஞ் சருந்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. எனினும் காரணம் எதுவும் கூறப் படவில்லை.

இதனால் குறித்த எதிரி சிகிச்சை பெறும்போது, வைத்தியசாலையிலிருந்து தப்பிச் செல்லாதிருக்கப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கவும், அவர் வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்படும்போது, அவரைக் கைது செய்து மேல்நீதி மன்றில் முற்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கின் தீர்ப்பு நாளை புதன்கிழமைக்கு ஒத்தி வைக் கப்பட்டுள்ளது. அன்றைய தினம் அவர் பற்றிய மருத்துவ அறிக்கையும் நீதிமன்றில் சமர்ப்பிக்கவேண்டும் என்று வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு நீதிமன்று கட்டளையிட்டுள்ளது. வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி சுகந்தி கந்தசாமி முன்னிலையாகியிருந்தார்.

(த-வ-4)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம்மா அரியகுட்டி



கொக்குவில் கிழக்கு, உடையார்லேனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்பொழுது கனடாவில் வசித்தவருமான திருமதி இரத்தினம்மா அரியகுட்டி 10.03.2016 வியாழக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடை பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடையார்லேன்
கொக்குவில் கிழக்கு.

(68232)
(12,17,19)

தகவல்:
மகள்- சோ. சறோ

### திருமதி புவனேஸ்வரி பரஞ்சோதி



கொழும்புத்துறை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி பரஞ்சோதி நேற்று (14.03.2016) திங்கட்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லைநாதர்- இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பரஞ்சோதியின் அன்பு மனைவியும் ஞானேஸ்வரி(ஜேர்மனி), தேவி( ஜேர்மனி), சர்வேஸ்வரி, ஜெகதீஸ்வரி(உணவு மேலாளர் யா/போதனா வைத்தியசாலை), அம்பிகை(அதிபர் யா/ உயரப்புலம் குணபாலன் வித்), பத்மஜோதி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் கிருபாமூர்த்தி(ஜேர்மனி), லோகராசா (ஜேர்மனி), வரதராஜன், நடேச காந்தன்(ஆசிரியர் நல்லூர் ஸ்தான பாடசாலை) சிவஞானம்(அதிபர்- யா/ திருவடி நிலை சைவத் தமிழ் வித்), தவராசா ( ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் தவமணி, வசந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (15.03.2016) செவ்வாய்க்கிழமை பி.ப. 12.15 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 9, 2ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
(68232)
(12,17,19) குடும்பத்தினர்.

### திருமதி சின்னாச்சிப்பிள்ளை பொன்னம்பலம்



தோற்றம் 15.02.1927 மறைவு 14.03.2016

யாழ்.குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னாச்சிப் பிள்ளை பொன்னம்பலம் நேற்று (14.03.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னுப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், திரு.திருமதி சுப்பைய தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், இராசமலர், ராஜேஸ்வரி (கனடா), ராஜலட்சுமி (சுவிஸ்), மங்கையர்க்கரசி, இந்திராணி (சுவிஸ்), கனகசபாபதி (கனடா), இரட்ணசபாபதி (கனடா)ஆகியோரின் அன்புத் தாயாரும், கோபலாசிங்கம் (கோவிந்), காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மணியம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பஞ்சாட்சரம், சிவராசா (கனடா), சிவசம்பு, விஜேந்திரன் (சுவிஸ்), ஜெகன் (சுவிஸ்), விமலாதேவி (கனடா), வசந்தமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் காடா கடம்பை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குப்பிளான் வடக்கு (சந்தி),
குப்பிளான்

தகவல்:
குடும்பத்தினர்.

(69941)
(11,17,19)
021 491 2714

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

திருமதி
### வள்ளிப்பிள்ளை சின்னத்துரை



மட்டுவில் மத்தி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை சின்னத்துரை நேற்று (14.03.2016) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணபழனி - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மீனாட்சி மற்றும் தவமணி, தங்கம்மா, ராசம்மா, காலஞ்சென்ற வெற்றிவேல் மற்றும் செல்வராசா, சடாசிவம் ஆகியோரின் அன்பு சகோதரியும் நாகம்மாவின் சிறிய தாயும் சந்திரசேகரம், நல்லம்மா, சிவபாதம், காலஞ்சென்ற வேல் முருகன் மற்றும் கதிர்காமநாதன், சூரியகலா, சகுந்தலா ஆகியோரின் அன்புத்தாயாரும் சரோஜினிதேவி, ரஞ்சன், நர்மலசௌந்தரி, அன்னபூரணம், ஜெயந்தினி, தங்கவடிவேல்பிள்ளை, குகேந்திரராஜன், குலசேகரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் சசீனா - கிருஷ்ண குமார், சசிகரன் - பிறேமினி, கௌதினி - குணேஸ்வரன், உமாகரன், வசந்தன் - வதனி, கௌரி - குகன், துளசி - கோபால், துஷா - தனுஷ், சிவாசினி, சிவரஞ்சன், கண்ணன், சதீஸ், விபூசனன், கீர்த்தனன், தர்மினி, தட்சினி, மாலதி, குகபாலன், தவபாலன், லஜனன், லக்ஷன், அனுசா, இராமச்சந்திரன், சந்திரவதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பூசிகா, ரதீஸ், கபிகன், பூர்விதா, ராகவி, சுபீட்சா, அனுசிகா, சாருகா, அனுஜன், வனுஜன், அஞ்சனன், ஜானுதா, ரிஷிகேசன், டிபூசனன், விதுஸ்மன், மோகித், பிரதீபன் - கவிதா, தராணி - நிமலதாசன் ஆகியோரின் பூட்டியும் பவிஷான், பிரதுஷான் ஆகியோரின் கொப்பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2016) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(69955) (15.17)



## மரண அறிவித்தல்

### செல்வி இராஜபூபதி செல்லப்பா
(இளைப்பாறிய ஆசிரியை யூனியன் கல்லூரி)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இராஜபூபதி செல்லப்பா நேற்று (14.03.2016) மறுமைக்குள் பிரவேசித்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான G.C. செல்லப்பபா - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, இராஜரட்ணம் Dr.இராஜேந்திரம், இராஜகுணநாயகம், இராஜசவுந்தரம் மற்றும் இராஜதேவி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க வழிபாடு இன்று (15.03.2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கம் குடும்ப கல்லறைத் தோட்டத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்லப்பா இல்லம்,
ஆனைக்குட்டி மதவடி,
தெல்லிப்பழை.

077 7422201
077 5518002

தகவல்: அருள்திரு. V. இராஜ்குமார்,
திரு.பெனோஇராஜோதயன்
(பெறாமக்கள்)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

14.02.2016 ஞாயிற்றுக்கிழமை
அன்று சிவபுமடைந்த எமது
அன்புத்தெய்வம்

அமரர்
### துரைமணி தியாகராசா



அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (15.03.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபீண்டிகரண கிரியையிலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரி வீதி, ஓடக்கரை,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.


# இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க ஜோன் கெரியிடம் வலியுறுத்து



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு, இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியிடம், அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகார குழுவின் தலைவர் எட்வர்ட் ரொய்ஸ் எழுத்து மூலக் கோரிக்கை விடுத்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டுமெனவும், அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சில விடயங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளார். அதனை நாம் வரவேற்கின்றோம். இலங்கை அரசின் முனைப்புக்களுக்கு, அமெரிக்கா உதவிகளை வழங்க வேண்டும்.

போர் இடம்பெற்ற காலத்தில் கைப்பற்றப்பட்ட காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது. ஐ. நா.மனித உரிமைகள் சபையின் தீர்மாணங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இலங்கையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென குறித்த கடிதத்தில் அவர் வலியுறுத்தியுள்ளார். (வ)


## 31ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்



### திரு.பொன்னம்பலம் சீவரட்ணம்

உரிமையாளர் : Hotel Seevams - Colombo,
Seevam Export (pvt) Ltd - Colombo,
Seevam Textiles - Jaffna.

அமரர்.பொன்னம்பலம்.சீவரத்தினம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 17.03.2016 வியாழக்கிழமை அதிகாலை நடைபெற்று, பின்னர் அன்னாரின் பூஜையும், ஆத்மசாந்தி பிரார்த்தனையும் இல.15 பாம்குரோவ், கொழும்பு - 03 இல் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதியம் 12.00 மணியளவில் மதிய போசனமும் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஊழியர்கள் குடும்ப சகிதம் பங்குபெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஈமைக்கிரியைகளில் கலந்துகொண்டு துயர் பகிர்ந்தும், பல வழிகளில் பல்வேறு உதவிகள் புரிந்தும், எமது கவலையை பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கின்றோம்.

தகவல் : திருமதி.தயாரதி சீவரட்ணம் ( மனைவி )

தோற்றம் : 20.07.1938 மறைவு : 16.02.2016

No-15.பாம் குரோவ் ( Palm Grove )
கொழும்பு - 03. தொ.பே : 0112573496


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பொலிஸ் நிலையத்துக்கு பொறுப்பதிகாரியாக வீரசிங்க

யாழ்ப்பாணத் தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பொலிஸ்மா அதிபரினால் வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத் தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக பணியாற்றிய வூட்லர் என்பவர் ஐ.நா. படைப்பிரிவில் பணியாற்றுவதற்காக தென் சூடானுக்குச் சென்றுள்ளதால், ஏற்பட்ட வெற்றிடத்துக்கே, தற்போது வீரசிங்க நிய மிக்கப்பட்டுள்ளார். வீரசிங்க முன்னர் யாழ். பொலிஸ் நிலையத்தில் பதில் கடமைகள் பலவற்றைச் செய்திருந்தவர் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டுக்கு நேற்று முன்தினம் வருகை தந்த பொலிஸ்மா அதிபரே மேற்படி நியமனத்தை வழங்கியுள்ளார்.

இவரது நியமனம் நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கப்பட்டதையடுத்து, நேற்றுக் காலையிலேயே தன் கடமையைப் பொறுப்பேற்றார்.

(த-வ-4-10)

## நல்லிணக்கப்

னால் திட்டமிடப்பட்டுள்ள நல்லிணக்கப் பொறிமுறையில், காணாமற்போனவர்கள் அலுவலகம், உண்மை, நீதி, பொறுப்புக் கூறல் மற்றும் இழப்பீடு வழங்கல் ஆகிய செயற்பாடுகள் உள்ளடங்கியுள்ளன.

நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்தின், உத்தியோகபூர்வ இணையத்தளமான www.scrm.gov.lk இல் கேள்விக் கொத்துக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பதிலளிப்பதன் மூலம் தமது ஆலோசனைகளை மேற்படி செயலணிக்குத் தெரியப்படுத்த முடியும்.

இந்தச் செயன்முறைக்கு மேலதிகமாக ஒவ்வோர் மாவட்டங்களிலும் இடம்பெறுகின்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள், நேரடிக் கலந்துரையாடல்கள், கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுகள் மற்றும் குழு நிலை விவாதங்கள் மூலம் ஆலோசனைகளை முன்வைக்கமுடியும் எனவும் நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான ஆலோசனைச் செயலணி தெரிவித்துள்ளது.

(த-வ-ரி2)

## இனிமேல்

நேற்று முற்பகல் அலரிமாளிகையில் இடம் பெற்றது. அண்மைக்காலமாக மூன்று தடவைகள் ஏற்பட்ட மின்தடை குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளன.

இந்த மின்தடை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கரிசனை வெளியிட்டுள்ளதுடன், மின்தடைக்கு ஏதுவான தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவக் காரணங்கள் குறித்து கண்டறியுமாறும் பணித்துள்ளார்.

மேலும், மின் துண்டிப்பு குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை விரைவில் கையளிக்குமாறும், அறிக்கை கிடைக்கும் வரை தடையின்றி மின்விநியோகம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

(த-வ-5)

## இடியுடன்

அடர்ந்த பனி மூட்டம் எதிர்பார்க்கப்படுவதாகவும் அப்பகுதிகளிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் மழை பெய்யும்போது காற்றின் வேகமும் அதிகரிக்கக்கூடும் எனவும் காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

(த-சி)

**காணி விற்பனைக்கு**

**யாழ் மருதடி வீதியில் கிணற்றுடன் ஒரு பரப்புக்காணி விற்பனைக்குண்டு.**

(6995)(15.17)

**தொடர்புகளுக்கு: 0777 008413**

**விற்பனைக்கு**

2kW ஜெனரேட்டர்கள் (பெற்றோல்.மண்ணெண்ணெய்) விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:-
Kings Electronics(pvt) ltd
No:-12 Point pedro road Jaffna

**சிறிய கட்டடத்துடன் இடம் தேவை**

**சிறிய நிறுவனம் ஒன்றிற்கு சாதாரண வாடகையில் மேற்படி இடம் தேவை.**

**தொடர்புக்கு: 077 9040426**

**வேலையாள்கள் தேவை**

லேர்த் இயந்திரம் மற்றும் வெல்டிங் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை.

(86533)(2.17)

**076 603 9767**

**யாழில் ஒரு புதிய உதயம்.......**

உங்கள் வீட்டில் விஷேட நிகழ்வா?
எல்லா ஏற்பாடுகளும் உங்களுக்காக நாம்.....

**Decoration**
**Photo & Video**
**Icing cake & Makeup**
**Hall booking**

உங்கள் மனநிறைவு எங்கள் மகிழ்ச்சி

**Ak Function Coordinating**

#106,தபால் பெட்டி சந்தி திருநெல்வேலி
0778111276

**வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்**

## வருடாந்த பொதுக் கூட்டம்

இடம் : ஆலய முன்றில்
காலம்: 27.03.2016 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மு.ப 10.00 மணி

மேற்படி ஆலயத்தின் பொதுக்கூட்டம் இடம்பெறவிருப்பதால் பொதுச்சபை உறுப்பினர்கள் மற்றும் உபயகாரர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது வருகை தந்து கடந்த ஆண்டிற்கான கணக்கறிக்கை, செயற்பாடுகள் ஆராய்வதோடு நடப்பாண்டுக்கான திருப்பணி, திருவிழா தொடர்பான நடைமுறைகளை கலந்தாலோசித்து ஆலய வளர்ச்சிக்கு பேருதவி வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(c/29822)(15.17)

**ஆலய பரிபாலன சபை.**

## யாழ்ப்பாணம் மாநகரசபை

**மிருக எலும்பு விற்பனைக்கான கூறுவிலை கோரல்**

மாநகரசபைக்குட்பட்ட சந்தைகள் மற்றும் கடைகளில் சேகரிக்கப்படும் எலும்புகள் எமது பராமரிப்பில் உள்ளது. அதனைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் 18.03.2016 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாக கூறுவிலைப்படிவத்தினை மாநகர சபை கொள்வனவுப் பகுதியில் பெற்று 23.03.2016ஆம் திகதிக்கு முன்னதாக "ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பொ.வாகீசன்,
ஆணையாளர் - மாநகரசபை, யாழ்ப்பாணம்.

## வருடாந்த பொங்கல் விழா

**சுழிபுரம் ஸ்ரீபத்திரகாளி அம்பாளுக்கு**

இன்று (15.03.2016) செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணியளவில் விளக்கு வைத்தல் நிகழ்வுடன் ஆரம்பமாகி முதலாம் பொங்கல் எதிர்வரும் 22.03.2016 செவ்வாய்க்கிழமையும் இரண்டாம் பொங்கல் 29.03.2016 செவ்வாய்க்கிழமையும் மிகவும் சிறப்பாக நடை-பெறவுள்ளது என்பதை அம்பாளின் அடியார்களுக்கு அறியத்தருகிறோம்.

**குறிப்பு:**

வியாபாரம் செய்பவர்களுக்கு தங்கள் வியாபார நிலையங்களுக்குரிய இடங்கள் எதிர்வரும் 20.03.2016 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆலய முன்றிலில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

**பரிபாலன சபையினர்.**

## நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2016

கீழ்வரும் வேலைகளிற்கானகேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 15.03.2016 தொடக்கம் 06.04.2016 பி.ப 2.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 07.04.2016 மு.ப 10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 07.04.2016 மு.ப 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்விசமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்).
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறுவேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்குமுன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒருபிரதியை 'தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேசசபை, கருவப்புலம் வீதி கொக்குவில் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| | வேலை விவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|---|
| 01 | வாழைப்பழச்சந்தைக்கான கட்டட அபிவிருத்தி கேள்விசெல்லுபடியாகும் காலம் :- 22.06.2016 பிணைமுறி செல்லுபடியாகும் காலம்:- 20.07.2016 | 6.7 | 67,000.00 (வங்கி பிணைமுறி) | 1000.00 | M06/C07 |
| 02 | கலாசாலை 4ஆம் குறுக்கு வீதி, திருநெல்வேலி | 0.62 | 6,280.00 | 1000.00 | M09/C10 |
| 03 | கலட்டிமுந்தல் குறுக்கு வீதி, கொக்குவில். | 0..39 | 3,950.00 | 1000.00 | M10/C10 |
| 04 | கலட்டிவீதி 1, 2 மற்றும் இடது பக்க ஒழுங்கை, கோண்டாவில் | 1.64 | 16,430.00 | 1000.00 | M08/C09 |
| 05 | பிரம்படி வீதி தொடர் வேலை, கொக்குவில் | 0.77 | 7,720.00 | 1000.00 | M09/C10 |
| 06 | பலாலிவீதி 4ஆம் குறுக்கு ஒழுங்கை, திருநெல்வேலி | 0.70 | 7,050.00 | 1000.00 | M09/C10 |
| 07 | ஐயனார் கோயில் வீதி,கொக்குவில். | 0.77 | 7,700.00 | 1000.00 | M09/C10 |

செயலாளர்
நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்
15.03.2016

(C/29820)(10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 15
யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் தென்றல் அணியை எதிர்த்து உடுவில் ஆலடிசிந்து 'பி' அணி மோதவுள்ளது. (ம-23)

## வென்றது சாந்தை

யாழ்ப்பாணம், மார்ச் 15
யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் சாந்தை அணி வெற்றிபெற்றுள்ளது.

ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் நேற்றுமுன்தினம் ஞயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சாந்தை அணியை எதிர்த்து தாவடி காளி அம்பாள் 'பி' அணி மோதிக்கொண்டது.

இதில் சாந்தை அணி 12:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# இடைக்காடு ம.வி., சோமஸ்கந்தா அணிகள் கிண்ணம் வென்றன கோப்பாய் வலைப்பந்தில்

மாங்குளம், மார்ச் 15
கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடர்களில் 15 வயதுப் பிரிவிலும், 17 வயதுப் பிரிவிலும் இடைக்காடு மகா வித்தியாலய அணிகளும், 19 வயதுப்பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியும் கிண்ணங்களைக் கைப்பற்றின.


15 வயதுப் பிரிவு இடைக்காடு ம.வி. அணி

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இறுதியாட்டங்கள் நடைபெற்றன. 15 வயதினருக்கான பிரிவில் முதலாமிடத்தை இடைக்காடு மகா வித்தியாலய அணியும், இரண்டாமிடத்தை கரந்தன் இராமப்பிள்ளை வித்தியாலய அணியும், மூன்றாமிடத்தை உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியும் பெற்றன. 17வயதினருக்கான பிரிவில் முதலாமிடத்தை இடைக்காடு மகா வித்தியாலய அணியும், இரண்டாமிடத்தை அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை புத்தூர் சிறி சோமஸ்கந்தா கல்லூரி அணியும் பெற்றன. 19 வயதினருக் கான பிரிவில் முதலாமிடத்தை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியும் இரண்டாமிடத்தை ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணியும், மூன்றாமிடத்தை அத்தியார் இந்துக் கல்லூரி அணியும் பெற்றன. (ம-422-108)


19 வயதுப் பிரிவு சோமஸ்கந்தா அணி


17 வயதுப் பிரிவு சோமஸ்கந்தா அணி

## சம்பியனானது மகாதீபம்

யாழ்ப்பாணம், மார்ச் 15
கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் கிளிநொச்சி மகாதீபம் அணி சம்பியனானது. உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மகாதீபம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வட்டக்கச்சி குறிஞ்சி அணி மோதிக் கொண்டது. இதில் கிளிநொச்சி மகாதீபம் விளையாட்டுக்கழக அணி 24:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் சம்பியனானது. (ம-23)

## சம்பியனானது உழவர் ஒன்றியம் கரைச்சி பிரதேச கபடித்தொடரில்

யாழ்ப்பாணம், மார்ச் 15
கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கபடித் தொடரில் இரு பிரிவிலும் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணி சம்பியனானது.

கனகபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வட்டக்கச்சி குறிஞ்சி அணி மோதிக் கொண்டது. இதில் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணி 33:29 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மகாதேவா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணி 37:18 என்ற புள்ளிகளின் அடிப் படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ம-23)

# விக்ரோறியாவிடம் இருந்து கைமாறியது கிண்ணம் பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை சம்பியனானது



மாங்குளம், மார்ச் 15
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் கடந்த ஆண்டுகளில் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்த விக்ரோறியா கல்லூரியை வீழ்த்தி நடப்பு வருடத்தின் சம்பியனானது பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இதில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரியை எதிர்த்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியா கல்லூரி அணி, நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 37 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக செல்வரஜனி 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பவதாரணி, அபிராமி, கிருஸ்சிகா மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை அணி 4.5 பந்துப் பரிமாற்றங்களில் இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக நிரோசிகா 12 ஓட்டங்களையும், கலையரசி, நிசாலினி இருவரும் தலா 6 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் விக்ரோறியா கல்லூரி அணியின் சார்பாக தேனுஜா 2 இலக்குகளையும், செல்வரஜனி, இந்துஜா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். 3ஆம் இடத்தை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி தனதாக்கியது. (ம-422)

## கழுகுகளின் கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 15
பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் நடப்பு வருடத்தின் 'வடமாகாண வல்லவன்' வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. மேற்படி தொடரில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் தமது விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளயாட்டுக் கழகத்தின் தலைவரிடம் சமர்ப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-23-108)

## விளைபூமியிடம் கிண்ணம்

யாழ்ப்பாணம், மார்ச் 15
கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் விளைபூமி விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

விளைபூமி விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளைபூமி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் விளைபூமி விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி மகளிர், பருத்தித்துறை மெதடிஸ் அணிகள் கிண்ணம் வென்றன; வடமராட்சி வலைப்பந்தாட்டத்தில்

கரணவாய், மார்ச் 15
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் 15 வயதுப் பிரிவில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியும் 17 வயது மற்றும் 19 வயதுப்பிரிவுகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் வெற்றிபெற்று இந்த வருடத்தின் சம்பியனாகின.

**15 வயதுப்பிரிவினருக்கான தொடர்**

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை குறித்த தொடர்கள் இடம்பெற்றன. முதலில் இடம் பெற்ற 15 வயதுப்பிரிவினருக் கான இறுதியாட்டத்தில் பருத்தித் துறை வடஇந்து மகளிர் கல்லூரியும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியும் பலப் பரீட்சை நடத்தின. இதில் மத்திய மகளிர் கல்லூரி 9:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று வலயச் சம்பியனாகியது. இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை பெற்றது.

**17 வயதுப் பிரிவினருக்கான தொடர்**

தொடர்ந்து இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் வட இந்து மகளிர்கல்லூரி அணியும் மோதின. ஆரம்பத்தில் இரு அணியினரும் சமபலத்துடன் மோதிய போதும் இடைவேளைக்குப் பின்னர் ஆக்ரோசத்துடன் விளையாடிய மெதடிஸ்த அணி 20:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று வலயச் சம்பியனாகியது. இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி பெற்றது.

**19 வயதுப் பிரிவினருக்கான தொடர்**

19 வயதுப் பரிவினருக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் வட இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதின. இதில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 20:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனாகியது. மூன்றாமிடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பெற்றது. ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற அணிகள் மாகாண மட்டத்தில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-108)


வடமராட்சி மத்திய மகளிர் 15 வயது பிரிவு அணி


மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் 17 வயதுப் பிரிவு அணி


மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் 19 வயதுப் பிரிவு அணி

# கிண்ணங்களை வழித்துத் துடைத்தன நண்பர்கள் விளையாட்டுக்கழக அணிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 15
பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடரில் இரு பிரிவிலும் ஜெயபுரம் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணிகள் சம்பியனாகின. ஜெயபுரம் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டங்களில் முதலாவதாக இடம் பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் ஜெயபுரம் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் ஜெயபுரம் நண்பர்கள் விளை யாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.
தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் ஜெயபுரம் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செவ்வானம் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ம-23)

# சம்பியனானது 786

786 விளையாட்டுக்கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் அந்த அணியே சம்பியனானது. வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில்நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் 786 அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதிக்கொண்டது. எந்தவித கோல்களையும் பெறாததினால் சமநிலைத் தவிர்ப்பு உதை களில் கிண்ணம் தீர்மானமாகும் நிலை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பில் 4:3 என்ற கோல் கணக்கில் கிண்ணம்வென்றது 786 அணி. (ம-23)


யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற சர்வதேச மேசைப்பந்தாட்ட பயிற்றுநர் பரீட்சையில் சித்தியடைந்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 18 பயிற்றுனர்களுக்கு அண்மையில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் வைத்து இலங்கை மேசைப்பந்தாட்ட சங்கத்தின் பயிற்றுனர் மான்சில் முத்தலிபு மற்றும் சர்வதேச மேசைப்பந்தாட்டப்பயிற்றுனர் வி.எம். விக்கிரமசிங்க ஆகியோரால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ம-108)

# மன்னார் மெய்வன்மை

யாழ்ப்பாணம், மார்ச் 15
மன்னார் வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நாளை புதன்கிழமையும், நாளைமறுதினம் வியாழக்கிழமையும் முருங்கன் மகா வித்தியாலய மைதானத்தில் மன்னார் வலய கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்ரியன் தலைமையில் இடம்பெறவுள்ளது. ஆரம்ப நாள் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப்பணிப்பாளர் உதயகுமாரும், சிறப்பு விருந்தினராக வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

# மன்னாரின் சமரில் சில முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 15
மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவ்வாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழகமும் இணைந்து மின்னொளியில் நடத்திய மன்னாரின் சமர் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஜோசவ்வாஸ் நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள்:-
வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் அடம்பன் ஐக்கியம் அணியை எதிர்த்து சென்.மேரிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் அடம்பன் ஐக்கிய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பெரியகமம் எவர்கிறீன் அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென்.சேவியர் அணி மோதிக்கொண்டது. இதில் தேவன்பிட்டி சென்.சேவியர் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சாவற்காடு கில்லறி அணியை எதிர்த்து அச்சங்குளம் சென்.ஜோசப் அணி மோதிக் கொண்டது. இதில் சாவற்காடு கில்லறி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஞயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் சாந்திபுரம் குறோஸ்ரார் அணியை எதிர்த்து விடத்தல்தீவு ஐக்கியம் அணி மோதிக்கொண்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்ட இந்த ஆட்டத்தில் விடத்தல்தீவு ஐக்கியம் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஜோசவ்வாஸ் நகர் ஜோசவ்வாஸ் அணியை எதிர்த்து பள்ளிமுனை சென்.லூசியா அணி மோதிக்கொண்டது. இதில் பள்ளிமுனை சென்.லூசியா அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மூன்றாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் மருதம் அணியைஎதிர்த்து பணங்கட்டுக்கொட்டு சென். ஜோசப் அணி 9:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டம் இன்று ஆரம்பம்



ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் பிரதான ஆட்டங்கள் இந்தியாவில் இன்று ஆரம்பமாகின்றன. இன்று நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் இந்தியாவை எதிர்த்து நியூசிலாந்து பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

தகுதிகாண் ஆட்டங்களில் இருந்து ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் அணிகள் பிரதான சுற்றுக்களுக்குத் தகுதி பெற்றுள்ளன. இதன்படி முதலாவது குழுவில் இலங்கை, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளும் இரண்டாவது குழுவில் இந்தியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா மற்றும் பங்களாதேஷ் அணிகளும் இடம்பிடித்துள்ளன. இலங்கை அணி தனது முதலாவது ஆட்டத்தில் ஆப்கானிஸ்தானுடன் நாளை மறுதினம் மோதவுள்ளது. ஏனைய ஆட்டங்களில் மேற்கிந்தியத் தீவுகளை 20ஆம் திகதியும், இங்கிலாந்தை 26ஆம் திகதியும் தென்னாபிரிக்காவை 28ஆம் திகதியும் சந்திக்கவுள்ளது. (ம)

# பந்து பட்டுத்தெறிக்கும் சத்தத்தை வைத்து டோனியின் திறனை அறிந்து கொள்ளலாம்

*–சச்சின்*




இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனியை முன்னாள் ஜாம்பவான் சச்சின் பாராட்டிப் பேசியுள்ளார்.

ரி-20 உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவில் களைகட்டத் தொடங்கியுள்ளது. இதில் சொந்த மண்ணில் களமிறங்கும் டோனி தலைமையிலான இந்திய அணி வலுவான நிலையில் இருக்கிறது. சிறந்த பினிசரான டோனியும் நல்ல திறனில் இருப்பது அந்த அணிக்குச் சிறப்பானதாக அமைந்துள்ளது. ஆனால் ஆஸ்திரேலிய தொடருக்கு முன்னால் அவர் துடுப்பாட்டத்தில் சற்றுத் தடுமாறி வந்தார். இதனால் பலரும் அவரை விமர்சித்து வந்தனர். இந்த நிலையில் டோனிக்கு ஆதரவு தெரிவித்துள்ள முன்னாள் வீரர் சச்சின், அவரைப் பாராட்டியும் பேசியுள்ளார்.

டோனி தொடர்பாக சச்சின் தெரிவிக்கையில்:- எந்தவொரு வீரரும் தமது கிரிக்கெட் வாழ்க்கை முழுவதிலும் தொடர்ந்து திறனில் இருக்க முடியாது. அவர்கள் ஒன்றும் இயந்திரங்கள் இல்லை. டோனியின் துடுப்பாட்ட மட்டையைப் பந்து சந்திக்கும் போது கேட்கும் சத்தம் வித்தியாசமானது. அது போன்ற சத்தம் திறமையான வீரர்களைத் தனித்துக்காட்டும். அவர் எளிதாக நெருக்கடியைத் தாங்கிக் கொள்கிறார். இந்தக் குணம்தான் டோனியின் மிகப்பெரிய சொத்தாக உள்ளது. கடந்த பல வருடங்களில் அவர் நல்ல அனுபவம் பெற்றுள்ளார். பதற்றமான சூழ்நிலையில் கூட அதை வெளிக்காட்டாமல் அவர் செயற்படும் விதம் சிறப்பாக உள்ளது என்றார். மேலும், இந்தியா அரையிறுதிக்கு முன்னேறுவதில் ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்க அணிகள் பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் எனவும் தெரிவித்தார். (ம)

# பல்மாஸை பந்தாடியது ரியல் மட்ரிட்




லா லிகா தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்றுள்ளது.

ரியல் மட்ரிட், பல்மாஸ் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 2-1 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் அணி வெற்றிபெற்றது. ரியல் மட்ரிட் சார்பாக பெறப்பட்ட கோல்களை, ஆட்டத்தின் 24ஆவது நிமிடத்தில் அணித்தலைவர் சேர்ஜியோ ராமோஸும், 89ஆவது நிமிடத்தில் கஸேமிரோவும் பதிவு செய்தனர். இந்த வெற்றியுடன் 63 புள்ளிகளைப் பெற்றுள்ள ரியல் மட்ரிட், லா லிகா தொடரின் புள்ளிகள் தரவரிசையில் மூன்றாமிடத்தை வகிக்கின்றது. 67 புள்ளிகளுடன் அத்லெட்டிகோ மட்ரிட் இரண்டாமிடத்திலும் 75 புள்ளிகளுடன் பார்சிலோனா முதலிடத்திலும் உள்ளன. (ம)

# ரி-20 உலகக்கிண்ணத்தை வெல்ல இங்கிலாந்துக்கும் வாய்ப்புள்ளதாம்



ரி-20 உலகக் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்புள்ள அணிகளில் ஒன்றாக இங்கிலாந்து அணியைக் கருதுவதாக, ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரரான ஹசி தெரிவித்துள்ளார். உலகக்கிண்ணத் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் ஆலோசகராகச் செயற்படும் ஹசி, கிண்ணத்தை வெற்றி கொள்ளும் அணிகள் பற்றிய தனது கருத்தை வெளியிட்டார். இதன்படி கிண்ணத்தை வெல்வதற்கான அதிக வாய்ப்புள்ள அணிகளாக, இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், எனினும், கிண்ணத்தை வெல்லக் கூடிய மற்றொரு அணியாக இங்கிலாந்தைக் கருதுவதாகத் தெரிவித்தார்.

இங்கிலாந்து தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஹசி, இங்கிலாந்தாலும் கிண்ணத்தை வெல்ல முடியுமென நிச்சயமாக நான் நினைக்கிறேன். மிக அதிகமான திறமையும் திறனும் இங்கிலாந்துக்குழாமில் காணப்படுகின்றன. ரி-20 ஆட்டங்களுக்கு ஏற்ப இங்கிலாந்து தன்னை மாற்றியமைத்து விட்டது. பட்லர், மோர்கன், ஸ்ரோக்ஸ், ரூட், ஹேல்ஸ் போன்ற வீரர்களை அதிகம் நம்புகிறேன் என்றார். (ம)

# கோக்லியின் ரசிகைகளான பாகிஸ்தான் வீராங்கனைகள்





பாகிஸ்தான் மகளிர் அணியில் இந்திய வீரர் விராட் கோக்லிக்கு அதிக ரசிகைகள் இருப்பதாக அந்த அணியின் தலைவி சனா மிர் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் துணைத்தலைவர் விராட் கோக்லிக்கு உலகம் முழுவதும் ரசிகர்களும், ரசிகைகளும் அதிக அளவில் உள்ளனர். இந்த நிலையில் பாகிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணியில் உள்ள வீராங்கனைகளில் பாதிப் பேர் விராட் கோக்லியின் தீவிர ரசிகைகளாம். இந்த ரகசியத்தை அந்த அணியின் தலைவி சனா மிர் வெளியிட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக சனா மிர் தெரிவிக்கையில் எங்கள் அணியில் கோக்லி, டோனி பற்றி பேச்சு வராமல் இருக்காது. எனக்குத் தனிப்பட்ட முறையில் டோனியைப் பிடிக்கும். அவர் இந்திய அணியைச் சிறப்பாக வழி நடத்தி வருகிறார். அருமையான அணித்தலைவர். இளம் வீரர்களைக் கொண்ட அணியை அனுபவ அணியாகவும், சிறந்த அணியாகவும் மாற்றியுள்ளார். ஆனால் நான் என்னதான் டோனியைப் பற்றி பாராட்டி பேசினாலும், எங்கள் அணியில் கோக்லிக்குத் தான் அதிக ரசிகைகள் உள்ளனர் என்றார். (ம)




# பெண்கள் ரி-20 உலகக்கிண்ணமும் இந்தியாவில் இன்று ஆரம்பமாகிறது

ஆண்களுக்கான ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் ஆட்டங்கள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், பெண்களுக்கான ரி-20 உலகக்கிண்ணத் தொடரும் இன்று ஆரம்பமாகிறது.

பெண்களுக்கான தொடரில் ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், இங்கிலாந்து, இந்தியா, அயர்லாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இலங்கை, மேற்கிந்தியத்தீவுகள் ஆகிய அணிகள் பங்குபற்றுகின்றன. இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பெங்களூரில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ள முதலாவது ஆட்டத்தில் இந்திய அணியும் பங்களாதேஷ் அணியும் மோதவுள்ளன. டெல்லியில் இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை அணியும் நியூசிலாந்து அணியும் மோதவுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.